
ரூ. 1/50

தமிழ் நாட்டு வரலாறு

டாக்டர்: மு. ஆரோக்கியசாமி



சோழர் காலத்திய தமிழ்ப்பேரரசு

தமிழ்நாட்டு வரலாறு

டாக்டர். மு. ஆரோக்கியசாமி
வரலாற்றுச் சிறப்பு விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக் கழகம்

★

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

TAMIL NATTU VARALARU

(HISTORY OF TAMILNAD)

BY

M. AROKIASWAMI, M.A., PH.D.
READER IN INDIAN HISTORY
UNIVERSITY OF MADRAS

FIRST EDITION – NOVEMBER, 1958

Published under the Auspices of
The Southern Languages Book Trust

PAARI NILAYAM
59, BROADWAY :: MADRAS - 1

PRICE RS. 1-50

Printed at Neo Art Press, Madras-2

நூன்முகம்

டாக்டர் ஏ. எல். முதலியார்

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

மக்கள் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் சிறந்த நூல்களைத் தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்டு வெளியிட்டுள்ளது. அங்ஙனம் வெளியிட்டதால் அடைந்த அனுபவ அறிவின் துணைகொண்டு, இரண்டாம் வரிசை நூல்களைத் திராவிட மொழிகளில் வெளியிட முன்வந்துள்ளது. புத்தகங்கள் ஆய்ந்து, படிப்போரின் சுவைக்கேற்ப, பொறுக்கப்பட்டுள்ளன. எனவே, வாழ்க்கையின் பல துறைகளைப் பற்றிய வெவ்வேறு பொருட்களைப் புத்தக டிரஸ்டு தேர்ந்தது வியப்பன்று. இந்தியாவின் சிறந்த தலைவர்களின் வாழ்க்கையையும், அவர்களின் வினைத்திறனையும் விளக்கும் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் அடிப்படை உரிமைக்காகப் போராடிய, நாட்டின் பெருமையையும் ஆற்றலையும் வளப்படுத்திய அன்னாருக்கு வருங்கால மாந்தர் எத்துணைக் கடன்பட்டுள்ளனர் என்பதை அறிதல் நலமன்றோ ?

தத்துவம், சமயம், விஞ்ஞானம், காவியங்கள் பொருளாதாரம் ஆகியனவும் இவ்வரிசையில் இடம்பெற்றுள்ளன. சிறுகதைகளும் இதனகத்துண்டு. பழங்கலைகள் பரவுவதற்கும் வாய்ப்புத் தரப்பட்டுள்ளது. அழியாச் சிறப்புள்ள வரலாற்றுக் கலைகள், சிற்ப நூல்கள், தொல்பொருள் ஆராய்ச்சிகள், தென்னிந்தியக் கோவில்களின் விளக்கம் ஆகியனவும் கையாளப்பட்டுள்ளன. இவ்வரிசைகள் ஆர்வமூட்டும் பல்வேறு பொருள் வகைகளை மக்களுக்கு வழங்கும்; பொது அறிவு நூல்கள் என்ற முறையில் இவ் வெளியீடுகள் படிப்போரின் எண்ணிக்கையைப் பெருக்கும் என்பது திண்ணம்.

ஒரு தென்னிந்திய மொழியினின்று மற்றொரு மொழியில் நூலாக்கும் திட்டம் போற்றுதற்குரியது. இவ் வரிசை முற்றுப்பெறும்போது, எழுத்தறிவுடைய மக்களின் படிப்பு ஆர்வம் பெருகும்; அவர்களின் அறிவு வளரும்; தங்களது திறன் வன்மையுற நெறி துலங்கும். தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்டின் பணி நாளும் பெருகி, அது தோற்றுவிக்கப் பட்டதன் நோக்கமும் ஈடேறும் என நம்புகின்றேன்.

சென்னை
7 - 10 - 1958

ஏ. எல். முதலியார்
துணைவேந்தர்
சென்னைப் பல்கலைக் கழகம்

அணிந்துரை

கே. கே. பிள்ளை

வரலாறு புதைபொருள் ஆராய்ச்சித் துறைத்தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்

டாக்டர் மு. ஆரோக்கியசாமி அவர்கள் எழுதிய "தமிழ் நாட்டு வரலாறு" என்ற இந்நூலுக்கு அணிந்துரை வழங்கும் பேறு கிடைத்தமைக்கு யான் மகிழ்ச்சியடைகின்றேன், இந்நூல் தமிழர்களின் தொடக்ககால முதல் இக்காலம் வரையிலுள்ள வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கூறுகின்றது.

தமிழர்கள் இந்திய நாட்டின் நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் பலவிதங்களில் சிறப்புச் செய்தவர்கள். ஆயினும் இத்தகையவர்களின் வரலாறு இந்திய வரலாற்று நூல்களில் போதிய அளவுக்கு இன்னும் இடம்பெறவில்லை என்பது எல்லோரும் அறிந்ததே. டாக்டர். மு. ஆரோக்கியசாமி, தமிழர்களின் சமூக, பண்பாட்டு முன்னேற்றத்தை வலியுறுத்தியெழுதுவதில் தக்க கருத்துச் செலுத்தியுள்ளார். மக்களின் முன்னேற்றத்தைக் காட்டுவதற்குப் பின்னணியாக அமையும்படியாக அரசியல் நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன.

தமிழர்களின் வரலாற்றைப்பற்றி முடிந்தமுடிவான நூல் இன்னும் எழுதப்படவில்லை. சில விஷயங்களைப்பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருப்பது இயற்கை. குறிப்பாகத் தொடக்ககால வரலாற்றைப்பற்றி இன்னும் முடிவான கருத்து உருவாகவில்லை. ஆதலின் இந்நூலில் ஆசிரியர் கொண்டுள்ள எல்லா முடிவுகளையும் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், கருத்து வேற்றுமைகளைப் பற்றித் தெரிந்து கொள்வது முக்கியமாகும்.

வட்டார மொழிகளில் பொதுமக்களுக்கேற்ற நூல்களை எழுதுவதில் டாக்டர். மு. ஆரோக்கியசாமியைப் போன்ற பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஈடுபடுவது போற்றுவதற்குரியது. இனிய இந்நூலை தமிழர் பலரும் விரும்பிப் படிப்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

சென்னை
21 - 10 - 1958

கே. கே. பிள்ளை

முன்னுரை

தமிழ்நாட்டு வரலாறு இந்திய வரலாற்ருேடு இயைந்ததே. ஆயினும் தனிப்பட்ட ஒரு தமிழ்நாட்டு வரலாறும் வேண்டும். மொழி வழி இராச்சியங்கள் ஏற்பட்டுள்ள இக்காலத்தில், அத்தகைய வரலாறு மிக அவசியமானதென்றும் நாம் சொல்லலாம். நாட்டுக்கு ஒரு பொது வரலாறு இருக்கின்றது. ஆயினும் அதில் ஒவ்வொரு இராச்சியத்திற்கும் சிறப்பாக அமைந்துள்ள வரலாற்று நிகழ்ச்சிகள் விரிவாகக் காணப்படமாட்டா. ஒவ்வொரு இராச்சியத்திற்கும் ஒரு தனிப்பட்ட வரலாறு ஒன்று எழுதப்பட்டால்தான் இவைகளைச் சிறப்பாக எடுத்துக்காட்டக் கூடும். இக்காரணம் பற்றியே இந்நூல் எழுதப்பட்டது.

தமிழரின் பழங்கால வரலாறு, திராவிடர் வரலாறு, தமிழ் மொழியின் தோற்றம், மலர்ச்சி இன்ன பிறவும் தமிழ் நாட்டு வரலாற்றின் சிறப்புக் கூறுகள், இவைகளை இந்நூலில் காணலாம். இவைகளைப் பற்றிப் புதிதாக நான் ஒன்றும் கூறிவிடவில்லை. ஆயினும் அவ்வப்பொழுது தோன்றும் கருத்துக்கள், கருத்துவேறுபாடுகள் இவைகளை எல்லாம் ஆராய்ந்து இந்நூலில் முடிவுகண்டுள்ளேன். இதை ஆராய்ச்சி உலகம் ஒரு சிறிதேனும் ஒப்புக்கொள்ளுமாயின் இந்நூல் பெரும்பயன் அளிப்பதாகும்.

இந்நூல் தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்டாரின் அழைப்பிற்கிணங்க எழுதப்பட்டது. அவர்களுக்கு முதற்கண் என் நன்றி. நான் கூறியவற்றைக் கையெழுத்துப் பிரதியாக எழுதித் தந்த திரு. S. J. வின்சென்ட், குமாரி A. ஜூலியானு இவர்களுக்கும், இந்நூலைப் படித்து இதற்கு அணிந்துரை உதவிய சென்னைப் பல்கலைக்கழக இந்திய வரலாற்றுப் பேராசிரியர் உயர்திரு. டாக்டர். K. K. பிள்ளை அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி. இந்நூலை நல்லமுறையில் வெளியிட்டுதவிய பாரி நிலையத்தார்க்கும் என் நன்றி உரித்தாகுக.

கலைமகள் விழா
சென்னை
21—10—'58

மு. ஆ.

பொருளடக்கம்

தமிழ் நாட்டு வரலாறு

1. நாடும், பெயரும்

நாம் வாழும் பரதகண்டத்தின் தென்பகுதியில் இருப்பது தமிழ் நாடு. தமிழ் வழங்கும் பூமி தமிழ்நாடு எனப் பெயர் பெற்றது என்று கூறுவதே சாலவும் பொருத்தமாகும். இது, மற்ற நாடுகளில் வழங்கும் முறைக்கு நேர் மாறானதாகும். இங்கிலாந்து, பிரன்ஞ்சு போன்ற நாடுகளில் பேசும் மொழிகள் இங்கிலீஷ், பிரன்ஞ்சு என்று அவை வழங்கும் நாடுகளைக்கொண்டு பெயர் பெற்றன. ஆனால் தமிழ் நாடு என்ற பெயர் அங்கு வழங்கும் மொழியைப் பற்றியே பெயர் பெற்றது. ஆயினும் இது தமிழின் தொன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டே அன்றி எவ்வித முரண்பட்ட கருத்துக்கும் இடம் தருவதில்லை.

திராவிடம் என்ற சொல்லும் தமிழ் என்ற சொல்லின் திரிபே அன்றி வேறல்ல. கால்ட்வெல் போன்ற அறிஞர்கள் இதற்கும் நேர்மாறான கருத்துக் கொள்கிறார்களெனினும் திராவிட என்ற சொல்லில் இருந்து தமிழ் என்ற சொல் பிறந்தது என்று கூறுவது பொருத்தமானதன்று. இதை ஒத்துக்கொண்டாலும் திராவிடம் என்ற பெயரைத் தமிழுக்கு யார் வைத்தார்கள் என்பது தெரியவில்லை. நம் நாட்டோடு தொடர்புகொண்ட தமிழ் அறியாதார் அதற்கு இப் பெயரைச் சூட்டினார்கள் என்று சொன்னாலும், திராவிடம் என்ற சொல்லுக்கு முற்பட்டது தமிழ் என்பது இதனாலேயே பெறப்படுகிறது. ஆகவே, 'தமிழ்' என்ற இனியசொல் தமிழ் அறியார் நாவில் 'தமிளா'கி, பிறகு 'திரமிள்' ஆகி, அதன் பின் 'திரவிடம்' 'திராவிடம்' ஆகி இருக்க வேண்டும் என்று சொல்வதே பயனுடையதாம்.

இனி, தமிழ் என்ற பெயர் தமிழுக்கு எப்படி ஏற்பட்டது என்ற ஆராய்ச்சியை எடுத்துக்கொண்டால், அதற்குச் சுலபத்தில் முடிவு கூற முடியாது. யாழ்ப்பாண அறிஞர் ந. சி. கந்தையா பிள்ளை போன்றவர்கள், தமிழ் என்ற சொல் ஞாயிற்றுக் கடவுளைக் குறிக்கும் 'தாமுலம்' என்ற சுமேரியாச் சொல்லின் அடிப்படையில் பிறந்ததென்றும் தமிழ் மொழியே அஞ் ஞாயிற்றுக் கடவுள் மூலமே பிறந்ததென்றும், கூறுவர். இதனை நாம் ஆராய வேண்டிய அவசியமில்லை. தானாகவே பிற மொழிக் கலப்பின்றி எழுந்த மொழி என்பதை உணர்த்த தமிழுக்கு இப்பெயர் இடப்பட்டது என்று சிலர் கூறுவர். இதுவும் யாவர்க்கும் ஒப்பான முடிவல்ல. தமிழ் என்ற பதத்திற்கு 'இனிமை' என்ற பொருள் பழங்காலந்தொட்டே இருந்து வருகின்றது. 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்' என்பது பிங்கலம். இதை ஒட்டியே நாம் பேசும் மொழி பெயர்பெற்றதுபோலும். இனிதான தாய்மொழி தமிழ் என்றே அழைக்கப்பட்டது என்று கூறுவதே பொருத்த மாகத் தோன்றுகிறது.

தமிழ் நாடு 'தமிழகம்' என்றும் குறிக்கப்படுகிறது. இவ்விரு சொற்களிலும் முன்னையது இப்பொழுது பெரும் பாலும் வழக்கில் இருந்தபோதிலும் பின்னையதே முன்னை யதைக் காட்டிலும் பழமை வாய்ந்தது. பழம் தமிழ் நூல்கள் என்று நாம் சொல்லும் சங்கநூற்கள் பலவற்றில் தமிழகம் என்ற சொல்லாட்சி காணப்படுகிறது. 'வையக வரைப் பின் தமிழகம் கேட்ப' என்பது புறநானூறு; 'இமிழ்கடல் வரைப் பின் தமிழகம்' என்பது சிலப்பதிகாரம்; 'சம்புத் தீவினுள் தமிழக மருங்கின்' என்பது மணிமேகலை. இதுவே தமிழ் மொழியினின்றே தமிழ் அகம் (தமிழைத் தன்னகத்தே உடை யது), தமிழ் நாடு என்ற சொற்கள் பிறந்திருக்க வேண்டும் என்பதையும் காட்டி நிற்கின்றதல்லவா ?

தமிழ் நாட்டின் எல்லைகள் நம் பழம் நூலாகிய தொல் காப்பியத்திலேயே ஐயந்திரிபறக் கூறப்பட்டது. 'வடவேங் கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'

என்பது பனம்பாரனுர் எழுதிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் உள்ளது. ஆனல் இங்குக் கூறப்பட்ட 'தென் குமரி' இப்பொழுது நாம் வழங்கும் குமரி முனை (Cape Comorin) அல்ல என்பதற்குச் சான்றுகள் பல இருக்கின்றன. இப்போதைய குமரி எல்லைக்கும் தெற்கே 49 நாடுகள் இருந் தனவென்றும், அவை யாவும் கடல் கோள் காரணமாய் மறைந்தனவென்றும் சிலப்பதிகார ஆசிரியர், அதற்கு உரை கண்ட அடியார்க்கு நல்லார் இவர்கள் கூற்றல் தெரியக் கிடக் கின்றது. இதற்கு ஏற்ப புவியியல் ஆராய்ச்சியாளர் தற்போதையக் குமரி முனைக்குத் தெற்கே உள்ள கடல் பரப்பு முன்னர் நிலப் பரப்பாக இருந்ததென்றும், அது ஒருபுறம் ஆப்பிரிக்காக் கண்டத்தையும் மறுபுறம் கிழக்கு இந்தியத் தீவுகளையும் ஒன்று சேர்த்ததென்றும் கூறுகிறர்கள். சுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளில் ஒரு காலத்தில் தமிழ் மொழி பயின்று வந்தது என்பதற்கு அறிகுறிகளும் இருக்கின்றன என்று திரு. கந்தையா போன்ற அறிஞர்கள் கூறுகிறர்கள்.

இத்தகைய பெரும் நிலப்பரப்பு எப்பொழுது மறைந் தது என்று கூறுவது இயலாததொன்று. ஆயினும் தொல் காப்பியர் காலத்தில் தெற்கே குமரி ஆறு இருந்ததென்றும், புறநானூற்றின் காலத்தில் ப∴றுளி என்று ஒரு நதி தமிழ் நாட்டில் ஓடிற்றென்றும் நமக்குத் தெரிகின்றன. பிற்காலத்து இறையனர் அகப்பொருள் உரை முதலில் மதுரையும், பிறகு கபாடபுரமும் கடல் வாய் விழுந்தன என்று கூறுவதைப் பார்த்தால் இந் நிலப்பரப்பு பல கடற்கோள்கள் காரணத்தால் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்திருக்க வேண்டும் என்றே நாம் இப்பொழுது கொள்ளவேண்டும்.

இத்தகைய தமிழ் நாடு பழங்காலந்தொட்டுச் சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பிரிந்து ஆளப்பட்டு வந்தது. படைப்புக் காலந்தொட்டே இவர்கள் தமிழ் நாட்டை ஆண்டார் கள் என்று நச்சினர்க்கினியர் கூறுவதாலும், குமரி முனைக் குத் தெற்கே 49 நாடுகள் கடலிலே மூழ்கியபோது நிலந்தரு திருவிற் பாண்டியன் ஆட்சி செய்தான் என்று சிலப்பதி

காரம் கூறுவதாலும் இதை அறியலாம். தொண்டை நாடு, கொங்குநாடு என்ற இரு நாடுகள் முறையே சோழ சேர மன்னர்களின்கீழ் இருந்துவந்தன. இவை இரண்டும் தனி நாடுகளாகக் கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்தில் பிரிந்தன. ஏறக்குறைய கி. பி. இரண்டாம், மூன்றும் நூற்றுண்டு களில் இது நிகழ்ந்திருக்கவேண்டும். தொண்டைமான் இளந் திரையனைப் பற்றிப் பாடும் பெரும்பாணுற்றுப்படை இக் காலத்தில்தான் எழுந்தது; அதே சமயத்தில் கொங்கு நாட்டிலும் இரட்டர்கள் ஆட்சி புரியத் தொடங்கினர்கள். இப் பெரும் பிரிவுகளே அன்றி பழங்காலத்தில் தமிழ்நாடு தென் பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், மலாடு, புனல்நாடு என்ற பன் னிரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது வென்றும் சிலர் கூறுவர். தொல்காப்பியப் பாகுபாட்டின்படி இந் நிலப்பரப்பு குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்று ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டிருந்ததென்று கூறினும் பொருந்தும். இவ்வைந்து நிலங்களில் பாலை ஒழிந்த நான்கே தமிழ் நாட்டில் இருந்தன. இதுபற்றியே தமிழ் நூல்கள் இவ் வையகத்தையே 'நானிலம்' என்று குறிக்கின்றன என்றும் சிலர் கூறுவர். இன்னும் சிலர் தமிழ்நாடு என்பது பழங்காலத் தில் பாண்டி நாடு ஒன்றையே குறித்ததென்றும், பிற்பகுதிகள் பனம்பாரனர் கூற்றுப்படித் "தமிழ் கூறும் நல்லுலகம்" என்று பொதுவாகக் குறிக்கப்பட்டன என்றும் கூறுவர்,

இது எங்ஙனமாயினும் தொல்காப்பியத்திற்கு வழி நூலாக வந்த நன்னூல் சிறப்புப் பாயிரத்திலேயே 'குணகடல் குமரி குடகம் வேங்கடம்' என்று தமிழ்நாட்டு எல்லைகள் கூறப்படுவதால் சேரநாடு ஒழிந்த மற்ற நாடுகள் தமிழகம் என்று குறிக்கப்பட்டன. இப்போது ஆந்திர நாடு தனியாகப் பிரிந்த பின் வேங்கட எல்லையும் ஒழிந்தது. தற்காலத்திய தமிழ்நாடு தன் முற்காலத்து எல்லைகள் மிகச் சுருங்கி மைசூர் ஆந்திர நாடுகள் வடக்கெல்லையாக, வங்காளக் குடாக் கடலும் இந்துமகா சமுத்திரமும் கிழக்கு,

தெற்கு எல்லைகளாகக் கேரள நாடு மேற்கெல்லையாகச் சென்னையோடு பதின்மூன்று மாவட்டங்கள் கொண்டதாய் இருக்கின்றது. அதன் பரப்பு 50,170 சதுர மைல்.

2. தமிழின் தொன்மை

'தமிழ்' என்ற சொல்லே 'திராவிடம்' என்று மாறிற்று என்பது இப்பொழுது யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. 'திராவிடம்' என்ற சொல் பழங்காலத்துக் கால்டேய சாசனங்களில் இருக்கின்றன என்று ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். ஆகவே, கிறிஸ்துவுக்கு முன் சில ஆயிர வருஷங்களாகவேனும், தமிழ், வழக்கில் இருந்தது என்பது பெறப்படுகிறது. இதற்குச் சான்றாகவே சிந்துவெளிச் சாசனங்கள் கி. மு. 3000 ஆண்டு அளவில் தமிழ் மொழியின் ஒலிகளையேனும் படரூபமாக எழுதிக்காட்டுகின்றன. ஹெராஸ் (Heras), ப்லியோசாட் (Filliozat) போன்ற ஆராய்ச்சியாளர்கள், காண்(பார்), தாண்டவன் (ஆடுவோன்), அலர்(பூ) என்ற தூய தமிழ்ச்சொற்கள் போன்றவை இந்தச் சாசனங்களில் வருகின்றன என்று கூறுகின்றார்கள். இதைப்பற்றிப் பின்னர் கூறுவோம். இதுவன்றி இறையனார் அகப்பொருள் சங்க காலத்தைப்பற்றிக் கூறுவதை நாம் முழுவதும் ஒப்புக் கொள்ளா விட்டாலும், அந்நூலில் காணும் சங்ககால வரையறை (முதற்சங்கம் 4440 ஆண்டுகள் இருந்தது; இரண்டாம் சங்கம் 3700 ஆண்டுகள் இருந்தது என்பவை போன்றவை) தமிழ் மொழியின் தொன்மையை எடுத்துக்காட்டுவதாகும். இனிச் சங்ககால நூல்களிலேயே மறைந்த "பஃறுளி" என்று சிலப்பதிகாரம் பேசும் ஆற்றைப் புறநானூற்றுப் புலவர் ஒருவர் "பஃறுளி மணலினும் பலவே" என்று குறிக்கின்றார்.

இன்னும் கடலூழி காரணமாய் நிலம் மறைந்தபோது அதைக் கண்ணுற்ற நிலந்தருதிருவிற்பாண்டியன் பாடியதாக இரண்டு பாட்டுகள் குறுந்தொகையிலும், இரண்டு நற்றிணையிலும் காணக்கிடக்கின்றன. கௌதமனார் என்ற பழம் புலவர் அஸ்தினபுரி மன்னன் யுதிஷ்டிரனைப்பற்றிப் பாடு

கின்றூர். இவைகளும் தமிழின் தொன்மைக்குச் சான்று பகர்கின்றன. வழிவழிவந்த தமிழ் மரபின் தொன்மையும் இதற்கு ஒத்து இருக்கின்றது. தமிழ்க் குடியின்பழமை யைப் பற்றி "கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்தகுடி" என்று ஐயனரிதனர் பாடினரன்றோ ?

3. திராவிடர்கள் யார் ?

தமிழ் நாட்டில் தொன்றுதொட்டே வாழ்ந்து வருபவர் கள் திராவிடர் என்று பொதுவாகப் பேசப்படுகிறது. திராவிடர் தமிழ் நாட்டில் வரலாற்றுக் காலத்திலிருந்து, வாழ்ந்து வருகின்றனர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை; ஆனல் அவர்கள் எக்காலந் தொட்டு இங்கு வாழ்கிருர்கள் என்பதைப் பற்றிய ஆராய்ச்சி இன்றும் முடிந்த முடிவுக்கு வரவில்லை. சிலர், இவர்கள் தென்னுட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்தவர்கள் என்று கூறுகிருர்கள். சிலர் இவர் வேற்று நாட்டிலிருந்து இந்தியா வுக்கு வந்தவர்கள் என்று எண்ணுகின்றனர்.

இவ்வித முரண்பாடுகளிடையே திராவிடர்களின் பழங் கால வரலாற்றைப்பற்றி நாம் எதுவும் உறுதியாய்க்கூற முடி யாது ஆயினும் ஒன்றுமட்டும் நாம் உறுதியாய்க்கூறமுடியும். மனிதன் தோன்றிய நாளிலிருந்து இவர்களே இந்தியாவில் வாழ்கிருர்கள் என்று நாம் கூறுவது மிகைபடக் கூறுவதாகும். இவ்வுலகின்கண் முதல் முதல் தோன்றிய மனிதன் முதல் முதல் செய்த வேலை, ஊர் ஊராகவும், நாடு நாடாகவும் சுற்றித்திரிந்ததேயாகும். இதையே நாம் நாடோடிகள் வேலை என்று வழங்குகின்ருேம். நாடுவிட்டு நாடோடுதல் என்பது இன்று குறைத்துக் கூறப்படினும், இது பண்டையில் இயற் கையோடு இயைந்த வளர்ச்சியைக் குறிக்கின்றது. முளைத் தெழுந்துவரும் சிறு செடி எப்படி இயற்கையாகக் கொழு கொம்பு ஒன்றை நாடி அடைகின்றதோ அங்ஙனமே ஆதி மனிதன் வளமிகுந்த இடத்தை நாடி அலைந்தான். தட்பவெப்ப

நிலை மாறுதல், இயற்கை வளக்குறைவு, மக்கட்பெருக்கம் போன்ற பல்வேறு காரணங்களால் மனிதன் இடம் விட்டு இடம் மாறினன்.

இ:.து இவ்வாறுக, திராவிடர் உலகம் தோன்றிய நாள் முதல் தமிழ் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் என்பது சரியன்று. எனினும் சுமார் கி.மு. 3,000-திலிருந்து திராவிடர் இந்தியா முழுமையும் தம் நாடாகச் செய்துகொண்டனர் என்பதில் ஐயமில்லை. ஒரு நாட்டின் வரலாற்றுக் காலத்தை, வரலாற்று முற்காலம், வரலாற்றுக்காலம் என்று இரு பகுதி களாகப் பிரிப்பதுண்டு. வரலாற்று முற்காலம் என்பது சான்றுகொண்டு காட்ட முடியாதது. வரலாற்றுக் காலம் சான்றுகொண்டு காட்டக்கூடியது. புவியியலாளர்கள், (Geologist) வரலாற்றுக்கு முற்பட்டகாலத்தைப் பழங்கற் காலம், கற்காலம், புதுக்கற்காலம், செம்புக்காலம், இரும்புக் காலம் என்றெல்லாம் பிரிக்கின்றூர்கள். இவற்றில் கற் காலமெனப்படுவது கி. மு. 35,000 முதல் கி. மு. 10,000 வரையில் என்றும், புதுக்கற்காலம் கி. மு. 10,000 முதல் கி. மு. 5,000-ம் வரையில் என்றும் மதிப்பிடு கின்றனர். புதுக்கற்காலச் சின்னங்கள் தென்னிந்தியா வில் சேலம், மைசூர், குடகு, பெல்லாரி, அனந்தப்பூர், கர்நூல், ஐதராபாது முதலிய பல இடங்களில் மிகுதியாக அகப்படுவதால் கி. மு. 5,000-க்கு முன்னமே மக்கள் பலர் தென்னுட்டில் வாழ்ந்து வந்தனர் என்பது பெறப்படுகிறது. அவ்வாறு வாழ்ந்து வந்தவர்கள் திராவிடர்களா அல்லது வேறு இனத்தவரா என்பதைப்பற்றி நாம் உறுதியாய்க் கூற இயலாதெனினும் கி. மு. 3.000 அளவில் அவர்கள் இந்தியாவில் வாழ்ந்தார்கள் என்பதை சிந்து சமவெளி நாகரிகம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. நிற்க; கி.மு. 1000ல் பாலஸ்தீன் நாட்டில் அரசாண்ட சாலமன் மன்னன் தென்னுட் டோடு வணிகஉறவு கொண்டிருந்தான் என்று விவிலிய நூல், அரசர் பகுதி, கூறுவது திராவிடரையே குறிக்கும் என்பதில் ஐயமில்லை. மற்றும் சங்க நூல்கள் உரைக்கும் கடல் கடந்த

வாணிகம் மிக வளர்ச்சியடைந்த வாணிகமாகும். கிரேக்கரும், ரோமரும், பாபிலோன், பாரசீகம் வழியாக நம் நாட்டை அடைந்த காலத்தில் நம் தென்னாட்டார் மரக்கலங்களில் அந் நாடுகளை அடைந்தார்களென்றால் திராவிட வாணிகம் நீண்டகாலத்திற்கு முன்னரே தொடங்கியிருக்கும் என்பது சொல்லாமலே விளங்குமல்லவா ?

சிந்து வெளி நாகரிகம் திராவிடர்க்கும் முற்பட்ட நாகரிகம் என்று சிலர் சொல்லுகிறார்கள். மற்றும் சிலர் அது திராவிட நாகரிகத்தோடு இயைந்தது (Proto-Dravidian), ஆனால் திராவிட நாகரிகம் அல்ல என்று சொல்லுகிறார்கள். இதைக் கூர்ந்து கவனித்து நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். திராவிடருடைய மறுக்கமுடியாத வாழ்க்கைச் சின்னங்கள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூரில் பல ஆண்டுகளுக்கு முன் ப்ரூஸ்வுட் (Bruce- Foote) என்ற ஆங்கிலப் புதைபொருள் ஆராய்ச்சியாளரால் சவக்குழி களில் தோண்டி எடுக்கப்பட்டன. இங்கே கண்ட பொன்னு லான வாய்மூடிகள் போன்றவை, பாலஸ்தீனம், சைப்பிரஸ் முதலிய பிரதேசங்களிலும் கிடைத்திருக்கின்றன. இவற்றை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் இவற்றின் காலத்தை கி.மு. 2000 முதல் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகவே தமிழ் நாட்டின் தென்கோடி வரை கி. மு. 2000-ல் திராவிடர்கள் பரவியிருந்தார்கள் என்பது பெறப்பட்டது. இன்றைக்குச் சுமார் 4000-ம் வருஷங்களுக்குமுன் அங்கே திராவிடர் பயிர்த்தொழில் செய்துவந்தார்கள். நெல் விதைத்தார்கள், அரிசியைச் சமைத்தார்கள் என்பதும் மேற்குறித்த ஆதிச்ச நல்லூர்ச் சவக்குழிகளில் வைக்கப்பட்டிருக்கும் அரிசி, உமி, முதலியவற்றால் தெரிகின்றது. கி. மு. 2000 அளவில் திராவிடர் இத்தகைய நாகரிகம் உடையவர்களா யிருந்திருந் தால் கி.மு. 3000-ல் அவர்கள்தான் சிந்து வெளிப்பிரதேசத் தில் இன்று நாம் அங்குக் காணக்கிடக்கும் நாகரிகச் சின்னங் களை உருவாக்கியிருக்கவேண்டும் என்று கூறுவதில் எவ்வித ஐயப்பாடும் இருக்கவேண்டியதில்லை. சிந்து வெளியில்

அகழ்ந்து எடுக்கப்பட்ட நாகரிகம் பொதுவில் கி. மு. 3000 அளவில் ஏற்பட்டது என்று நாம் கூறினலும் அறிஞர்கள் அதன் கால அளவை கி. மு. 3000 முதல் 2600 வரை இருக்குமென்றே கணக்கிட்டிருக்கிருர்கள். சானுதாரோ என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஹாரப்பா காலத்திய மண்டை ஓடுகள் பெரிதும் திராவிட மொழி பேசுவோருடைய மண்டை ஓடுகளையே ஒத்திருக்கின்றன என்று தென்னிந்திய வரலாற்று நிபுணர் கே. ஏ. என். சாஸ்திரி அவர்களும் கூறுகின்ருர்கள்.

நிற்க, சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் நாம் காணக்கிடக்கும் சாசனங்கள், உருவங்கள் போன்றவை பிற்காலத்தில் நாம் காணும் திராவிட நாகரிகத்தையே சுட்டிக்காட்டுகின்றன. திருமூர்த்தி, பசுபதீசுவரர், திரிசூலம் போன்ற உருவங்களை இங்கு நாம் பரக்கக் காண்கின்ருேம். இது மட்டுமல்ல; திருமூர்த்தி, பசுபதீசுவர உருவங்கள் அரச முத்திரைகளிலே காணப்படுகின்றன. பிற்காலத்தில் பாண்டியர் தங்கள் சின்னமாகப் போற்றிய மீன் உருவம் இந்தப் பள்ளத்தாக்கிலே தோண்டி எடுக்கப்பட்ட புதை பொருள்கள் பலவற்றில் காணப்படுகிறது. இவைகளெல்லாம் சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என்பதை ஆணித்தரமாக மெய்ப்பிப்பவையாகும். இங்குள்ள சாசனங்களைப் படிக்க முற்பட்ட தமிழ் அறியா அறிஞரும் பெரிதும் தமிழ் ஒலிகளையே கேட்கின்றனர். இதைப் பற்றி முன்னரே குறித்தோம்.

சிந்து வெளியில் நாம் காணும் மொழி உலகத்தில் முதற்கண் தோன்றிய மொழிகளில் ஒன்று என்பது வெளிப்படை. சிந்துவெளி எழுத்துகளுக்கும் மேற்கு ஆசியநாடுகளாகிய சுமேரியா, எல்லம், மினேஆ, ஹிட்டைட் முதலிய நாட்டு எழுத்துகளுக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு என்பதை சர். மார்ஷல் போன்ற பெரும் ஆராய்ச்சியாளர் கண்டிருக்கின்ருர்கள். இவை உண்மையாயின் திராவிடர் எத்தகைய பழமை வாய்ந்தவர்கள் என்பது சொல்லாமல் பெறப்படும், சுமேரியா, எகிப்து, பாபிலோன் போன்ற மத்திய கிழக்கு

நாடுகளின் பழங்கால நாகரிகத்திற்கும், சீனுவின் பழங்கால நாகரிகத்திற்கும் திராவிட நாகரிகத்திற்கும் மிகுந்த ஒற்றுமை உண்டு என்று அறிஞர் சொல்வதும் இதையே உறுதிப் படுத்துகிறது.

இவர்கள் எங்கிருந்து இந்தியாவினுள் நுழைந்தார்கள் என்பதை மட்டும் நாம் அறுதியிட்டுக் கூறமுடியாது. சிலர் இவர்கள் மத்திய கிழக்குப் பிரதேச வழியாய் வடமேற்கு இந்தியாவில் நுழைந்தார்கள் என்பர்; சிலர் இவர்கள் தென் கிழக்காக இந்தியாவினுள் நுழைந்தார்கள் என்பர். இதைப் பற்றி ஆராய்ச்சி இன்னும் முடிந்த முடிவுக்கு வரவில்லை. இஃது இவ்வாறுக, புவியியலாரும், வரலாற்று ஆசிரியர்களும் ஒருங்கே கூறும் பிறிதொரு செய்தியையும் இங்குக் குறிக்க வேண்டும். வெகுகாலத்துக்கு முன்பு இந்தியா, கிழக் கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா முதலிய நாடு கள் யாவும் 'லெமூரியா' என்ற ஒரே நிலப்பரப்பாக இருந்தன வென்றும், சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இதன் பெரும் பாகம் கடலுள் மறைய, இந்தியா, ஆப்பிரிக்கா, கிழக்கிந்தியத் தீவுகள் என்பன தனித்தனி நாடுகளாகப் பிரிந்தன வென்றும் இவர்கள் கூறுகிருர்கள். இஃது உண்மையாயின், திராவிடர் மத்திய தரைக்கடல் பிரதேசத்தினின்று மத்திய கிழக்கு நாடு கள் வழியே இந்தியாவினுள் நுழைந்திருக்க வேண்டும் என்பது ஒருவாறு பெறப்படுகிறது. இதை மெய்ப்பிக் கும் சின்னங்கள் பலவற்றை மத்திய கிழக்குப் பிரதேசத்தில் உள்ள பாபிலோன், சுமேரியா, பாலஸ்தீன் பகுதிகளில் நாம் காண்கின்ருேம்.

4. ஆரியர் வந்தார்கள்

ஆரியர் கி. மு. 2000ல் இந்தியாவுக்கு வந்தனர் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். எனவே இதற்குக் குறைந்தது 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து வெளி நாகரிகம் ஆரிய நாகரிகமல்ல என்பது வெளிப்படை. சிலர் சிந்து வெளியில் காணப்படும் சில சின்னங்களையும்,

சாசனங்களையும் கொண்டு சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகம் என்று கூறுவது ஒப்புக்கொள்ளக் கூடியதன்று. டாக்டர் ஆர்.ஜி. பண்டார்கார் என்ற வடமொழி வல்லுநர் "தக்காணத்தின் பழங்கால வரலாறு" என்ற தமது விழுமிய நூலில் கூறுவது போல், ஆரிய மக்கள் புதுக்கற்கால நாகரிகத்தை அறிந்தவர்கள் அல்லர். ஆகவே அவர்களின் எழுச்சி கி.மு. 3,000க்கும் பிற்பட்டதேயாகும். சான்ருகக் கூறுமிடத்து சிந்துவெளியில் ஹாரப்பா, மொகன்சதாரோ என்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கடவுள் உருவங்கள் ரிக்வேத காலத்தின் மதக் கொள்கைகளை மெய்ப்பிப்பதாயில்லை. வேதகால ஆரியர் இயற்கைத் தெய்வங்களையே பெரிதும் வழிபட்டார்களென்பது யாவரும் அறிந்த உண்மை.

இதுமட்டுமன்று. ஆரியர் தென்னுடு போந்தகாலம் கி.மு. 600-க்கு முற்பட்டதன்று என்பது இப்போது யாவராலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது. ஆயினும் ஆரியரின் தென்னுட்டுக் குடியேற்றம் ஏறக்குறைய கி. மு. 1000-ல் தொடங்கி கி.மு. 600-ல் ஒருவாறு முற்றுப்பெற்றது என்பாரும் உளர். ஆனல் பானினி எழுதிய வடமொழி இலக்கணத்திற்கு விருத்தி (விரிவுரை) எழுதிய காத்தியாயனர் என்பவர், கி. மு. 4-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர். தமிழ்நாட்டைப் பற்றி ஒருவாறு நன்கு தெரிந்த வடநாட்டு ஆசிரியர்களில் முதல்வர் இவரே என்ருல், வடநாட்டுத் தொடர்பு தென்னுட்டிற்கு கி.மு.1000க்குப் பின்னரே நேர்ந்திருக்கவேண்டும். நமது சோழ, பாண்டிய மன்னர்களைப்பற்றி ஒரு சிறிதாவது தெரிந்திருந்த வடநாட்டு முதல்வர் இவரே. இவருக்கும் தென்னுட்டைப் பற்றி மிகுதியாக தெரிந்திருக்கவில்லையென்ருல், ஆரியர் கி. மு. 1,000க்கு முன்பே தென்னுட்டில் புகுந்தனர் எனக் கூறுவது உண்மையாகுமா? ஆகாது. கங்கூலி, லோகன் போன்ற சிறந்த வரலாற்ருசிரியர்களும் ஆரியரின் தென்னுட்டுச் செலவு கி. மு. 600-ல் தான் தொடங்கியது என்றே கூறுகின்றனர். கி. மு. 1000க்கும் 600க்கும் இடையில் எழுதப்பட்ட பிராமண நூல்களும் தென்னுட்டைப்பற்றி அதிகமாக ஒன்றும்

கூறுவதில்லை. எடுத்துக்காட்டாக, அயித்திரிய பிராமணம் என்ற நூல் பழிக்காளானவர்கள் தென்னாட்டுக்குத் துரத்தப் பட்டனர் என்றுமட்டும் குறிக்கின்றது.

5. ஆரியர் நாகரிகம்

இவ்விதமாக தென்னாடு நுழைந்த ஆரியர் திராவிட ரோடு கலந்தார்கள். அவர்களின் கலப்பின் காரணமாய் தென்னாட்டு நாகரிகம் பல மாறுதல்களை அடைந்தது. இதன் தன்மையை நாம் நன்கு உணர வேண்டுமானால் முதலில் ஆரியர் நாகரிகம் எப்படிப்பட்டது என்பதை உணர வேண்டும்.

ஜெர்மனி, போலந்து ஆகிய நாடுகளில் பலகாலம் வாழ்ந்து கடைசியாய்ப் பாபிலோன், பாரசீகம் முதலிய நாடுகளின் வழியாக இந்தியாவில் நுழைந்தவர்களே ஆரியர் கள். இவர்கள் நம் நாட்டின் எல்லையை மிதித்த காலம் ஏறக்குறைய கி. மு. 2000-ம் என்று கற்றோர் கூறுவர். ஆரியர்கள் மேற்கூறிய நாடுகளில் வெகுகாலம் தங்கினர் என்பது மட்டுமன்று; அவர்களில் பலர் ஒவ்வொரு நாட்டி லும் அப்படி அப்படியே தங்கிவிட்டனர். ஆகவே நாம் இப்போது மேனாட்டார் என்று கூறும் ஐரோப்பியரும் ஆரியர் வழிவந்தவர்களே. இவ்விதமாய், ஐரோப்பிய நாகரி கத்திற்கு முதல்வர்களாய் இருந்த இந்த ஆரியர்களின் ஒரு பகுதியினரே இந்தியாவினுள்ளும் நுழைந்தார்கள். எனவே மேல்நாடு கீழ்நாடு என்று இருகூறுகப் பிரித்துப் பேசப்படும் இரு பகுதிகளுக்கும் பழங்காலந்தொட்டே ஒரு நெருங்கிய தொடர்பை இந்த ஆரியர்கள் ஏற்படுத்தினர்கள் என்பது கண்கூடு. ஆயினும் இந்திய நாகரிகமும் பண்பாடும், ஐரோப்பிய நாகரிகமும் பண்பாடும் எப்போதும் ஒன்றுக் கொன்று வேறுபட்டவையாகவே இருந்து வருகின்றன. இதற்குக் காரணம் இந்தியாவினுள் நுழைந்த ஆரியர், இந் நாட்டினுள் நுழைவதற்குமுன் வெகுகாலம் பாரசீக

நாட்டில் குடியேறி வாழ்ந்துவந்தமையே. இது பெரும்பாலும் உண்மையென்று இப்போது யாவராலும் ஒப்புக்கொள்ளப் படுகிறது. ஆரியர்கள் தந்த வேதங்களில் காலத்தால் முந்தியவை பாரசீக மொழி தெரிந்தவர்களுக்கே நன்கு விளங்குகின்றன. பிறகுதான் பிராகிருதம் முதலிய மொழிகளை ஆரியர்கள் வகுத்தார்கள்.

இந்தியாவினுள் நுழைந்த ஆரியரும் சரி, மற்ற நாடுகளில் தங்கிய ஆரியரும் சரி, எங்கும் கூட்டம் கூட்டமாகவே சென்றனர்; தங்கினர்; வாழ்ந்தனர். இதனால் இவர்களுள் இனப்பற்று ஏற்பட்டது. ஆனால் ஆரியர்கள் காட்டிய இனப்பற்று பரந்த பற்றாகத் திகழவில்லை. முன்பின் காணாத நாட்டிலே வழி நடக்கும் ஒருவன் தனக்கு உற்றதுணை ஒன்றைத் தேடுவதுபோல் ஆரியர்கள் பலரைத் துணைக் கொண்டார்கள். ஆனால் தங்கள் நம்பிக்கைக்கு ஏற்றவர்களாயிருக்கும் பொருட்டு இவர்களை உறவினர்களாகவே பார்த்து எடுத்துக்கொண்டார்கள். சில சமயம் நெருங்கிய உறவினர், சில சமயம் தூரப்பந்துக்கள், சில சமயம் தங்களுக்கு எவ்வழியோ சொந்தமானவர்கள் இப்படிப் பலதிறப் பட்டவர்களாய் இவர்கள் இருந்திருக்கலாம். இவ்விதமாகவே குலம், சாதி, கிராமம் என்ற பாகுபாடுகள் ஆரியர் நாகரிகத்தில் முதலிடம் பெறலாயின.

ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்கள் பழக்க வழக்கங்கள், உண்ணும் முறைகள் வழிபாட்டு முறைகள் என்பனவற்றைத் தம் போக்குக்கு ஏற்ற வண்ணம் அமைத்துக்கொண்டனர். இவ்விதமாய் ஒழுங்குகள் எழுந்தன. ஒழுங்குகளைப் பின்பற்றி எழுந்தன அரசு, போர், இன்ன பிறவும். இங்ஙனம் எழுந்தவற்றில் முதன்மையாய்க் கூறத்தக்கவை புரோகிதம், சேனானி (சேனைத்தலைவன்), சமிதி, சபை முதலியவையாகும். காலக்கிரமத்தில் இவை யாவும் வாழ்க்கைக்கு அவசியமாய் அமைந்தன; இவற்றிற்குரியவர்களும் வாழையடி வாழையாய் வரத்தொடங்கினார்கள். நாளடைவில், பிராமணர் (புரோகிதர்), சத்திரியர் (சேனானிகள்), வைசியர், சூத்திரர் என்ற சாதிகள்

ஆரியரிடையே எழுந்ததில் வியப்பில்லை. 'விஸ்' என்ற சொல் வேதங்களில் 'குலம்' என்ற பொருளில் வருகின்றதென்ருலும், அது பாமரமக்களையே குறிக்கும் சொல்லாயிற்று. அன்ருட வாழ்க்கைக்கு அவசியமாயிருந்த இந்தப் பாமரமக்கள், நாளடைவில் வைசியர்கள் ஆனுர்கள். சூத்திரர் என்ற சொல் 'பரிதாபத்திற்குரியவர்கள்' என்ற பொருள் பெறும். பொதுவில் கூறுமிடத்து இவர்களைத்தான் வேதங்கள் 'தாசியூக்கள்' என்று கூறுகின்றன. ஆயினும் 'தாசியூக்கள், என்ற சொல் அர்த்தமற்ற சொல் என்றும், முதல் முதல் திராவிடரைச் சந்தித்த ஆரியர், இகழ்ச்சியின் காரணமாய் அவர்களை இப்படிக் கூறினுரென்றும், இதற்கு ' மூக்கற்றவர் ' என்பது பொருள் என்றும் பலர் கூறுகிருர்கள். இது எங்ஙனமாயினும் இப்போது 'தாசர்' என்று வழங்கும் சொல் இதனடியாய்ப் பிறந்தது; இதன் அர்த்தம்தான் ' தாசியூ' என்ற சொல்லிற்கும் இருந்திருக்கவேண்டும். நாளடைவில் 'தாசி' என்ற சொல்லும் இதனடியாகப் பிறந்திருக்கவேண்டும்.

இந்நிலையில், ஆ ரி ய ர் திராவிடரைக் கண்டபோது திராவிடரின் நாகரிகம் யாது? ஆரியர் படை எதிரே திராவிடர் வெட்டி வீழ்த்தப்பட்டனரா அல்லது ஆரியர் இந்தியாவினுள் நுழைவதைத் திராவிடர் திறமையாகவே எதிர்த்துப் போராடினுர்களா ? வெற்றி பொதுவில் யாருக்கு அதிகமாகக் கிடைத்தது ? என்ற கேள்விகள் பல எழுகின்றன.

திராவிட நாகரிகத்தின் தன்மையைப் பின்னர் நாம் விரித்துக் கூறுவோம். ஆயினும் ஆரியர்கண்ட திராவிடர் ஆரியரைக் காட்டிலும் சிறந்த நாகரிகம் பெற்றிருந்தார்கள் என்பதை மட்டும் இங்கு முடிவாகக் கூற விரும்புகின்றேன். மொகன்சதாரோ, ஹாரப்பா நாகரிகம் ஆரிய நாகரிகமென்று ஒரு சிலர் கூறுவது தவறு என்பது முன்னர் குறிக்கப்பட்டது. அதை மறுபடியும் இங்கு வற்புறுத்த வேண்டியது அவசியம். வேதங்களில் கூறப்படும் 'ஹரி-யூப்பியா' என்பது ஹாரப்பாவையே குறிக்கும். இங்கே ஆரியர் தோற்கடிக்கப்பட்டதாக வேதங்களில் கூறப்படுகிறதென்ருல் ஹாரப்பா நாகரிகம்

ஆரிய நாகரிகமல்ல என்பது வெளிப்படையன்றோ? இது மட்டுமல்ல; அங்கு வாழ்ந்த மக்கள் பெருங்கோட்டைகள் கட்டி வாழ்ந்தனர் என்றும், ஆரியர் அவற்றைத் தகர்த்தெறிவது மிகவும் கடினமாயிருந்த தென்றும் வேதங்களிலேயே கூறப்படுகின்றன. இக் காரணம் பற்றியே இந்திரன், 'புரந்தரன்' (கோட்டைகளைத் தகர்ப்போன்) என்ற பெயரும் பெற்றான். சிந்து வெளியில் நாம் கண்ட நாகரிகம் கோட்டை நாகரிகமே; இஃது ஆரிய நாகரிகத்திற்கு மாறுபட்டதேயாகும்.

6. ஆரிய நாகரிகமும் திராவிட நாகரிகமும்

திராவிட நாகரிகம் ஆரிய நாகரிகத்தைவிட மிக உயர்ந்த நிலையில் இருந்தபோதுதான் ஆரியர் இந்தியாவினுள் நுழைந்தனர். இதற்குச் சான்றாகவே சிந்துவெளி நாகரிகம் காட்சி அளிக்கின்றது. இது திராவிட நாகரிகமே என்பதை முன்னர் விளக்கினோம். ஆனால் அது அவர்கள் நாகரிகத்தின் ஒரு பகுதியையே குறிப்பதாகும். திராவிடர் உலகத்தின் பல்வேறு பகுதிகளினின்றும் எகிப்து, பாபிலோன், ஈரான் முதலிய நாடுகளின் வழியாக இந்தியாவின் வடமேற்குக் கணவாய்களின் மூலமாக சிந்துவெளிப் பிரதேசத்தை அடைந்தனர். இதன் காலத்தை நாம் அறுதியிட்டுக் கூற இயலாது. ஆயினும் கி. மு. 3000 ஆண்டு அளவில் திராவிடர் இந்தியர்களாக மாறிவிட்டனர்; அதாவது தங்கள் நாடோடி வாழ்க்கையை விட்டுவிட்டு இந்தியாவையே தங்கள் சொந்த நாடாகச் செய்துகொண்டனர். இதுவே சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் நமக்குக் காட்டும் முதல் உண்மை. சிந்து வெளியில்தான் முதல் இந்தியரின் வாழ்க்கை ஆரம்பமாயிற்று. இது காரணம் பற்றியே நம் நாடும் இந்தியா (சிந்தியா என்பதின் திரிபு) என்ற பெயர் பெற்றது. ஆகவே ஆரியர் வருகைக்குக் குறைந்தது ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திராவிடர் இந்தியாவைத் தம் நாடாகச் செய்து கொண்டனர் என்பது வெள்ளிடை மலையாகும்.

கி. மு. 3000-ல் திராவிடர் நாகரிகம் உண்மையிலேயே நகரவாழ்க்கையைப் பின்பற்றியதாய்விட்டது. அதுவும் எத்தகைய நகரங்களில் அவர்கள் வாழ்ந்தார்கள்! ஒழுங்காகக் கட்டப்பட்ட கட்டடங்கள், சுட்ட செங்கல்லால் கட்டப்பட்ட உறுதியான கட்டடங்கள், பல மாடிகளோடு கட்டப்பட்ட கட்டடங்கள் என்ற இத்தகைய உயரிய நாகரிகக் கட்டடங்களிலேயே அவர்கள் வாழ்ந்தார்கள். கட்டடங்களுக்கு இடையில் அழகாகப் பரவப்பட்ட பாதைகள் இருந்தன. குளிப்பதற்கென்று வசதியான அறைகள் வீடுகளிலும், வெளிப்புறத்தும் கட்டப்பட்டிருந்தன. அங்கே தண்ணீர் ஓடுவதற்கு வீட்டின் உள்ளும், வெளியேயும், சாலைகளிலும் செங்கல்லால் மூடப்பட்ட கால்வாய்கள் இருந்தன. பாதைகளின் அகலம் ஏறக்குறைய 30 அடி. கட்டடங்களின் மேற்புறம் துலாக்கட்டைகள் அமைக்கப்பட்டிருந்தன. மொகன் சதாரோவில் காணப்பட்ட குளிக்குமிடம் ஒன்றில் 39 அடி நீளமும் 23 அடி அகலமும் 8 அடி ஆழமும் உள்ள ஒரு குளம் இருந்ததாகத் தெரிகிறது.

இவற்றை யெல்லாம் நோக்குமிடத்துத் திராவிடர் எத்தகைய உயரிய நாகரிகம் உடையவர்களாயிருந்தனர் என்பது புலனாகும். அவர்களிடம் உயர்வு தாழ்வு இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் சிந்துவெளி நகரங்களில் மோசமான கட்டடங்களே இல்லை. ஏழைகள் விடுதிகள் ஒரு வேளை அழிந்துபட்டிருக்கலாமோ என்று சொல்வதற்குமில்லை. ஏனெனில் அக்கால மக்கள் மண்ணில் வீடு கட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. சிந்துவெளியில் செல்வர்களின் மாளிகைகளுடன் வேலைக்காரருக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்ட சில கட்டடங்களின் சின்னங்களையும் நாம் காண்கின்றோம். ஒவ்வொரு வேலைக்காரனுக்கு இரண்டு அறைகள் கொண்ட வீடு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது என்பதாகத் தெரிகிறது.

பழங்காலத் திராவிட மக்களின் அகத்தூய்மைக்கு அவர்களது புறத்தூய்மை ஒரு எடுத்துக்காட்டு. கட்டடங்களின்

ஒழுங்கும், கால்வாய்களின் ஒழுங்கும், குளிக்கும் அறைகளும் இன்ன பிறவும் அவர்களது புறத்தூய்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். அவர்கள் கடவுளின் உண்மைத் தன்மையை ஒருவாறு கண்டறிந்தவர்களாகவே இருந்திருக்க வேண்டும். கோயில்கள் என்று சொல்லக்கூடிய பெரிய கட்டடங்களும் சிந்து வெளியில் காணப்படுகின்றன. இலிங்கத்தின் உயர்வையும் அரசமரத்தின் பெருமையையும் சிந்து வெளிச் சின்னங்களிலே நாம் காண்கின்றோம். அதுமட்டுமல்ல; கடவுளே நம்மைக் காக்கக் கூடியவர் என்ற கருத்துப் புலப் படும் வண்ணம் மிருகங்களின் மத்தியில் மூன்று தலையை யுடைய மும்மூர்த்தி போன்ற உருவம் (பசுபதி) காணப்படு கிறது. மாட்டின் பெருமையும் இவர்களுக்குத் தெரிந்ததே.

அக்காலத்தில் பயிர் தொழிலில் பலர் ஈடுபட்டிருந்தபோதி லும், கைத்தொழிலும், கடல்கடந்த வாணிகமும் சிறந்த முறை யில் நடந்துவந்தன. ஈரானில் கிடைக்கப் பெற்ற சிந்துவெளி இலச்சினைகள் திராவிட வணிகர் பலர் அங்கு வெகுகாலம் வாழ்ந்தனர் என்பதைக் காட்டுகின்றன. அப்பொழுது பஞ்சு நூலை முதல் முதல் விற்றவர்கள் திராவிடரே. இவர் களுக்கு மொழி இருந்தது; பேசும் முறை மட்டுமல்ல எழுதும், முறையும் தெரிந்திருந்தது. இவர்களுடைய எழுத்துக்கள் முற் கூறியபடிச் சித்திர எழுத்துக்கள்; அவற்றை அறிஞர்கள் 270 என்று கணக்கிட்டிருக்கின்றனர். இவற்றிலிருந்தே தமிழ் பிறந்தது என்பதும் அவர்கள் கருத்து.

பழங்காலத்துத் திராவிடர் அரசாட்சி முறையையும் கற்றிருந்தார்கள். அவர்களது கட்டடங்களில் காணும் ஒழுங் கும் திட்டமும் சிறந்தஅரசாட்சிமுறையின் கீழ்த்தான் ஏற்பட்டி ருக்கக்கூடும். யானைப்படை, குதிரைப்படை என்ற படை வகைகள் இருந்தன என்பதற்கு சான்று இல்லாவிட் டாலும், யானைகளையும், குதிரைகளையும், அவர்கள் நன்றாகப் பழக்கி ஆண்டுவந்தார்கள் என்பதில் ஐயமில்லை. பகைவரைத் தாக்கவும், அவர்களை உள்ளேவிடாமல் காக்கவும் சிறந்த அரண்கள் எழுப்பியிருந்தனர். ஹாரப்பாவைச் சுற்றிலும்

40 அடி அகலமுள்ள ஒரு பெரிய மதில் எழுப்பப்பட்டிருந்தது. அதன் தற்போதையச் சிதைந்த நிலையிலும் அதன் அடிப்பாகத்தின் அகலம் 30 அடியும், அதன் உயரம் 35 அடியும் இருக்கின்றன.

கி. மு. 2000-ல் இதன் அருகே பொசுக்கிச் சாம்பல் ஆக்கப்பட்ட கிராமம் ஒன்றை ஆராய்ச்சியாளர் அண்மையில் வெட்டி எடுத்துள்ளார்கள். இது ஆரியரின் இந்தியப்படையெழுச்சியின் முதற் சின்னமாக இருக்கக்கூடும். அப்பொழுது திராவிடர் தெற்குநோக்கி ஓடினர் என்று சொல்லப்படுகிறது. ஹாரப்பாவில் உள்ள ஒரு கிணற்றின் கைப்பிடிச் சுவற்றின் மேல் மண்டை ஓடு ஒன்று காணப்பட்டதாகத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதிலிருந்து சிலர் கிணற்றில் வீழ்ந்தும் இறந்தனரோ என்று ஊகிக்கவும் இடம் ஏற்படுகிறது. ஆயினும் பல இடங்களில் ஆரியர் திராவிடரோடு கலந்து உறவு பூண்டனர் என்பதும் உறுதி. ஆரியர் திராவிடப் பெண்களை மணந்தனர் என்பதற்கு வேதங்களிலேயே தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. ஆரியரது பழமொழிகளாகிய பிராமி, கரோஷ்தி, சமஸ்கிருதம் ஆகியவை, ஹாரப்பா மக்களின் மொழியும் கலந்தேதான் உருவாயின. ஆரியரது மொழி அறிவு மிகச் சிறந்ததல்ல. அவர்கள் இந்தியாவினுள் நுழைந்தபோது அவர்களுக்குத் தெரிந்திருந்தவை: முக்கியமாக அக்னித் தெய்வமும், குதிரைச் சவாரியும், தேர்ப்படையுமே. ரிக்வேதம் ஏற்பட்டுப் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆனபின்பும் அது எழுதப்படவில்லை. அது மட்டுமல்ல; வேதநூல்கள் எதிலும் எழுத்து, எழுதுதல் என்ற சொற்களே கிடையா.

ஆரியர் இந்தியாவில் நுழைந்தபின் வெகுகாலம், ஏறக்குறைய ஓராயிரம் ஆண்டுகளாவது, சிந்துவெளியில், அதுவும் யமுனை, சட்லெஜ் ஆறுகளின் இடைவெளியிலே தங்கி இருந்தார்கள். இங்குதான் வேதங்கள் எழுந்தன; பிராமணர் என்று சொல்லப்பட்ட ஆரியக்குருமார்கள் செய்யுள் மூலமாகவே ஆண்டவனைத் தொழும் விதத்தை வகுத்தனர்.

பிராமவர்த்தம் என்று பிற்கால நூல்களால் போற்றப்படும் இவ்விடை வெளியிலிருந்து கிழக்குநோக்கிக் கங்கைக்கரையை அடைவதற்கு ஆரியருக்கு ஆயிரம் ஆண்டு பீடித்தது. இந்தக் காலத்தில்தான் திராவிடர் வட இந்தியாவின் கிழக்குப் பாகத்தை அடைந்து, அங்கிருந்து மகாராட்டிரம், மைசூர் பீடபூமி வழியாகத் தென்னிந்தியாவை அடைந்தார்கள் என்று நாம் கொள்ளவேண்டும்.

நம் நாட்டின் பழங்கால வரலாற்றின் கால வரையறை பற்றி இன்னும் முடிவாகக் கூற முடியாதென்றாலும், ஆரியப் படையெழுச்சியின் காலம் கி. மு. 2000 என்றும், அவர்கள் சிந்துவெளியில் வாழ்ந்த ஆயிரம் ஆண்டு (வேதகாலம் எனப் படுவது) கி. மு. 2000க்கும் 1000க்கும் இடைப்பட்டகால மென்றும், கி. மு. 1000க்கும் 500க்கும் இடைப்பட்ட கால மே பிராமணம் முதலிய நூல்களும், புராணங்கள் இதிகாசங் களும் எழுந்த காலமென்றும் பொதுவாக இப்பொழுது ஒப்புக்கொள்ளப்படுகிறது. கடைசியாகக் குறிக்கப்பட்ட இந்த 500 ஆண்டுக்காலத்தில் வட இந்தியாவில் இருந்து வந்த திராவிடர் பலர் வடகிழக்கிலிருந்து தென்னாடு நோக்கிப் புறப்பட்டதற்குத் தமிழ் நூல்கள் சான்று பகர்கின்றன. அவர்களைப் பின்பற்றி ஆரியரும் அதே காலத்தில் தென்னாடு போந்தனர் போலும்.

7. தமிழ் மொழி மலர்ந்தது

தொல்காப்பியம் என்ற பழந்தமிழ் இலக்கியத்தின் பாயிரத்திற்கு விளக்கம் எழுதவந்த நச்சினார்க்கினியர் 18 குடிவேளிரும் அரசரும் அகத்தியரோடு கங்கை வெளியி லிருந்து தென்னாடு வந்தனர் என்று குறிக்கின்றார். இது நடந்த காலம் குறைந்தது கி. மு. 600க்கும் முற்பட்டதாகவே இருக்க வேண்டும். அகத்தியருக்கும் பிற்பட்ட தொல்காப் பியர் காலம் கி. மு. 500 என்று இப்பொழுது ஒப்புக் கொள்ளப் படுவதால் மேற்குறித்த கால வரையறையும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியதே.

திராவிடம் என்பதும் தமிழ் என்பதும் ஒன்றே என்பதை முன்னர்க் காட்டினேம். கிரேக்க பூகோள ஆசிரியர்களும் தமிழரைத் திர்மிலர் என்றே குறிக்கின்றனர். மொகஞ்சதாரோ, ஹாரப்பா என்ற இடங்களில் காணப்படும் சாசனங்களைப் பாகுபடுத்திப் பழம் திராவிடர் மொழியின் சித்திர எழுத்துக்களுக்கு ஒரு இலக்கணம் செய்துகாட்ட முயன்றுவந்த ஹெராஸ் அடிகள் இதைப்பற்றிக் கூறுவதைக் கொண்டு ஊர், நாய், வேல், வேளாளன் என்ற தமிழ்ப் பெயர்கள் கி.மு. 5000 அளவில் சிந்துவெளியில் பயிலப் பட்டு வந்தன என்று தோன்றுகிறது. சிந்துவெளியில் வாழ்ந்த திராவிடர் வழிதான் 'ஆண்டவன்' என்று இப்போது நாம் பயிலும் சொல் புறப்பட்டது. இது 'ஆன்' என்ற சொல்லின் அடியாய்ப் பிறந்தது என்று சொல்லப்படுகிறது. 'மீன்' என்ற சொல்லும் பழங்காலச் சிந்துவெளியில் கடவுளைக் குறித்ததென்றும், அதன் வழிவந்ததே 'மீனுட்சி' என்ற சொல் என்றும் அறிஞர் கூறுகின்றனர். சிவன், இலிங்கம் என்ற கருத்துக்களும் இங்ஙனமே தென்னுடு வந்து சேர்ந்தன. சிவபெருமானது வாகனம் ரிடபம் என்பதும், அவன் கோயில்கொண்ட இடம் கைலாசம் என்பதும் இமய மலைச் சாரலில் பிறந்துவந்தவையே.

தமிழ் வளர்த்த முதல் முனிவர் அகத்தியர் என்பது முன்னரே குறிக்கப்பட்டது. அவர் கைலாசத்தினின்றும் சிவபெருமானுலேயே தென்னுட்டுக்கு அனுப்பப்பட்டவர் என்பது தமிழ் மரபு; இதுவே தொல்காப்பியத்திற்கு உரைகண்ட நச்சினுர்க்கினியர் கூற்றுமாகும். அகத்தியர் பிற்பட்ட வேதகாலத்தவர் என்பதை ரிக்வேத சூத்திரங்கள் நன்கு அறிவிக்கின்றன. அதுமட்டுமன்று; வேதங்களில் பேசப்படும் பல முனிவர்களுள் மிகக் குறைவாகப் பேசப்படுகிறவர் இவரே. ரிக்வேத ஆராய்ச்சியாளரில் பெயர்பெற்ற ஜி. சாப்பேக்கர் (G. Chapekar) என்பவர் அகத்தியர் முனிவர் அல்லவென்றும் அவர் ஒரு வேளாண் மகன் என்றும் பம்பாய் நகரிலிருந்து வெளிவரும் ராயல் ஏஷியாடிக்

சங்க இதழ் ஒன்றில் கூறுகிறார். ஆரியரை இந்தியாவில் எதிர்த்தவர்கள் பொதுவாக தாசர்கள், பானிகள் என்று இரு கூட்டத்தாராகப் பேசப்படுகின்றனர். பானிகள் திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று நாம் உறுதியாய்க் கூற முடியாவிட்டாலும் தாசர்கள் திராவிடரே என்பது உறுதி. ரிக்வேதத்தில் அகத்தியர் இவர்களோடுதான் இணைத்துப் பேசப்படுகிறார். ரிக்வேதத்தில் வரும் சில அடிகளின் பொருள் பின் வருமாறு :

> சகோதர அகத்தியரே நீர் எங்களைச்
> சேர்ந்தும் எம்மை ஏமாற்றுவா னேன்? உங்கள்
> எண்ணம் எங்களுக்குத் தெரியும்; எங்களுக்குச்
> சேரவேண்டியதைக் கொடுத்துவிடும். (ரிக்:I 170-173)

பிறிதொரு சூத்திரம் பானிகளுக்கு விரோதமான ஒரு அரசனை அகத்தியருக்கு விரோதமாகக் கிளப்புகிறது (ரிக் X 60-66). இன்னும், கெல் என்ற மன்னனுக்கு அகத்தியர் உதவியாய் இருந்ததாகவும் பிறகு சண்டையின் காரணமாய்ப் பகைவர் அம் மன்னரின் கால்களைத் துண்டித்தார்களென்றும் வேதம் கூறுகிறது. (ரிக். : I 155-156)

இவற்றை உன்னிநோக்கினால் அகத்தியரும் திராவிடரே என்பதும் அவர் வேளாளர் மரபைச் சேர்ந்தவர் என்பதும் பெறப்படும்.

> "நீயே-வடபான் முனிவன் தடவினுட்தோன்றிச்
> செப்பு ணேந்தியற்றிய சேணெடும் புரிசை
> உவராவீகைத் துவரையாண்டு
> நாற்பத்தொன்பது வழிமுறை வந்த
> வேளிருள் வேளே ...."

என்ற புறநானூற்று (201) அடிகளும் இதற்குச் சான்று பகர்கின்றன. அதுமட்டுமல்ல; புறநானூற்றுப் பாடல்கள் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் எழுந்தவையானால், மேற்குறித்த அடிகளில் பேசப்படும் "வேளிருள் வேளுக்கும்" முற்பட்ட 49-வது தலைமுறையைச் சேர்ந்தவர் நம் அகத்திய முனிவர் என்பதும் பெறப்படும்.

ஆகவே தமிழ் பிறந்த காலம் கி. மு. 600க்கு முற்பட்ட காலமென்பது தமிழின் பழமையை மிகக் குறைந்த முறையில் காட்டுவதே அன்றி மிகுதிப் படுத்திக் கூறுவதாகாது. ஆயினும் நவீன ஆராய்ச்சியாளர்களில் சிலர், கி.மு. மூன்றும் நூற்றுண்டிலும் தமிழ் எழுத்து எழவில்லை என்று கூறுகிறுர்கள். இதற்கு முக்கியக் காரணம் தென்னுட்டில் காணப்படும் அசோக சாசனங்கள் பிராமியில் எழுதப்பட்டிருப்பதே என்பது அவர்கள் கூற்று. எச். கே. சாஸ்திரி, கே. வீ. சுப்பிரமணிய அய்யர் போன்றவர்கள், இச் சாசனங்கள் தமிழிலும் பிராமியிலும் கலந்து எழுதப் பட்டிருக்கின்றன என்றும் கூறுகின்றுர்கள். இது எங்ஙனமாயினும் சரி, இதைக் கொண்டே தமிழின் பழமையைப் பற்றி முடிவுரை கூறுவது என்பது முடியாத காரியம். நல்ல தமிழ் எழுத்துக்கள் இருந்தும், ஆட்சி செய்யும் மன்னன் தன் சாசனத்தைத் தன் மொழியிலேயே எழுதும்படி விதித்திருக்கக்கூடும்; அல்லது அரச ஆணையைக் கல்லிலே பொறித்தவன் தமிழ் தெரியாதவனுய் இருந்திருக்கவும் கூடும்.

தமிழின் பழமையை எதிர்ப்பதற்கு இச் சான்றுகள் எஞ்ஞான்றும் போதா. அப்படி எதிர்ப்பதாயிருந்தால் பழங் கால வரலாற்றையே எதிர்க்கவேண்டும். கி. மு. 5000-ல் தமிழர் சிறந்த நாகரிகம் கொண்டிருந்தார்கள்; மத்தியதரைக் கடலிலிருந்து, எகிப்து, பாபிலோனியா, சுமேரியா என்ற இடங்களிலெல்லாம் அவர்கள் இருந்தார்கள்; வாழ்ந்தார்கள்; இந்தியக்கலை, மதம், மொழி முதலியவற்றைப் பரப்பினுர்கள்; இன்னும் பருத்தி, பஞ்சு, நறுமணப் பொருள்கள், செம்பு, இரும்பு முதலியவைகளை உலகெங்கும் விற்றுர்கள்; பெரியவும் சிறியவுமான கலங்களிலே திரைகடலிலே சென்றுர்கள்; -என்ற இவற்றையெல்லாம் எதிர்க்கவேண்டும். பழங்கால உலகின் நாகரிக இருப்பிடமென்று இதுகாறும் கருதப்பட்ட சுமேரியா நாடும் தனது உடைகளுக்கு வேண்டிய பஞ்சை இந்தியாவிலிருந்தே வாங்கியது. எப்போதும் தனக்குக் கீழ் திசையிலிருந்த வெண்பனி மூடிய இமயத்தையே நோக்கித்

தன் வாழ்க்கையை கி. மு. 4000-ல் இந் நாடு நடத்திற்று என்று ஜெனசிஸ் என்ற விவிலிய நூல் கூறுகின்றதென்றால், உலகத்தின் தனி நாயகமாக விளங்கிய திராவிடருக்கு கி. மு. 300லும் எழுத்துக்கள் இல்லை என்று சொல்வது உண்மை வரலாற்றை நவீன முறையிலே மூடுவதே அன்றி, வேறன்று. சுமேரியாவின் முக்கியப் பட்டணம் 'ஊர்' என்றே அழைக்கப் பட்டது. அங்கே தென்னாட்டின் தேக்குமரங்களால் ஆகிய கட்டடங்களை ஆராய்ச்சியாளர்கள் தோண்டி எடுத்திருக்கிறார் கள். மதினுட்பத்துக்குப் பெயர்பெற்ற சாலமன் மன்னனும் தென்னாட்டோடு கி. மு. 1000-ல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தான் என்பதெல்லாம் மறுக்க முடியாத உண்மை கள் அன்றோ?

தமிழின் பழமையான இலக்கணம் என்று நாம் இப் போது வழங்கும் தொல்காப்பியம் கி. மு. 500-ல் எழுதப் பட்டது என்று மேலே குறித்தேன். இஃது உண்மையாயின் தமிழ் மொழி மிகப்பழமை வாய்ந்தது என்பது தானாகவே உறுதிப்படும். இதற்குத் துணையாக இன்னும் சில சான்று களைக் காட்டலாம் :

1. ஆரியரது வடமொழி தொல்காப்பியர் இலக்கணத் தைப் பாதிப்பதில்லை. வடமொழியின் முதல் இலக்கண நூலாசிரியர் பாணினியின் பெயர்கூடத் தொல்காப்பியத் தில் குறிக்கப்படவில்லை. அதற்கு மாறாகப் பாணினீயத்திற் கும் மிக முற்பட்டதாகக் கருதப்படும் இந்திர இலக்கணம் மட்டும் இதில் குறிக்கப்படுகிறது.

2. தொல்காப்பியம் பிற இலக்கண நூல்களுக்கு வேறுபட்டது. இது வெறும் மொழி இலக்கண நூலன்று; வாழ்க்கைக்கே இலக்கண நூலாகும். இது தொல்காப்பியத் தின் தொன்மையைக் காட்டுகிறது.

3. மூன்றாவதாகக் காணப்படுவன தொல்காப்பியம் கூறும் பழங்கால இலக்கண முறைகள். ஞ்ய, ங்ய, ம்த, ம்வ என்ற பண்டை எழுத்துத்தொடர்கள் கிறித்துவ சகாப்தத்

தொடக்கத்திலேயே வழக்கொழிந்துவிட்டன. ஆனால் தொல் காப்பியத்தில் இவை சொற்களின் மத்தியில் வருவதாகக் காட்டப்படுகின்றன. அஃதேபோல் தொல்காப்பியத்தின் படி 'ச' என்ற குற்றெழுத்து, சொல்லின் முதலில் வராது. ஆனால் சங்கநூல்கள் என்று நாம் போற்றும் நூல்களில் சதுக்கம், சந்தி, சமைந்து என்ற சொற்கள் பல வருகின்றன. ஒரு சிலர் தொல்காப்பியம் சங்ககாலத்திற்கும் பிற்பட்டது என்று கூறுகின்றார்கள். ஆனால் தொல்காப்பிய விதிகளைப் பின்பற்றும் நூல் எதுவுமே கிறித்துவ சகாப்தத்தில் எழுதப் படவில்லை. இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் என்பதால் தொல்காப்பியம் சங்க காலத்திற்கு மிக முற்பட்டது என்பது வெளிப்படை.

8. வரலாறு பிறந்தது

பழங்காலந்தொட்டு தமிழ் மொழி இருந்தபோதிலும், அதற்குத் தொல்காப்பியர் இலக்கணம் கண்டபிறகே இப் போது நாம் வழங்கும் தமிழ் மொழி பிறந்ததுபோல், என்று மிருந்த தமிழ் நாட்டின் வரலாற்றில் ஏறக்குறைய கி.மு. 4-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஓர் உதய காலம் ஏற் படுகிறது; வரலாற்றுச் சான்றுகள் விளக்கம் பெறுகின்றன; இதுவரை கண்டிராத ஓர் உறுதி தமிழ் நாட்டின் வரலாற் றிற்கு ஏற்படுகிறது. வட இந்தியாவில் பாடலிபுத்திரத்தில் கி. மு. 325-ல் அரசு கட்டிலேறிய சந்திரகுப்தன் காலத்தில் அவன் சமஸ்தானத்திலிருந்த கிரேக்கத் தூதுவர் மெகஸ்தனீஸ் என்பவர் எழுதிய "இண்டிகா" என்ற நூலும், அதற்குப் பின் ஏற்பட்ட அசோக சாசனங்களும் தமிழ் நாட்டின் வர லாற்றிற்கு உறுதுணையாக இருக்கின்றன. தமிழ்நாட்டின் செல்வம், வாணிபம், சமயநிலை, இவற்றிற்கெல்லாம் மேற் குறித்த ஆதாரங்கள் விளக்கம் தருபவன ஆகும். பாண்டிய நாட்டில் கிடைத்த முத்து, பாண்டியநாட்டின் பெருமை, பாண் டிய அரசனின் வலிமை, வடக்கே இருந்து தென்னாட்டின் வழியாக இலங்கைவரை சென்ற பௌத்த சமயத் துறவிகள்

மகிந்தன் போதிமரக்கிளையுடன் இலங்கைக்கு வந்தது - இவற்றைப்பற்றியெல்லாம் நமக்கு வரலாறு இனி உறுதி கூறுகின்றது. இஃது ஒருபுறமிருக்க, பழங்கால வரலாற்றிற்குப் பெரிதும் ஆதாரமளிக்கும் மகாவமிசம் என்ற நூல் விஜயன் என்ற வடநாட்டான் ஏழுநூறு பேர்களோடு சென்று இலங்கையைக் கைக்கொண்ட வரலாற்றையும், அவன் பாண்டிய மன்னனிடம் பெண் பெற்று, தன்னேடு வந்தவர்களுக் கெல்லாம் தென்னுட்டுப் பெண்களை மணம் செய்வித்த வரலாற்றையும் கூறுகின்றது.

இக்காலத்தில் தமிழ் மொழி செழிப்புற்று, நாம் இப்பொழுது சங்க நூல்கள் என்று புகழும், நற்றிணை, குறுந்தொகை, புறம், அகம், முதலிய எட்டுத்தொகை நூல்களும் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி முதலிய பத்துப் பாட்டு நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காவியங்களும் எழுந்தன. சங்க நூல்களின் காலவரையறைபற்றி பெரும் ஐயப்பாடுகள் இருந்தபோதிலும், மேற்குறித்த நூல்களெல்லாம் கி. பி. முதல் மூன்று நூற்றுண்டுகளில் எழுதப்பட்டவையே என்பது அறிஞர் பலரும் இப்பொழுது ஒருமைப்பாட்டுடன் ஒப்புக்கொள்ளும் கொள்கையாம். இதைப்பற்றி இச்சிறிய நூலில் நீண்டு விவாதிக்க இடமில்லையாதலால் ஒன்றிரண்டு குறிப்புகளை மட்டும் காட்டிச் செல்வோம். பெயர்பெற்ற பெரிப்பிளஸ் என்ற நூலும், பிளினி, டாலமி என்ற ரோமானிய, கிரேக்க பூகோள ஆசிரியர்களின் நூல்களும் முறையே கி. பி. முதல், இரண்டாம் நூற்றுண்டுகளில் எழுதப்பட்டன என்பதுபற்றி இப்போது ஐயப்பாடு ஏதுமில்லை. இந் நூல்களில் குறிக்கப்படும் பிரதேசங்கள், மக்கள்நிலை, தொழில்நிலை, வாணிகநிலை இவையாவும் நாம் மேற்குறித்த சங்க நூல்களில் பார்க்கும் விளக்கங்களுக்கு பெரிதும் ஒத்திருப்பதால், இவை யாவும் ஏறக்குறைய சம காலத்தில் எழுதப்பட்டவை என்பது போதரும். எடுத்துக் காட்டாக, சோழ நாடு அக் காலத்தில் கடலோரப்பகுதி, உள் நாட்டுப் பகுதி என்று இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்

தது என்று பெரிப்பிளஸ் கூறுவதற்கேற்ப. சிலப்பதிகார முதலிய சங்கநூற்கள் சோழநாட்டிற்கு புகார், உறையூர் என்ற இரு தலைநகரங்கள் இருந்தது பற்றிக் கூறுகின்றன. அதுமட்டுமல்ல; கிரேக்கரும், ரோமரும் சங்ககாலத் தமிழருக்கு நன்றாகத் தெரிந்திருந்தார்கள் என்பதைச் சங்க நூற்கள் யவனரைப்பற்றிக் கூறும் பல குறிப்புகளிலிருந்து அறியக்கிடக்கின்றது.

இவ்விதமாய் ஏறக்குறைய கி. மு. 300-ம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் தொடங்கும் வரலாற்று வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகி கி. பி. 300-ம் ஆண்டில் நல்ல வெளிச்சத்தை அடைகிறது. மைசூரில் தோண்டி எடுக்கப்பட்ட அசோகரது சிறிய கற்சாசனங்கள் அக்காலத்தில் அசோகர் அரசாட்சி அதுவரை பரவியிருந்தது என்பதைக் காட்டுகின்றது. அவரது இரண்டாம் கற் சாசனம் தமிழ் நாட்டின் மூவேந்தர்களின் பெயர்களையும் குறிப்பிடுகின்றது. அவரது இரண்டாம், பதிமூன்றும் சாசனங்களில் சோழ பாண்டிய மன்னரோடு சத்திய புத்திரர் என்ற மன்னர்கள் குறிக்கப்படுகின்றார்கள். இவர்களைப்பற்றியே சங்க நூற்கள் "வாய்மொழிக்கோசர்" என்று பேசுகின்றன என்பது அறிஞர் கருத்து. இதற்கேற்ப சங்க நூற்களில் தென்னாட்டை நோக்கி மௌரியர் எடுத்த படையெழுச்சி ஒன்றைப் பற்றியும் அதில் கோசர் மௌரியருக்கு உதவியாக இருந்ததைப்பற்றியும் குறிக்கப்படுகின்றது.

சங்க நூற்கள் முற்றிலும் கவிதையாக அமைந்தவை. அவை யாவும் புலவர் கூற்று; உயர்வு நவிற்சி அணியாகக் கூறப்பட்டவை; ஆகையால் அவை வரலாற்றிற்கு எத்துணை உதவியும் புரிவதில்லை என்ற கருத்துக்கள் ஒரு காலத்தில் உலவினதுண்டு. ஆனால் அவை இப்பொழுது ஒதுக்கப்பட வேண்டும். தமிழ் நாட்டின் வரலாற்றிற்கு இன்றியமையாத சாதனங்களாகக் கருதப்படும் கல்வெட்டுகள், சாசனங்கள் போன்றவையும் உண்மைக்கு அதிகமாகக் கூறாமலிருப்பதில்லை. ஆயினும் அவைகளை நாம் வரலாற்றுச் சான்றுகளாகக் கருதா

மலிருந்ததில்லை. அப்படியே இந்தச் சங்க நூற்களும் வரலாற்றிற்கு ஆதாரம் அளிக்கும் சான்றுகள் என்பதை நாம் மறுக்க முடியாது. அதுமட்டுமல்ல; சங்க நூற்கள் அளிக்கும் வரலாற்றுச் சான்றுகள் ஒரு விதத்தில் சாசனச் சான்றுகளுக்கும் மேலானவை என்று நாம் கருதவேண்டும். ஏனென்றால் சங்க நூற்சான்றுகள் மிகுந்த விவரம் தருபவையாகும். சமூகம், மதம், பொருளாதாரம் இதுபோன்ற விஷயங்களில் இலக்கியம்போல் ஆதாரம் அளிப்பது வேறில்லை. இது காரணம் பற்றியே நாட்டுப் பாடல்களில் தவழும் வரலாற்று ஆதாரங்கள் என்ற பொருள்பற்றி ஆராய்ச்சி செய்த குளோவர் (Glover) என்ற ஆங்கிலேயர், "சங்க நூற்களை வரலாறுபற்றி ஆராய்வது பெரும் ஆராய்ச்சியாளர்க்குரிய வேலை எனக்" குறித்தார்.

பத்துப்பாட்டுத் தொகுதியைச் சேர்ந்த பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை முதலிய நூல்களில் சோழன் கரிகாலனைப்பற்றியும், அவன் தலைநகர் புகாரைப்பற்றியும் மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை முதலிய நூல்களில் மதுரையையும், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப்பற்றியும், பெரும்பாணாற்றுப்படையில், காஞ்சியையும், அங்கு ஆண்ட இளந்திரையனைப்பற்றியும், சிறுபாணாற்றுப்படையில் ஓய்மா நாட்டுத் தலைவன் நல்லியக் கோடனைப்பற்றியும், மலைபடுகடாம் என்ற நூலில் நன்னன் என்ற ஒருமலை நாட்டுச் சிற்றரசனைப் பற்றியும் நாம் பல செய்திகள் அறிகின்றோம். பதிற்றுப்பத்து என்ற நூல் முழுவதும் சேரகுல அரசர்களைப் பற்றியது. சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற காவியங்கள் தமிழ் நாட்டு மூவேந்தரைப் பற்றிப் பேசுகின்றன.

சங்க நூற்களில் பல பெரிதும் வரலாற்று நூல்களாகவே அமைந்திருக்கின்றன. அவற்றின்கண் அரசர் வமிசா வழியும், அரசர் கொண்ட வெற்றிகளும், அக்கால அரசியல், அரசாங்க, சமூக, சமய நிலைகளும் விரிவாகக் காட்டப் பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும்

சமண, பௌத்தக் கொள்கைகள் முறையே நன்முக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. புகார் துறைமுகத்தில் சோழனது புலிக்குறி பொறித்து மலையெனக் குவிந்து கிடந்த சரக்குகளைப் பற்றியும், மதுரை, புகார் நகரங்களின் அங்காடிச் சிறப்பையும், வணிகர் குலமக்களின் குணநலமும், மக்களுடைய நற்பண்பும், எத்தனையோ தமிழ் விழாக்களும், விளையாட்டுகளும், குத்துச்சண்டை, சேவல் சண்டை போன்ற ஆண்மக்கள் காலப்போக்கும், காளி, முருகன் போன்ற தமிழ் தெய்வங்களும் இந்நூற்களிலே படம்பிடித்துக் காட்டப்படுகின்றன. முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை போன்ற நூல்களில் அக்காலத்திய போர்முறைகள் நன்கு குறிக்கப்படுகின்றன.

9. வசந்தகாலம்

கி. பி. முதல் மூன்று நூற்றுண்டுகள் தமிழ் நாட்டு வரலாற்றில் ஒரு வசந்தகாலம் என்று நாம் சொல்லக்கூடும். ஏனெனில் அக்காலத்தில் சிறந்த தமிழ் மன்னர்கள் தமிழ் நாட்டில் ஆட்சி செய்தார்கள். ஆனால் நமது துர் அதிர்ஷ்டவசமாக சங்க நூல்கள் இவர்களைப்பற்றிக் காலவரையறையோடு அறிவிப்பதில்லை. தவிர, சங்க நூற்களில் ஒவ்வொன்றும் திண்ணமாக எப்பொழுது எழுதப்பட்டது என்பதைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளவும் வழியில்லை. ஆகையால் நாம் இந்நூற்களின் மூலம் அறியக்கிடக்கும் மன்னர்களைக் கால ரீதியோடு ஒழுங்குபடுத்திக் கூற இயலாது. வரலாற்று நோக்கொடு பார்க்குமளவில் இவர்களில் சிலரை மட்டும் நாம் ஒழுங்குபடுத்திக் கூறக்கூடும். உருவபஃறேற் இளஞ்சேட் சென்னி, அவன் மகன் கரிகாலன், கரிகாலன் மக்கள் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இவர்கள் அக்காலத்துச் சோழர் மன்னர் என்றும், முதுகுடுமிப்பெருவழுதி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், வெற்றிவேற்செழியன், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற இவர்கள் பாண்டிய அரசர்களில் காலவரையறையோடு ஒழுங்குபடுத்தக் கூடியவர்கள் என்றும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்,

அவன் மகன் சேரன் செங்குட்டுவன் அதற்குப்பின் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்ற இவர்கள் அக்காலத்திய சேர மன்னர்களென்றும் நாம் கூறலாம்.

சங்க காலத்தில் பெரும் அரசர்கள் மட்டும் அரசாள வில்லை; அவர்களோடு அநேக சிற்றரசர்களும், பெருந் தலைவர்களும், அவரவர்கள் இடத்தில் அரசாண்டு வந்தார்கள். தற்போது மதுரைக்கருகிலுள்ள மோகூர் என்ற இடத்தில் பழையன்மாறன் என்ற சிற்றரசனும், தென்னாட்டின் மேற்குக்கரையில் நன்னன்வேண்மான் என்ற சிற்றரசனும், ஒய்மாநாடு என்று வழங்கிய—தற்போதைய தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நல்லியக்கோடன் என்ற சிற்றரசனும், திருநெல் வேலி மாவட்டத்தில் திதியன் என்ற சிற்றரசனும், பழனிக் கருகில் வேள்பேகன் என்ற சிற்றரசனும், தற்போதைய புதுக்கோட்டைப் பகுதியில் வேள்எவ்வி, இருக்குவேள் போன்ற சிற்றரசர்களும் அரசாட்சி செய்து வந்தார்கள். இவர்களன்றி, கோசர், எயினர், கட்டியர், கருநாடர் என்ற போர்விருப்பம் கொண்ட குலத்தவரும் தமிழ்நாடெங்கும் இருந்துவந்தனர்.

சங்ககாலத்தில் தமிழ்நாட்டின் அரசியல் நிலை ஒரு முடிவான கட்டத்தை அடையவில்லை. அக்காலத்தில் நடந்த ஆட்சி முடியாட்சியோ அன்றி குடியாட்சியோ என்று நாம் துணிந்து கூறமுடியாது. அக்காலத்தில் பெரிய மன்னர்கள் ஆட்சி செலுத்தினர்கள். ஆயினும் அக்காலச் சிற்றரசர்கள் அவர்கள் ஆட்சியைப் பூரணமாக ஒத்துக்கொள்ளவில்லை. ஆகையால் முடிமன்னருக்கும், சிறுமன்னருக்கும் அடிக்கடி பெரும்போர்கள் நிகழ்ந்தன. அதே சமயத்தில் நாடு முழுவ தும் மக்களாட்சி நிகழ்ந்தது என்பதை நாம் சங்க நூற்க ளால் அறிகிறோம். ஒவ்வொரு கிராமங்களிலும் கிராமத்தின் நலனைக் கவனித்துக்கொள்ள சபைகள் இருந்தன. இவை களையே சங்க நூற்கள் மன்றங்கள் என்று அறிவிக்கின்றன. கிராம வரி வசூல், நீர்ப்பாசன வசதி, நீதி செலுத்துதல் இவைகளை இம் மன்றங்களே கவனித்து வந்தன. இது

காரணம் பற்றியே சங்ககால அரசியல் முறையை நாம் பாகுபடுத்திக் கூற இயலாத நிலையில் இருக்கிறோம்.

சங்க காலத்தில் பெரும் போர்கள் பல நிகழ்ந்தன. அக்கால மன்னர்களில் பலர் அவர்களடைந்த வெற்றியின் பேராலேயே அழைக்கப்படுகிறார்கள். இப் போர்களில் சில, முத்தமிழ் மன்னர் இடையே நடந்தவை. ஒரு சில அக்காலத்துச் சிற்றரசரோடு நடந்தவை. ஆனால் இவற்றில் பெரும்பகுதி வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டின்மீது படையெடுத்த வீரரை வென்றவையாகும். வடக்கேயிருந்து இக் காலத்தில் தென்னாட்டின் மீது படையெடுத்த வீரர்கள் யார் என்பதைப்பற்றி வரலாற்று ஆசிரியர்களிடையே அபிப்பிராய பேதமிருக்கிறது. சிலர் இவர்களைக் களப்பிரர் என்று குறிக்கிறார்கள். சங்ககாலம் தீர்ந்து முத்தமிழ் ஆட்சி முடிந்த பின்பு, களப்பிரர் ஆட்சி தமிழ் நாட்டில் தொடங்குவதால், சிலர் இவ் வடவரைக் களப்பிரர் என்று குறிக்கின்றார்கள். சில வரலாற்று ஆசிரியர்கள் இவர்கள் மௌரிய மன்னர்களின் வழிவந்த பிற்கால மௌரிய மன்னர்கள் என்று கூறுகிறார்கள். இவைகளைப்பற்றி நாம் ஒன்றும் உறுதியாக இப்பொழுது கூறமுடியாது. பொதுவில், இவர்கள் ஆரியர்கள் என்பதை நாம் ஒருவாறு ஊகிக்கலாம். ஏறக்குறைய கி. மு. 600-ம் ஆண்டிலிருந்து ஆரியர்கள் வடநாட்டிலிருந்து தென்னாட்டில் வந்து குடியேறினார்கள். இவர்களை அக்கால மன்னர்கள் பலமுறை எதிர்த்து முறியடித்திருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படுகின்ற பாண்டிய அரசன், 'ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்' என்று குறிக்கப்படுகின்றான். சேரன் செங்குட்டுவனின் இமயப்படையெழுச்சியைக் குறிக்கும் இந்நூல் 'ஆரியர் அலறத்தாக்கி' என்று † கூறுகின்றதாலும் இதை அறியலாம்.

† "ஆரியர் அலறத்தாக்கி பேரிசைத்
தோன்றுமுதிர் வடவரை வணங்குவிற்பொறித்து
வஞ்சின வேந்தரைப் பிணித்தோன்" - சிலப்பதிகாரம்

தமிழ்நாட்டு மன்னர் மூவரைப் பற்றியும், சங்க நூற்கள் கூறும் இமயப் படையெழுச்சிகளும் இப்படிப்பட்டதே என்று நாம் கருதவேண்டும். தமிழ்நாட்டு மன்னர்கள் இமயம்வரை படையெடுத்து அங்குள்ள மன்னர்களைத் தோற்கடித்தார்கள் என்று சங்க நூற்கள் கூறுவது பலருக்கு வியப்பை அளிக்கலாம். ஆயினும் அதை நாம் அவ்வளவு எளிதாக ஒதுக்கிவைக்க முடியாது. உதாரணமாக, கரிகாலனது இமயச்செலவு ஒரு நூலில் மட்டுமல்ல; பல நூல்களில் குறிக்கப்படுகின்றது. சங்ககால நூல்களில் மட்டுமல்ல; பிற்கால நூல்களிலும் இது குறிக்கப்படுகின்றது. உதாரணமாக: பிற்காலச் சோழர் காலத்தில் எழுந்த கலிங்கத்துப் பரணியிலும் கரிகாலனது இமயச்செலவு குறிக்கப்படுகின்றது. இஃதேபோல் 'பாண்டியன் இமயத்தில் கயல்பொறித்தான்' என்ற செய்தி சிலப்பதிகாரத்தில் மட்டுமல்ல; பிற்கால ஆழ்வார்கள் காலத்திலும் வழக்கில் இருக்கின்றது. ‡

சேரன் செங்குட்டுவன் இமயத்தை வென்ருன் என்பது சிலப்பதிகாரத்தில் பல காதைகளில் பேசப்படுகின்றது. ஆசிரியர் அதற்குத் தரும் விளக்கமும், விரிவும் சேரமன்னனது இமயவெற்றி முற்றிலும் உண்மையானது என்று நாம் கருதும்படி அமைந்திருக்கிறது:

" மாநீர்வேலி வச்சிரநன்னுட்டுக்
கோன் இறை கொடுத்த கொற்றப்பந்தரும்
மகதநன்னுட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டி
மண்டபமும்

அவந்தி வேந்தன் — தோரணவாயிலும் ".

என்று குறிக்கும் பகுதியில் சேரன் வடநாட்டில் வென்ற மன்னர்கள் கொடுத்த இறைகளின் விவரம் கொடுக்கப்படு

‡ "பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலபதி போல்". என்று பெரியாழ்வார் பாடுகின்ருர்.

கிறது. இவையாவும் உண்மையில் நடவாமல் கவி தன் உள்ளத்திலேயே கண்டதென்று கூறுவது உண்மைக்கு மாருனதாகும். இமயமலைப்பாகம் அக்காலத்திய மன்னர்களுக்கு நன்ருகத் தெரிந்ததொன்று என்பதை தமிழ்நாட்டின் பழங்கால வரலாற்றை அறிந்தவர் ஒத்துக்கொள்வர். சிந்துச்சமவெளி திராவிட நாகரிகத்தின் உண்மையை அறிஞர் உலகம் இப்பொழுது நாளுக்குநாள் அதிகமாக ஒப்புக்கொள்ளுகின்றது. வடநாட்டிலிருந்து திராவிடர்கள் தென்ஞட்டிற்கு வந்திருந்தால் அவர்கள் தென்ஞட்டிலிருந்து வடநாட்டிற்குத் தங்கள் படையைச் செலுத்திச் செல்வது சுலபமான காரியமாகும். கங்கர்கள் ஒரு காலத்தில் நேபாளத்தில் தங்கள் ஆட்சியைச் செலுத்தினரென்று மைசூர் பிரதேசத்தின் வரலாற்று நிபுணர் ரைஸ் (Rice) என்பவர் குறிக்கின்ருர். சங்ககால இலக்கியங்களைப் பெரிதும் உவந்து கற்ற பண்டித மு. ராகவய்யங்கார் அவர்கள் கரிகாலன் இமயத்தில் புலி பொறித்த இடம் சிக்கிம், பூட்டான் என்ற பிரதேசங்களுக்கு இடையிலுள்ள மலைகள் என்று குறிக்கின்ருர். அந்த இடத்திலே "சோழன்மலை", "சோழன் கணவாய்" என்ற பெயர்கள் இன்றும் வழங்குகின்றன என்பது இம்பீரியல் கெஸ்ட்டீர் ஆப் இந்தியா (Imperial Gazetter of India) என்ற நூலில் குறிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளையெல்லாம் ஒப்பிட்டுப்பார்த்தால் முத்தமிழ் மன்னரின் இமயப்படையெழுச்சியின் உண்மை ஒருவாறு விளங்காமற் போகாது.

இவைதவிர கரிகாலன் அரசாட்சி தொடங்கிய காலத்தில் உள்நாட்டுப் போர்கள் பல எழுந்தன. இவற்றிலெல்லாம் ஜெயங்கொண்டு தமிழ் நாட்டில் முதல் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தான் கரிகாலன். வாகைப்பறந்தலை என்ற இடத்தில் ஒன்பது சிற்றரசர்களை ஒரே நாளில் அவன் தோற்கடித்தான் என்று பரணர் என்ற புலவர் கூறுகின்ருர். தஞ்சை மாவட்டத்தில் இப்போது உள்ள தலையாலங்காடு என்ற இடத்தில் (இதைத்தான் சங்கநூற்கள் தலையாலங்கானம்

என்று கூறுகின்றன) நெடுஞ்செழியன் என்ற பாண்டிய மன்னன் சேரனையும், சோழனையும், அவர்களோடு சேர்ந்த ஐந்து சிற்றரசர்களையும் புறங்கண்டான். சேரன் செங்குட்டுவன், பல சிற்றரசர்களைத் தரைப்போரிலன்றிக் கடற் போரிலும் வென்ருன் என்று சிலப்பதிகாரம், புறநானூறு, பதிற்றுப் பத்து முதலிய சங்க நூல்கள் கூறுகின்றன.

சங்ககாலம் சண்டைகள் நிறைந்ததென்ருலும் அக்காலத்தில் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள் என்பதற்கு மேற்குறித்த சங்கநூல்களினும் வேறு சான்று தேவையில்லை. அக் காலத்தில் சிறந்த நிலவளம், நீர்வளம், பயிர்த்தொழில் கைத்தொழில் வளம், வாணிக வளம், கொடைவளம் இவை யாவும் உயரிய நிலையிலிருந்தன. இதற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் அக்கால மன்னர்கள் கருத்தோடு நல்கினர்கள். கரிகாற் பெருவளத்தான் நீண்ட காவிரி நதிக்கு அணை கட்டினன் என்றும், அதற்குப் பெருவாரியான வேலையாட்கள் தேவையாயிருந்தபடியால் ஈழத்தை வென்று, அங்கிருந்து பலரை அணைக்கட்டு வேலையிலே அமர்த்தினன் என்பதும் ஈழநாட்டுப் பழங்கால நூல்களான மகாவமிசம், தீபவமிசம் முதலியவற்றினல் அறியக் கிடக்கின்றது. தமிழ்நாட்டு வரலாற்றில் கரிகாற்சோழனது இப் பணி அழியா இடம்பெற்றது என்பதை முதலாம் இராஜேந்திரச் சோழனது திருவாலங்காட்டுப் பட்டையங்களில் நாம் காணலாம். சோழர்களினின்றும் பிரிந்து தெலுங்கு நாட்டிலே ஆட்சி செய்த சோழ வமிசத்தினரும் பிற்காலத்தில் தங்கள் சாசனங்களில் இதைக் குறிக்கின்ருர்கள் என்பது அவர்களது ரேனுட்டுச் சாசனங்கள் மூலம் அறியலாம். மற்றும் நாம் மேற்குறித்த ஈழநாட்டு நூல்கள், கரிகாலனது காவிரி அணை நூறு மைல் நீளம் இருந்தது என்று கூறுகின்றன. இது அக் காலத்துத் தமிழ் மன்னர் நாட்டின் நீர்வளத்தைப் பற்றி எடுத்துக்கொண்ட கவனத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். சங்ககாலத்திலிருந்த சிறந்த நீர்ப்பாசனக் கால்வாய்களைப்பற்றிச் சிலப்

பதிகாரம், பட்டினப்பாலை முதலிய நூல்களில் விரிவாகக் காணலாம். அக் காலத்தில் நீர் நிறைந்த குளங்களில் மக்கள் நீராடி மகிழ்ந்ததும், அவற்றினருகில் தமது வீட்டில் செழித்த பசு, எருதுகளைக் கட்டி மகிழ்ந்த விதமும் பட்டினப் பாலையில் கூறப்படுகின்றன. அக் காலத்தின் நிலவளச் சிறப்பைக் காட்டுவதற்குச் சங்க நூற்களில் பல எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. உதாரணமாக, செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற மன்னனைப் போற்ற வந்த புலவர், பொருனையாற்றின் மணலினும் அவன் நாட்டில் விளையும் நெல்லினும் அதிகமாக அவன் வாழ்வு பெருகி விளங்க வேண்டுமென்று கூறுகின்றார். புதிதாக அரசுக்கட்டிலேறிய சோழ மன்னனை, புகழ்பெற்ற ஔவையார் போற்றும் வகையிலும் இந்த உண்மையை நாம் காணலாம். மன்னனது வாழ்வு வளம்பெற வேண்டுமென்று கூற வந்த அவர், அவன் நாட்டிலுள்ள வயல்களின் வரப்பு உயரவேண்டு மென்று கூறுகின்றார்.

சங்க காலத்தியக் கைத்தொழில் வளர்ச்சிக்கும் நாம் போதிய சான்றுகள் அக்காலத்திய நூற்களில் காணக்கூடும். அவற்றில் தட்டான், கொல்லன், தச்சன், குயவன், தோல் வேலைக்காரர், நெசவுக்காரர் முதலிய பல கைத்தொழில் காரர்களை நாம் காணலாம். குதிரை, சிங்கம், யானை முகங்கள் கொண்ட படகுகள், பெரிய கப்பல்கள், சிறந்த வீடுகள், உயர்ந்த கம்பளங்கள், பாலாவி போன்ற மெல்லிய உடைகள் — இவைகளெல்லாம் அக் காலத்தில் செய்யப்பட்டன. மிகுந்த விளைபொருள், சிறந்த கைத்தொழிலின் காரணமாக அக் காலத்தில் வாணிக வளமும் பெருகியிருந்தது. சங்க நூற்களில் ஒன்ருன பட்டினப்பாலை அக் காலத் தமிழரின் வாணிக வளத்தைத் திறம்படக் கூறுகின்றது. அதிலிருந்து மேற்றிசையிலிருந்து வந்த குதிரைகளும், ஈழநாட்டு உணவுப் பொருட்களும், சீன நாட்டிலிருந்து வந்த கற்பூரமும், வாசனைத் திரவியங்களும் அக் காலத்து இறக்கு மதிப் பொருள்கள் என்றும், கொங்குநாட்டுத் தங்கமும்,

பாண்டியநாட்டு முத்தும், மேற்குக்கரைச் சந்தனமும், குடகு நாட்டு மிளகும், தமிழ்நாட்டு முக்கிய ஏற்றுமதிப் பொருள் களென்றும் நாம் அறிகின்றோம்.

பழங்காலத்திலேயே தமிழர்கள் கடல் கடந்து வியா-பாரம் செய்தார்கள் என்றும், ஏறக்குறைய கி. மு. 4000-ல் அவர்கள் கால்டியா, ஈரான், ஈராக் முதலிய தேசங்களோடும், பாபிலோன், டயர் முதலிய பட்டணங்க ளோடும், தந்தம், தங்கம், வெள்ளி, உயர்ந்த மரங்கள் என்ற இவைகளிலும், குரங்குகள், மயில் இவைகளிலும் தங்கள் வியாபாரத்தைப் பெரிதும் பெருக்கியிருந்தார்கள். தொல் காப்பியர் காலத்தில் கடல் கடந்து செல்வது தமிழர்களுக்கு பெரும் வழக்கமாக இருந்தது. கி. மு. 4-ம் நூற்றாண்டி லேயே மெகஸ்தனீஸ், தமிழர்கள் கிரேக்க நாட்டுடன் செய்த வியாபாரத்தைக் குறிக்கின்றார். கி. மு. முதல் நூற்றாண்டில் தமிழர்களுடைய வியாபாரம் ரோம சாம்ராச்சியத்தில் பரவிற்று. சங்ககால இந்திய-ரோமானிய வாணிகம் பலரா லும் இப்பொழுது பேசப்படுகின்றது. கிரேக்கரும், ரோமரும் தமிழ்நாட்டில் பல இடங்களில் வாணிகச் சாலைகளை நிறுவினார்கள். மதுரை, புகார், புதுச்சேரி, கரூர், பேரூர், கோயம்புத்தூர், பொள்ளாச்சி, காங்கயம், தாராபுரம் முதலிய இடங்களில் இத்தகைய ரோம வாணிகச் சாலைகள் இருந்ததென்பதற்கு சங்கநூற்களும், அங்குப் பெருமளவில் கிடைத்த ரோமானிய நாணயங்களும் சான்று கும். அண்மையில் புதுச்சேரியில் ரோமர்கள் அக்காலத்தில் உபயோகித்து வந்த கண்ணாடிப் பாத்திரங்கள் உடைந்த நிலை யிலும், உடையாத நிலையிலும் பல தோண்டியெடுக்கப் பட்டன. தமிழ் நாட்டின் வெளிநாட்டு வியாபாரம் இவ்வளவு உயர்ந்த நிலையில் அக்காலத்தில் இருந்ததென்றால், அக்காலத் தின் உள்நாட்டு வியாபாரத்தின் பெருமையைப் பற்றி நாம் பேச வேண்டியதில்லை. "மழைக்காலம் வரும்போது கடல் நீர் மேகமாக மாறி மறுபடியும் மலைகள் மீது மழையாகப் பொழிந்து கடல்நோக்கிச் செல்வதுபோல, விற்பனைப்

பொருள்கள் பல அக்காலத்தில் நிலத்திலிருந்து கடலுக்கும், கடலிலிருந்து நிலத்துக்கும் எடுத்துக் கொண்டு செல்லப் பட்டன" என்று பட்டினப்பாலை ஆசிரியர் கூறுகின்றார். அக்காலத்திய உள்நாட்டு வியாபாரம் பட்டணங்களிலன்றிக் கிராமங்களிலும் பரவியிருந்தது. சங்க நூற்களிலே வணிகர் வியாபாரப் பொருட்களை வண்டிகளில் ஏற்றி கிராமங் களுக்குச் செல்வதும், அவ் வண்டிகள் பாரம் தாங்காமல் இருசு முறிவதும் வெகு அழகாகக் கூறப்பட்டிருக்கின்றது. இவ் வண்டிகள் ஒன்று சேர்ந்து ஒன்றன்பின் ஒன்ருகச் சென்றன என்றும், இவ்விதமான வண்டித் தொடருக்கு வண்டிச்சாத்து என்ற பெயர் இருந்தது என்றும் நாம் அறிகின்ரும்.

இவ்விதமாய் வளம்பெற்ற தமிழ்நாட்டின் நாகரிகமும் வளம்பெற்றிருந்தது. மக்கள் செல்வாக்கும், சிறப்பும் கொண்டிருந்தார்கள். புகார் நகரின் நெடுநிலை மாளிகைகள், அம்மாளிகைகளில் விளங்கிய தடாகங்கள், செயற்கை ஊற்றுகள், பூந்தோட்டங்கள், சுவரில் பொறித்த படங்கள், பிறவும் அக்காலத்திய நாகரிகத்தை எடுத்துக் காட்டுகின்றன. வீதிகளில் பல, பந்தலோடு திகழ்ந்தன. மக்கள் அழகுற ஆடை கள் அணிந்து, அருங்கலம், கிங்கிணி, குறுவளை, பொற் றளிர் என்ற எண்ணற்ற அணிகள் அணிந்திருந்தார்கள். தமிழ் நாட்டில் அக்காலத்தில் பௌத்தம், சமணம், சைவம், வைணவம் என்ற இவற்ரேடு, தமிழருக்கே உரிய, முருகன், காளி என்ற தெய்வங்களும், சாத்தன், சதுக்க பூதங்கள், நாடுகாத்த தெய்வம், காமவேள் முதலிய தெய்வங்களும் சங்க நூல்களில் பேசப்படுகின்றன. ஆயினும் இக்காலத் தைப்போல அக்காலத்தில் சமய வேறுபாடுகள் காணப்பட வில்லை. அக்காலத்திலும் கோயில்களிலும், கோட்டங்களி லும் இக்காலத்தைப் போலவே வழிபாடுகள் நடந்தன.

சங்ககால வரலாற்றை முடிக்குமுன் அக்காலத்திய அரசியல் முறையைப்பற்றி ஒரு சிறிதாகிலும் கூறவேண்டும். அக்கால மன்னர்கள் போரிலே எத்தகைய ஊக்கம் காட்டினர்

களோ அதைவிட இன்னும் அதிகமான ஊக்கத்தை நல்ல முறையில் அரசாட்சி செய்வதிலே காட்டினர்கள் என்று சொல்லவேண்டும். பெரிய நாட்டைக்கட்டி ஆளுவதைவிட சிறிய நாட்டைத் திறம்பட ஆளுவது மேல் என்பது அக் காலத்து மன்னரது கொள்கை என்பதை அவர்கள் பெரும் வெற்றிகள் கொண்டிருந்தபோதிலும் வெற்றிகண்ட இடத்தி லெல்லாம் தங்கள் அரசைச் செலுத்தாமல் தங்கள் நாட்டி லேயே கவனத்தைச் செலுத்தி வந்தது நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. நல்ல முறையாக அரசாங்கக் காரியங்களைக் கவனிக்க, அரசனுக்கு உதவியாக ஆயங்களும், மன்றங் களும் அக்காலத்திலிருந்தன. ஒவ்வொரு கிராமத்தின் காரியங் களையும் கவனிக்க அவை ஒவ்வொன்றிலும் மன்றங்களென்ற சபைகள் திகழ்ந்தன. தலைநகரிலே அரசனுக்குதவியாக எண்பேராயம், ஐம்பெருங்குழு என்ற இரண்டு ஆயங்கள் இருந்தன என்பதைச் சிலப்பதிகார ஆசிரியர் கூறுகின்றார். ஆயினும் இவைகளில் யார் யார் அங்கம் வகித்தார்கள் என்பதைப் பற்றி அந்நூல் உரையாசிரியர் காலந் தொட்டு இன்றுவரை கருத்து வேறுபாடு இருந்து கொண்டுதான் வருகிறது. ஆயினும் பொதுவாகக் கூறு மிடத்து, முதலில் குறித்தது மந்திரிகள் சபை என்றும், இரண்டாவது குறித்தது மக்கள் சபை என்றும் நாம் ஒரு வாறு ஊகிக்கலாம். அரசன் செங்கோல் முறை தவறினல் அதைத் தன் கண்ணீரால் அறிவித்த பாவை ஒன்று புகாரில் இருந்தது என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து, அக்காலத் தில் செங்கோல் முறை எங்ஙனம் பேணப்பட்டுவந்தது என்பது தெற்றென விளங்கும். கோவலனை அநியாயமாகக் கொல்லுவித்ததற்காகத் தன்னுயிரைவிட்ட நெடுஞ்செழி யனது ஆட்சி இதை நமக்கு மறுமுறையும் உணர்த்துவதாக உள்ளது. சங்க காலத்தில் மன்னன் கொண்ட இறைகள், நிலவரி, சுங்கம், சிற்றரசரின் கப்பம் ஆகியவையாகும். சுங்கத்தை வசூலிப்பதற்காகப் புகார்த் துறைமுகத்தில் பல அரசாங்க ஊழியர்கள் வேலை செய்து வந்தனர் என்பதைப் பட்டினப்பாலை நமக்கு அறிவிக்கின்றது. அரச சபைகளும்,

மன்றங்களும் மக்கள் குறையைத் தீர்த்து நியாயம் வழங்கின. தன்பாற் காதலுடைய தலைவியைப் பெறுதற்கும் அக்காலத்தில் மக்கள் அறங்கூறும் அவையத்தை நாடினார்கள் என்று நாம் அறிகின்றோம். இந்த அவைகளில் நியாயம் நன்கு வழங்கப்பட்டது என்பதை நப்பசலையார் என்ற புலவர், " அறந்துஞ்சும் உறந்தை " என்று கூறுவதாலும்,

" மறங்கெழு சோழ ருறந்தை யவையத்தறநின்று நிலையிற்றாகலின் " என்பதாலும் அறியலாம்.

10. சங்க காலப் பண்பாடு


சங்ககாலப் பண்பாட்டைப்பற்றி இப்பொழுது எங்கும் பெரிதும் பேசப்படுகின்றது. சங்க காலப் பண்பாட்டிற்கு இரு கண்களாய்த் திகழ்ந்தவை அக்காலத்திய வீரமும், காதலுமே ஆகும். சங்க நூல்களிலே பேசப்படும் பல சண்டைகளிலும் சிறந்த வீரச் செயல்களைத் தமிழ் வீரர்கள் காட்டினார்கள் என்று நாம் அக்கால நூல்களிலே படிக்கின்றோம். ஆடவரல்லாமல், பெண்களும் மிகுந்த வீரம் செறிந்தவர்களாக இருந்தார்கள். அக்காலத்திய வீரத் தாய்மார்கள் போருக்குச் சென்ற தங்கள் மக்கள் புறங்காட்டி ஓடுவதை விடப் போரிலே வீழ்ந்து இறப்பதே நன்று என்று எண்ணியிருந்தார்கள் என்பதற்கும், வீரத்தாய், தன் கணவன், மக்கள், எல்லோரையும் சண்டையில் இழந்த பின்னும் கடைசியாக இருந்த தன்னுடைய ஒரு மகனையும் உளமகிழ்ச்சியோடு போருக்கு அனுப்பினாள் என்பதற்கும் சங்க நூற்பாட்டுகளிலே சான்றுகளிருக்கின்றன.

அதேபோல் சங்ககாலக் காதலைப் பற்றியும் கணக்கிலடங்காத குறிப்புகள் இருக்கின்றன. சங்க நூல்களிலே வரும் காதற் சித்திரங்களையும், காதல் பேச்சுகளையும் நாம் படிக்கும்போது அக்காலத்து மக்கள் காதலிலேயே மூழ்கியிருந்தார்களோ என்ற ஐயப்பாடும் எழத்தோன்றும். ஆனால் உண்மையிலேயே அக்காலத்து மக்கள் காதலைப்



அரிக்கமேட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பழங்கால மண்பானை.
(புதுவை புதைபொருள் ஆராய்ச்சியாளர் உதவியது)

சங்ககாலத் தமிழகம்



போற்றியதற்கு அவை அறிகுறியே அன்றி, வேறில்லை. பெண்கள் அக்காலத்தில் புனிதமானவர்களாகப் போற்றப் பட்டு வந்தார்கள் என்பதற்கு சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்கள் சான்று பகர்கின்றன. அகப்பாட்டுகள் பலவற்றிலும் பெண்களுடைய மனத்திட்பம் மிக நன்றாக எடுத்து ஓதப்படுகின்றது. இல்வாழ்க்கை நடத்துவதற்கு உண்மைக் காதல் அவசியம் என்பதும், அதை அறிந்த பின்பே ஆணும், பெண்ணும் இல்வாழ்க்கையில் கலந்தார் களென்பதும், அதற்காகவே அவர்கள் அடிக்கொருதரம் சந்தித்தார்களென்பதும் அகப்பாட்டுகளின் மூலம் நமக்குத் தெரியவருகின்றன. அக்காலத்தில் காதலுக்குப் பிறகே மணம் நடந்தது. அக்காரணம் பற்றியே திருவள்ளுவர் கூறுவதுபோல் அக்கால இல்வாழ்க்கை பண்பும் பயனும் உடையதாயிற்று. கணவன் வெளிநாடு சென்றாலோ அல்லது போர்ப்புறத்து சென்றாலோ அவர்கள் வாழ்க்கைத் துணைவிகள் உடல் நலம் குறைந்தனர் என்றும், ஏழை களுக்கு வழங்கி, தலைவன் அதிவிரைவில் மனை திரும்புமாறு வேண்டி நின்றனர் என்றும் சங்க நூல்கள் கூறுகின்றன. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என்ற மணி மகுட மன்னன் போரிலே எதிர்த்தவனைத் தோற்கடிக்காவிட்டால் அரசியார் தன்னைவிட்டுப் பிரிந்துபோகக் கடவள், என்று சபதம் கூறுவ தைக்கொண்டு அக்காலத்தில் கணவன், மனைவிமார்கள் எத் தகைய ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள் என்பது பெறப்படும்.

சங்க கால மக்களிடையே அன்பு நிலவியது. கணியன் பூங்குன்றன் என்ற அக்காலத்துப் புலவர் ஒருவர் கூற்றுப் படி நன்மையும் தீமையும் பிறரால் நமக்கு ஏற்பட முடியாது. ஆகையால் எல்லோரும் ஒருவருக்கொருவர் நண்பர்கள் என்ற பெரும் உண்மையை அவர்கள் அறிந்திருந்தார்கள். பிறரிடத்து அவர்கள் காட்டிய அன்பும், நம்பிக்கையும் திருவள்ளுவருடைய குறள் நன்றாக எடுத்துக்காட்டுகின்றது. நாம் காண ஒருவன் நஞ்சு பெய்தாலும் அவன் மனம் கோணா மல் இருக்க அதை உண்ண வேண்டுமென்று வள்ளுவர்

கூறுகின்றார். மற்றொரு குறளில் விருந்தினரை முகம் கோணாது நடத்தவேண்டும் என்பதைக் குறிக்க, அணிச்ச மலரை உதாரணம் காட்டுகின்றார். அணிச்சப் பூ முகர்ந்தால் தான் குழையும்; ஆனால் குழைவதுபோல் நமது இன்முகம் ஒரு சிறிது மாறி நோக்கினும் விருந்தினர் மனம் மிக வேதனைப்படுமென்று குறிக்கின்றார். இந்தப் பரந்த அன்புக் கொள்கையில் இருந்துதான் கணவன், மனைவி இடையே இருக்கவேண்டிய காதல் மிக உயர்வாகச் சங்க நூல்களிலே பேசப்படுகின்றது.

சங்க காலத்தின் உயர்ந்த நாகரிகத்திற்கு அக்காலத்துக் கலைகளின் உயர்வே மற்றொரு எடுத்துக்காட்டாகும். ஓவியம் எழுதுதல், ஆடல் பாடல் இவற்றில் அக்கால ஆடவரும், பெண்டிரும் உயர்ந்த நிலையை அடைந்திருந்தார்கள் என்பதற்கும் அக்கால நூல்களிலே பல சான்றுகள் கிடைக்கின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற நூல்களில் பல இன்னிசை வாத்தியங்கள் குறிக்கப்படுவதோடு, சிலப்பதிகாரம் என்ற நூலிலே ஆடலின் அமைதி நன்கு குறிக்கப்படுகின்றது. சிறந்த ஓவியங்கள் அக்காலத்தில் தீட்டப்பட்டன என்பதுபற்றி நமக்குச் சந்தேகம் வேண்டியதில்லை. வண்ணப் பூக்கள் எழுதப்பட்ட துகில்கள், அரசனது கட்டிலின்மேல் அமைக்கப்பட்ட மேற்கட்டு, சுவர்களில் தீட்டப்பட்ட ஓவியங்கள் என்பனபற்றிய பல குறிப்புகள் சங்க நூற்களில் இருக்கின்றன. மணிமேகலை என்ற நூலில் புகார் பட்டினத்துச் சுவர்களிலே இருந்த வண்ண ஓவியங்களும், அவற்றைப் பார்த்து வியந்த—அந்நகருக்குப் புதிதாய் வந்த — மக்களைப்பற்றியும் பேசப்படுகின்றன. புகார், மதுரை முதலிய நகரங்களில் நன்றாகத் தீட்டப்பட்ட ஓவியங்கள் விற்பனைக்கு இருந்தன என்பதும், அவைகள் பொருட்காட்சி சாலைகளிலே வைக்கப்பட்டு இருந்தன என்பதும் சங்க கால நூல்கள் மூலம் நமக்குத் தெரிகின்றன.

11. புது யுகம்

கி. பி. 4-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தென்னிந்தியாவில் முத்தமிழ் மன்னர் மறைந்து, பல்லவ, சாளுக்கிய, இராட்டிரகூட, கங்க அரசர்கள் தலையெடுத்தனர். இவர்கள் தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒரு பெரும் மாற்றத்தை விளைவித்தார்கள். சங்க காலத்தில் வடநாட்டு மன்னர்கள் இடைவிடாமல் தென்னுட்டின்மேல் படையெடுத்தார்கள் என்று முன்னரே தெரிவித்தோம். இவர்களைத் தமிழ்நாட்டு மன்னர்கள் தங்கள் வீரத்தால் எதிர்த்துத் தோற்கடித்தார்கள். ஆனல் நாளுக்கு நாள் தமிழர் வீரம் குன்ற வடநாட்டு மன்னர்கள், தமிழ் நாட்டில் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தினர்கள் என்பதே சாலவும் பொருந்தும். இக்காலத்தில் தமிழ் நாட்டில் தங்கள் ஆட்சியை நிறுவிய இராட்டிரக்கூட, கங்க மன்னர்கள் வடக்கே இருந்து வந்தவர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனல் பல்லவரைப்பற்றி மட்டும் ஒன்றும் உறுதியாய்க் கூறமுடியாது என்று பல வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றுர்கள். இதைப் பற்றி நாம் இங்கு அதிகமாக விவாதிக்கத் தேவையில்லை. இவர்கள் வரலாற்றின் தலையாய மூன்று கூறுகளை மட்டும் யோசித்தால் இவர்களும் வடவர்களே என்பது புலப்படும்: *(1)* இவர்கள் வடமொழிக்குப் பேராதரவளித்தனர். *(2)* முத்தமிழ் மன்னருக்கும், பல்லவருக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. *(3)* பல்லவரைப்பற்றி தமிழ் நூல்கள் அதிகமாகக் கூறுவதில்லை, கி. பி. மூன்றும் நூற்றுண்டின் மத்தியில் இவர்கள் சாதவாகன மன்னர்களின் பிரதிநிதிகளாக கிருஷ்ணு, தென்பெண்ணை என்ற ஆறுகள் பாயும் பகுதியில் இருந்தனர் என்பது சாசனங்கள் வாயிலாக நாம் அறியும் உண்மை.

ஏறக்குறைய கி. பி. 250-ல் சாதவாகன அரசு வீழ்ச்சியுற்றது. அச்சமயம் அவர்களுக்கடியில் அவர்தம் பிரதிநிதியாக இருந்துவந்த பல்லவர் போன்றவர்கள் தம்

சுய ஆட்சியை நிறுவிக்கொண்டார்கள். அப்பொழுதுதான் பல்லவர்கள் காஞ்சியைப் பிடித்துத் தங்கள் அரசாட்சியை நிறுவி இருக்கவேண்டும். இதற்குச் சான்ருகப் பல்லவர்களில் முதல் மன்னனுன பப்பதேவன் என்பவன் ஆண்ட நாடு பாலாற்றிற்கும் கிருஷ்ணுவுக்குமிடையே இருந்தது. இவன் தங்க நாணயங்களேயும், ஒரு இலட்சம் ஏறுகளேயும் தன்னுடைய குடிகளுக்கு வழங்கினுன், என்று அவன் சாசனமே கூறுகிறபடியால் இவன் தன் ஆட்சியைத் தமிழ் நாட்டில் தொடங்குமுன் தன் குடிகளே மகிழ்விக்க இவ்விதம் செய்தான் என்பதை நாம் ஒருவாறு ஊகிக்கக்கூடும்.

தமிழ் நாட்டில் ஆண்ட பல்லவ மன்னர்களில் முக்கியமானவர்கள் சிவஸ்கந்த வர்மன், விஜயஸ்கந்த வர்மன், முதல் ஸ்கந்த வர்மன், இரண்டாம் ஸ்கந்த வர்மன், முதல் குமார விஷ்ணு, இரண்டாம் சிம்ம வர்மன், விஷ்ணுகோபன், மூன்ரும் ஸ்கந்த வர்மன் என்பவர்கள். இவர்கள் ஆண்ட காலம் ஏறக்குறைய கி. பி. 300முதல் 550 வரை என்று சொல்லலாம். இவர் அரசாட்சியின் காலத்தில் நடந்தவற்றில் தலேயாயது, களப்பிரர் எழுச்சியாகும். இதன் காரணமாய்ப் பல்லவர்கள் தங்கள் தலேநகரையே விட்டுப்போக நேர்ந்தது. களப்பிரர் யார், எங்கிருந்து வந்தவர்கள் என்ற கேள்விகளுக்கு, முடிவான விடை இல்லேயென்பது வரலாற்று ஆசிரியரின் முடிவாகும். இது எங்ஙனமாயினும் இவர்கள் தமிழர் என்பது மட்டும் திண்ணம். தொண்டை நாட்டின் வடபகுதியில் இவர்கள் சிறந்த பராக்கிரம சாலிகளாக வாழ்ந்தார்கள். இவர்கள் தலேவர்களில் ஒருவனுன புல்லி என்பவனேப்பற்றி புறநானூறு குறிக்கின்றது. பல்லவர்கள் இவர்களேத் தாக்கியதினுலோ, அல்லது வேறு எக்காரணத்தாலோ இவர்கள் பல்லவரைத் தாக்கித் தோற்கடித்திருக்க வேண்டும். இவ் வெற்றியைத் தொடர்ந்து எஞ்சி நின்ற சோழரையும், பாண்டியரையும் தோற்கடித்து ஏறக்குறைய கி. பி. 400-ல் களப்பிரர் தமிழ்நாடு முழுவதையும் தங்கள் ஆட்சியின்கீழ் கொண்டு வந்தார்கள். கி. பி. 600-ல்

பாண்டியன் கடுங்கோன் இவர்கள்மேல் வெற்றி கொண்டான். அவர்களிடமிருந்து பல்லவராட்சியை மீட்ட பெருமை, கி. பி. 590 முதல் 600வரை ஆட்சி புரிந்த சிம்ம விஷ்ணு என்ற பல்லவ மன்னனைச் சாரும். இவன் களப்பிரரை மட்டுமல்ல, அக்காலத்து பாண்டிய சோழமன்னர் களையும் வென்று பல்லவர் எல்லையைத் தெற்கே காவிரிக்கரை வரை விரிவாக்கினன். இங்ஙனமே பல்லவப் பேரரசு தோன்றலாயிற்று.

12. பல்லவ அரசர்கள்

பல்லவப் பேரரசு எழுந்த காலத்தில் தமிழ் நாட்டின் அரசியல் நிலை சங்க கால அரசியல் நிலைக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. சங்க காலச் சிற்றரசர்களில் ஏறக்குறைய எல்லோருமே பெயரின்றி மறைந்தார்கள். புதுக்கோட்டைப் பிரதேசத்திலே இருக்குவேள் என்ற சிற் றரசன் மட்டும் வெள்ளாற்று வெளியில் தனது ஆட்சியை நடத்திவந்தான். முத்தமிழ் மன்னர்களில் சோழரும், சேரரும் மறைந்தார்கள். கடுங்கோன் நிறுவிய பாண்டிய அரசு மட்டும் தலைதூக்கி இருந்தது.

பல்லவர்கள் வடநாட்டவர் என்பதை நாம் முன்னரே குறித்தோம். அவர்களோடு இராட்டிரக்கூடர், கங்கர் என்ற அரசர்கள் மைசூர் பிரதேசத்தின் வழியாக தமிழ்நாடு நுழைந்து கொங்கு நாட்டில் தங்கள் அரசை நிறுவினர்கள். அதே சமயத்தில் பாணர்கள் வட ஆர்க்காட்டுப் பிரதேசத்தில் தங்கள் அரசாட்சியை நிறுவினர்கள். கொங்கு நாட்டில் ஆண்ட இராட்டிரக்கூட மன்னர்களில் முதன்மையானவன் வீரராகவச் சக்கரவர்த்தி என்பவன். இவன் கி.பி. 250 முதல் 270 வரை அரசாண்டவன் என்று தெரிகின்றது. இவன் தங்க நாணயங்களை அடித்ததாக, "கொங்குதேச இராசாக்கள்" என்ற கர்ண பரம்பரை நூல் கூறுகின்றது. இதற்குச் சான்றுகக் கொங்கு நாட்டில் பல இடங்களில் "வீரராயன் பணம்" என்று கூறப்படும் சிறிய தங்க நாணயங்கள்

நிலத்தில் புதைந்திருக்க இன்றும் காண்கின்றோம். இவர்கள் தலைநகர் கொங்கு நாட்டில் தாராபுரத்தில் இருந்ததாகக் கொள்ள வேண்டும்.

கொங்கு நாட்டில் இராட்டிரக்கூட ஆட்சி ஏறக்குறைய கி. பி. 400-ல் முடிந்தது. அதைப் பின்தொடர்ந்து கங்கர்கள் தங்கள் ஆட்சியை அங்கே நிறுவினார்கள். ஏறக்குறைய இருபது கங்க மன்னர்கள் தங்கள் ஆட்சியை அந்தப் பிரதேசத்தில் கி. பி. 400 முதல் 870 வரை அரசாண்டார்கள். கங்கர்கள் இவ்விதமாக 400 ஆண்டுகள் தமிழ்நாட்டின் ஒரு பகுதியில் அரசர்களாக வீற்றிருந்தார்கள். இவர்கள் தலைநகரமும் தாராபுரத்திலேயே இருந்திருக்க வேண்டுமென்றும், அதற்கண்மையிலுள்ள காங்கயத்தில் அவர்கள் படைகள் இருந்தன என்றும் யூகிக்கப்படுகின்றன. 'காங்கயம்' என்ற பெயரே கங்கர்களைப்பற்றி வந்தது. "கவுண்டன்" என்ற கொங்கு நாட்டுப் பெயர் இவர்கள் வழியாகவே தமிழ்நாடு வந்தது. இராட்டிரகூடர், கங்கர் என்ற மன்னர்கள் தமிழ்நாட்டில் ஆண்டபொழுது சமண மதத்திற்கு ஒரு புது வலிமை ஏற்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பேரூர், விஜயமங்கலம் என்ற ஊர்களில் சமண ஆலயங்கள் ஏற்பட்டன. இவ்வித அரசியல் சூழ்நிலையில்தான் பல்லவப் பேரரசர்கள் தங்கள் ஆட்சியைத் தமிழ்நாட்டில் நடத்தினார்கள். சிம்ம விஷ்ணுவின் மகனான மகேந்திர வர்மன் இப் பேரரசர்களில் முதல்வனாவான். இவன் கி. பி. 600 முதல் 630 வரை அரசாட்சி செய்தான். இவன் மேலைச் சாளுக்கிய மன்னன் புலிகேசியிடமிருந்து தன் நாட்டைக் காத்து, பல்லவ நாட்டின் எல்லையைக் காஞ்சிபுரத்திலிருந்து தெற்கே திருச்சிராப்பள்ளி வரை விரிவாக்கினான். மகேந்திரன் அறிவிற் சிறந்தவன்; இலக்கியம், நாட்டியம், ஓவியம் முதலிய கலைகளில் வல்லவன். இவன் தமிழ்நாட்டிற்குச் செய்த பெரும்பணி கற்கோயில்கள் எடுத்ததாகும். திருச்சிராப்பள்ளியிலுள்ள மலைக்கோட்டைக் கோயில் இம் மன்னனுடைய பணிகளில் ஒன்றாகும்.

மகேந்திரன் மகன் முதலாம் நரசிம்மன் காலத்தில் மேலைச் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி மறுபடியும் காஞ்சியின்மேல் படையெடுத்தான். நரசிம்மன் அவனைத் தோற்கடித்து அவனது தலைநகர் வரை அவனைத் துரத்திச்சென்று அவனைக்கொன்று வாதாபியைக் கைக்கொண்டான். அன்று முதல் அவன் "வாதாபிகொண்ட நரசிம்மன்" எனப்பட்டான். இந்த வாதாபிப் படையெடுப்பின்போது தான் பரஞ்ஜோதி முனிவர் பல்லவர் படைத்தலைவராக இருந்தார் என்று பெரிய புராணம் கூறுகின்றது. நரசிம்மன் வாதாபியிலிருந்தே இப்போது தமிழ்நாட்டில் எங்கும் வழங்கும் விநாயக வணக்கத்தை இங்குக் கொண்டு வந்ததாக அறிஞர்கள் கூறுகிறார்கள். இக் காரணம் பற்றித்தான் விநாயகர் இன்றும் தமிழ்நாட்டில் "வாதாபி கணேசன்" என்று போற்றப்படுகின்றார்.

இவன் ஆட்சியின் அடுத்த சிறப்புச் செய்தி மாமல்லபுரக் கற்கோயிலாகும். இவன் காலத்தில்தான் சீன யாத்திரிகர் யுவான்-சுவாங் பல்லவத் தலைநகராகிய காஞ்சிக்கு வந்தார். அப்பொழுது மாமல்லபுரச் சிற்பங்களும், இரதங்கள் என்று இப்பொழுது நாம் கண்டு மகிழ்பவையும் உருப்பெற்றுக் கொண்டிருந்தன.

நரசிம்மனுக்குப்பின் வந்த இரண்டாம் மகேந்திர வர்மனின் ஆட்சிக் காலம் அமைதியாகக் கழிந்தது. ஆனால் அவன்பின் போந்த முதலாம் பரமேசுவரன் காலத்தில் பல்லவச் சாளுக்கியப் போர் மறுபடியும் தொடங்கிற்று. அப்பொழுது சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தியன் காஞ்சியைக் கைப்பற்றித் திருச்சிராப்பள்ளிவரை சென்று, உறையூரில் தங்கினான். ஆனால் பரமேசுவரவர்மன் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், இலால்குடி தாலுக்காவிலுள்ள பெருவள நல்லூரில் சாளுக்கியரைத் தோற்கடித்தான்.

பரமேசுவர வர்மனுக்குப்பின் பட்டமெய்திய இரண்டாம் நரசிம்ம வர்மன் காலத்தில் பல்லவ நாடெங்கும் அமைதி நிலவியது; கலை ஓங்கியது. காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலையும், மாமல்லபுரக் கடற்கரைக் கோயிலையும், தான மலைக் கோயிலையும் எடுத்தவன் இவனே ஆவான். பெயர் பெற்ற வடமொழிப் புலவர் தண்டின் என்பவர் இவனது அரண்மனையில் வாழ்ந்து "காவிய தர்சனம்" என்ற நூலை இயற்றினர். இதற்குப் பிறகு பல்லவ அரசாட்சியின் வலிமை குன்றத் தொடங்கியது. பாண்டியர் வலிமை ஓங்கலாயிற்று. கி. பி. 710-ல் சிம்ம விஷ்ணு குலம் ஒழிந்து, இரண்டாம் நந்திவர்மனைத் தலையாகக் கொண்ட வேருெரு பல்லவ குலம் ஆளத் தொடங்கியது. கி. பி. 740-ல் சாளுக்கிய மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தியன் காஞ்சியைக் கைப்பற்றினன். அதே சமயத்தில் முதலாம் இராஜசிம்மன் என்ற பாண்டியனுக்கும் நந்திவர்மனுக்கும் போர் மூண்டது. இந்தச் சமயத்தில் இராட்டிரக்கூடரும், மேலைக்கங்கரும் பல்லவர்மீது படையெடுத்தார்கள். நந்திவர்மன் இராட்டிரகூடரோடு சமாதானம் செய்துகொண்டு, அவர்கள் இளவரசியையும் மணந்துகொண்டான். இவ்வளவு பகைவர்களையும் எதிர்த்து வெற்றிகண்ட காரணத்தால் இம் மன்னன் "பல்லவ மல்லன்" என்ற பெயர் பெற்ருன்.

இவனுக்குப்பின் பட்டமெய்திய இவன் மகன் தந்திவர்மன் காலத்திலும் இராட்டிரகூடரும் பாண்டியரும் பல்லவரோடு சண்டை செய்தனர். அப்பொழுது ஆண்ட வரகுண பாண்டியன், பல்லவராட்சிக்குட்பட்டிருந்த காவிரி வெளியைக் கைப்பற்றினன். தந்திவர்மனுக்குப் பிறகு பட்டமெய்திய மூன்ரும் நந்திவர்மன், வந்தவாசிக்குப் பக்கத்தில் தெள்ளாறு என்ற இடத்தில் பாண்டியனைத் தோற்கடித்து, "தெள்ளாறு எறிந்த நந்தி" என்ற பட்டம் பெற்ருன். இவனுக்குப் பிறகு பட்டமெய்திய நிருபத்துங்க வர்மன், அபராஜிதன் என்போர் பாண்டியரைப் பல இடங்களில் தோற்கடித்தனர். ஆனல் அப்பொழுது புகழுக்கு வந்துகொண்டிருந்த சோழ

இளவரசன் ஆதித்தியன் அப்பராஜிதனைத் தோற்கடித்துத் தொண்டைநாட்டைச் சோழநாட்டோடு சேர்த்துக் கொண்டான். இத்துடன் பல்லவர் ஆட்சி முடிவடைந்தது. இது கி. பி. 890-ல் நடந்தது.

13. பல்லவர் காலம்

கி. பி. 4-ம் நூற்றுண்டிலிருந்து 9-ம் நூற்றுண்டு வரை உள்ள ஐந்து நூற்றுண்டுகளில் தமிழ்நாட்டு வரலாறு ஒரு புதுப்பாதையில் ஓட ஆரம்பித்தது. இக் காரணம் பற்றியே பல்லவர் ஆட்சியை ஒரு புதுயுகம் என்று குறித்தோம். நாட்டில் புதுக் கலைகள் வளர ஆரம்பித்தன; சமயக் கொள்கைகள் விளக்கம் பெற்றன; தமிழ் இலக்கியம் புது உருப்பெற்றது; புது அரசர்கள் தம் நாட்டின் நாகரிகத்தைத் தமிழ் நாட்டில் புகுத்தினர்.

சிற்பம், கட்டடச் சிற்பம், ஓவியம் முதலிய பல கலைகளும் பல்லவர் காலத்தில் வளர்ச்சியுற்றன. சங்க காலத்துக் கோயில்கள் மண்ணாலும், மரத்தாலும் கட்டப்பட்டவை. பல்லவர் காலத்தில்தான் முதற் கற்கோயில்கள் எழுந்தன. பல்லவ மகேந்திர வர்மன் முதலில் மலைகளைக் குடைந்து கோயில்களை எழுப்பினன். இத்தகைய கோயில்களை திருச்சிராப்பள்ளியிலும், வல்லத்திலும், மாமண்டூரிலும் இன்றும் நாம் காண்கின்றோம். பிறகு ஒரே கல்லாலாகிய சிறிய கோயில்களை எழுப்பினன். இவைகளே இப்பொழுது நாம் மாமல்லபுரத்தில் காணும் இரதங்களாகும். இவனுக்குப் பின்வந்த நரசிம்ம வர்மன் கற்களைக்கொண்டு கோயில்களை எழுப்பும் வழக்கத்தை அமலுக்குக் கொண்டு வந்தான். இவ்விதமாய்த் தமிழ்நாட்டில் முதன் முதலில் எழுந்த கற்கோயில், மாமல்லபுரக் கடற்கரைக் கோயிலாகும். காஞ்சியிலுள்ள கைலாயநாதர் கோயில் முதலியவற்றை மன்னன் நரசிம்மவர்மன் கட்டுவித்தான். புகழ்மிக்க தென்னாட்டுக் கோயில்கள் தென்னாட்டுச் செல்வ

மாகும் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். இவற்றைப் பிற்காலச் சோழர்கள் பெருக்கினர்கள். ஆயினும் பல்லவரையே நாம் தமிழ்நாட்டுக் கோயில்களின் பெற்றோர்கள் என்று கொள்ளவேண்டும்.

பல்லவர்கள் சிறந்த சிலைகளையும் செய்தனர்; பல ஓவியங்களையும் தீட்டினர். இவற்றிற்கு, நாம் மாமல்லபுரத்தில்காணும் அற்புதச் சிலைகளும், சிற்றண்ணல்வாயில் ஓவியங்களும் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கின்றன. இன்னும் இசை, நாடகம், இலக்கியம் என்றவைகளும் பல்லவர் காலத்தில் தமிழ்நாட்டில் வளர்ந்தன. குடுமியாமலைக் குகைகளில் ஒன்றில், மகேந்திர வர்மனின் ஆணைப்படி பொறிக்கப் பட்ட இசைச் சாசனம் ஒன்று பல சுரங்களின் தன்மையை எடுத்துச் சொல்லுகின்றது. பாஷர் நாடகங்கள் நடிப்புக் கேற்ற முறையில் இரண்டாம் நரசிம்ம வர்மன் காலத்தில் எழுதப்பட்டவை. மன்னன் மகேந்திரவர்மன், "மட்ட விலாச பிரஹசன" என்ற வடமொழி நாடகத்தைத் தாமே எழுதினர். பல்லவர் காலத்தில் எழுந்த இலக்கிய நூல்கள் பலப்பல. இன்னும் திக்நாகர் எழுதிய "நியாயப் பிரவேசம்", பாரவி எழுதிய "கிர்தார் ஜுனியா", பெருந்தேவனர் எழுதிய 'பாரதம்' இன்னும் நந்திக் கலம்பகம், தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் என்ற தமிழ் நூல்களும் இக் காலத்தில் தோன்றியவையே. இவற்றையெல்லாம் ஒருங்கே நோக்குமிடத்து, கலைவளர்ச்சிக்குப் பல்லவர் தமிழ்நாட்டுக்கு எத்தகையத் தொண்டு புரிந்துள்ளார்கள் என்பது நமக்குத் தெரியாமற்போகாது. பல்லவர் காலத்தில் அவர்கள் தலைநகராகக்கொண்ட காஞ்சிபுரம், கலைக்கு நிலைக்களனக இருந்தது. இதைப் பற்றியே அக்காலத்தில் வாழ்ந்த திருநாவுக் கரசு நாயனர் தமது தேவாரமொன்றில், "கல்வியே கரையில்லாக் காஞ்சி" என்று குறித்தார். காஞ்சியிலே அப்பொழுது கல்லூரி ஒன்று இருந்ததென்றும், அதற்கும் நாளந்தாக் கல்லூரிக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததென்றும் கி. பி. 7-ம் நூற்றுண்டில் காஞ்சிக்கு வந்துசென்ற

சீன யாத்திரிகர் யுவான் சுவாங் எழுதியுள்ளார். குறிப்பாகப் பல்லவர் காலத்தில் வடமொழி தமிழ்நாட்டில் வலுப்பட்டது. அவர்கள் காலத்தில் தண்டின், பாரவி, திக்நாகர் போன்ற பெரும் வடமொழிப் புலவர்கள் அரண்மனை ஆதரவுபெற்று வாழ்ந்ததே இதற்குச் சான்ருகும். பல்லவ மன்னர்களும் தங்கள் முதற் சாசனங்களைப் பிராகிருத மொழியிலும் சமஸ்கிருத மொழியிலுமே எழுதினர்கள். ஆனல் அதன் பிறகு அவர்கள் தமிழிலேயே சாசனங்களை எழுதினர்கள் என்ருல், அது அவர்கள் மக்கள் மனதுக்கு இசைந்து வந்ததையே காட்டும்.

பல்லவர் காலத்தில் சமய விளக்கம் ஏற்பட்டது. தமிழ்நாட்டில் இந்துமதம் தழைத்தோங்கிய காலம் இவர்கள் காலமே. சங்க காலத்தில் அரும்புவிட்டு முளைத்த சைவ, வைணவ மதங்கள் இக்காலத்தில் உயர்ந்த மதங்களாயின. அப்பர், சுந்தரர், திருநாவுக்கரசர் இன்னும் மாணிக்க வாசகர், என்ற தேவாரம் திருவாசகம் பாடிய பெரியார்களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றிச் சைவ, வைணவ மதக் கொள்கைகள் உருப்பெறச் செய்தார்கள். எங்கும் பக்திவெள்ளம் பெருகி ஓடிற்று. இந்த வெள்ளத்தின் மத்தியிலே சமணமும், பௌத்தமும் மிகுந்த அல்லல் படலாயின. ஆயினும் சமணம் பௌத்தத்தைவிட அதிக மாகத் தமிழ்நாட்டில் நீடிக்க முடிந்தது. மதுரை, புதுக் கோட்டை முதலிய இடங்களில் இப்பொழுது காணப்படும் பல குகைக் கோயில்கள் இக்காலத்தில் சமணரால் ஏற் படுத்தப்பட்டவையே. பெயர்பெற்ற சைவ ஆச்சாரியரான சங்கரரும் இக்காலத்தவரே. மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் பௌத்தர்மேல் கொண்ட வெற்றியும், சம்பந்தர் மதுரையில் சமணர்மேல் கொண்ட வெற்றியும், இவ் வெற்றிக்குப் பிறகு எண்ணுயிரம் சமணர்கள் தோலுரிக்கப்பட்ட குறிப்பும் அக்காலத்தைப் பற்றிய சமய நூற்களால் நாம் அறிபவை யாகும். சுருங்கச் சொல்லின் இந்துமதம் வைணவம், சைவம் என்று பிரிந்ததும், பௌத்தத்தையும், சமணத்தை

யும் வென்றதும், தமிழ்நாட்டின் மதம் என்று போற்றக்கூடிய நிலைக்கு வந்ததும் பல்லவர் காலத்திலேயே. இந்துமத உயர்வுக்குப் பல்லவர்கள் அடிகோலினுர்கள் என்பதற்கு அவர்கள் கட்டிய கோயில்களும், அவைகளுக்கு அவர்கள் பெருவாரியாகத் தந்துதவிய பிரமதேய கிராமங்களுமே போதிய சான்ருய் இருக்கின்றன.

தமிழ்நாட்டு அரசியல் முறையை நன்கு பாகுபடுத்தி அமைத்ததும் பல்லவர்களே. தென்னிந்தியாவில் பல்லவர்கள் ஆண்டநாடு ஒருவிதத்தில் சோழர்கள் ஆண்டதைவிடப் பெரியது. அதே சமயத்தில் பல்லவர்கள் சோழர்களைப் போல் நாட்டிற்குரியவர்களும் அல்ல. இந்த நிலையில் அவர்கள் ஐந்நூறு ஆண்டுகள் அவர்களது பரந்த இராச்சியத்திலே நிலையான அரசாட்சியை நிறுவினுர்களென்ருல் அவர்களுடைய ஆட்சி முறையின் சிறப்பு யாவருக்கும் புலனுகும். பல்லவர்கள் தங்கள் சுய அரசைக் காஞ்சீபுரத்தில் நிறுவா முன்னம் ஆந்திர நாட்டிலே நல்ல அரசாட்சிமுறையைக் கண்டவர்கள். அந்த அரசாட்சி முறையை நடத்த அரசுப் பிரதிநிதிகளாக அவர்கள் உறுதுணையாக நின்றவர்கள். ஆந்திர, மௌரிய அரசாங்க முறைகளை நன்கு கண்டவர்கள். இவ்விதமாய் வழிவழியாய் வந்த சிறந்த ஆட்சிமுறையை தமிழ் நாட்டில் பல்லவர்கள் நிறுவினுர்கள். கிராம மன்றங்கள் சங்க காலத்தில் இருந்தன என்ருலும் அவைகளின் நடைமுறையை வகுத்துத்தந்த பெருமை பல்லவர்களைச் சார்ந்தது. ஒவ்வொரு கிராம சபையையும், கிராமத்தின் பலதிறப்பட்ட வசதிகளைக் கவனிக்கப் பல வாரியங்களாகப் பிரித்துக் கிராம அரசாட்சி திறம்பட நடக்கப் பல்லவர் உதவினர். இவ்விதமாகப் பிற்காலச் சோழர் காலத்தில் மிக உயர்ந்த நிலையில் வேலை செய்துவந்த கோயில் வாரியம், ஏரி வாரியம், பொன்வாரியம் முதலிய உப கிராம சபைகள் எழுந்தன. இவைகள் முறையே கிராமக் கோயில் காரியங்களையும், ஏரி முதலிய நீர்ப்பாசன வசதிகளையும், வரி வசூல் காரியங்களையும் கவனித்து வந்தன. மத்திய அரசாங்கத்தில் அரசனுக்கு

ஆலோசனை கூற தற்காலம் போல் மந்திரிகள் நியமிக்கப் பட்டனர். முதன் முதலாகத் தமிழ்நாடு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு அரசப் பிரதிநிதி யிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்விதமாகப் பல்லவர் காலத் தில் மக்களாட்சியும், மன்னன் ஆட்சியும் ஒன்றுகக் கலந்து சங்க காலத்தைவிட அதிகத் திறம்பட அரசாங்கம் நடந்தது.

14. பல்லவ-பாண்டியப் போர்

பல்லவர்கள் நல்ல அரசர்களாக இருந்தபோதிலும் தமிழ்நாட்டு மன்னர்களில் பலர் அந்த அரசாட்சியை அவர் களிடமிருந்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பல்லவரும், பாண்டியரும் சேர்ந்தே களப்பிரர்களை முறியடித்தார்கள் என்றுலும், பாண்டியர்கள் பல்லவர்களை முறியடிக்கவேண்டுமென்ற எண்ணம் மாறவில்லை. கி. பி. 670-ல் மதுரையில் அரசுக் கட்டிலேறிய கூன்பாண்டியன் என்றும், பராங்குசன் என்றும் கூறப்படும் அரிகேசரிமாறவர்மன் என்ற மன்னனுக்கும், பல்லவருக்குமிடையே ஒரு பெரும் போர் நிகழ்ந்தது. இவன் பல்லவரைத் தோற்கடித்துப் பாண்டிய அரசை உறுதியாக மதுரையிலே ஏற்படுத்தினுன். கி. பி. 740-ல் பட்டமெய்திய அவன் பேரப்பிள்ளை முதலாம் இராஜசிம்மன், இரண்டாம் நந்திவர்மன் என்ற பல்லவனை நெடுவயல், குறுமடை, மணிக்குறிச்சி, திருமங்கை, பூவலூர், கொடும்பாளூர் என்ற பல இடங்களில் தோற்கடித்தான். இராஜசிம்மன் காலத்தில் தமிழ்நாடு பாண்டிய நாடாயிற்று. மதுரைமாநகரம் செழிப்புற்றது. அதன் மாடமா மதில்கள் புதுக்கப்பெற்றன. கி. பி. 815-ல் பட்டமெய்திய திரு வல்லபன் என்ற பாண்டியன் ஈழம்வரை வெற்றி கண்டான். இவன் கும்பகோணத்திலே கங்கர், பல்லவர், சோழர், கலிங்கர், மகதர் ஆகியவர்களின் படையை எதிர்த்துப் புறங்கண்டது மட்டுமின்றி, வில்லினம் என்ற இடத்தில் சேர னையும் தோற்கடித்தான். அதிலிருந்து இம் மன்னன் திரு மாரத்திருவல்லபன் என்ற பெயர்பெற்றுன்.

இவ்விதமாகப் பாண்டியர்கள் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற விருதுவாக்கின் உண்மையை எண்பித்தார்கள். ஆனால் வெற்றிகண்ட திருமாரத்திருவல்லபன் அதிகநாள் தன் வெற்றியைக் கொண்டாடக் கூடவில்லை. ஏறக்குறைய கி. பி. 850-ல் காவிரிக்கரையிலே பழங்காலச் சோழரது நிழல் போன்று விஜயாலயன் என்ற ஒரு சோழச் சிற்றரசன் உறையூரிலிருந்து பல்லவ ஆதிக்கத்தில் அரசு செலுத்திவந்தான். அப்பொழுது பாண்டியருக்கும் பல்லவருக்குமிடையே பல சண்டைகள் நிகழ்ந்துகொண்டிருந்தன. இந்தச் சண்டைகளில் விஜயாலயன் பல்லவர் பக்கமும், தஞ்சையை ஆண்டு வந்த முத்தரையர் பாண்டியர் பக்கமுமாயிருந்தார்கள். விஜயாலயன் தஞ்சையைக் கைப்பற்றினான். அதனால் பாண்டியர்கள் அவன்மேல் படையெடுத்தார்கள். அதே சமயம் உறையூரில் விஜயாலயன் இறந்து அவன் மகன் ஆதித்தியனும், காஞ்சியில் நிர்ப்பத்துங்கன் இறந்து அவன் மகன் அபராஜிதனும் முறையே சோழ பல்லவ மன்னராயிருந்தார்கள். இவர்கள் இருவரும் கங்கை மன்னன் முதலாம் பிருதிவிபதி என்பான் உதவிகொண்டு பாண்டியர்களை ஸ்ரீ புரம்பியம் என்ற இடத்தில் தோற்கடித்தார்கள் (கி.பி.879). இதன் பயனாய் அபராஜிதன் ஆதித்தியனுக்குத் தஞ்சையையும் அதன் சுற்றுப்புறங்களையும் சொந்தமாய் அனுபவித்துக் கொள்ளும்படி விட்டுவிட்டான். ஆதித்தியன் விரைவில் பல்லவனையே வென்று தொண்டை மண்டலத்தையும் கைப்பற்றினான். பிறகு கொங்கு நாட்டையும் மேலைக்கங்கர் தலைநகராகிய தளக்காட்டையும் கைப்பற்றி மறைந்துபோன சோழ அரசாட்சியை மறுபடியும் தலையெடுக்கச் செய்தான். (கி. பி. 890). அவனுக்குப் பிறகு பட்டமெய்திய முதலாம் பராந்தகன், பாணரையும், கங்கரையும் எஞ்சி நின்ற பல்லவரையும் தோற்கடித்துப் பாண்டியரையும் வென்று சோழ அரசைக் கன்னியாகுமரிவரைப் பரப்பவேண்டுமென்ற எண்ணங் கொண்டான். ஆனால் இதற்கு இடையூறாக இராட்டிர கூடர் தலையெடுத்தார்கள், ஏறக்குறைய கி. பி. 950-ல் மூன்றும் கிருட்டிணன் என்ற இராட்டிரகூட மன்னன்

பராந்தகனைத் தாக்கித் தக்கோலம் என்ற இடத்தில் தோற்கடித்தான். இச் சண்டையில் பராந்தகன் தன் மூத்த மகன் இராஜாதித்தியனையும் இழக்க நேரிட்டது.

15. சோழப் பேரரசு

தமிழ் நாடு தமிழருக்கே என்ற கொள்கை ஒரு விதத்தில் வெற்றி பெற்றது. ஆயினும் இக் கொள்கையை நிலை நாட்டுபவர் பாண்டியரா அல்லது சோழரா என்பதுமட்டும் இன்னும் முடிவு அடையாமலிருந்தது. இதற்கிடையில் இராட்டிரகூட மன்னர்களும், ஈழ மன்னர்களும் சேர்ந்து தமிழ் நாட்டை ஒரு பெரும் போர்க்களமாகச் செய்தார்கள்.

பராந்தகன் பாண்டியரை வென்றதற்காக "மதுரை கொண்டான்" என்ற பட்டம் சூடினான். பாண்டிய மன்னன் நாட்டைவிட்டு ஓடிவிட்டாலும் பாண்டிய மக்கள் தங்கள் பழம் பெருமையை மறந்தாரில்லை. அதனால் பாண்டிய நாட்டில் சோழர் ஆட்சிக்காலம் முழுவதும் ஓயாத குழப்பமாக இருந்தது. குழப்பத்தை அடக்கி அமைதியை நிலைநாட்டச் சோழ மன்னன் தன் பிரதிநிதி ஒருவரை மதுரையில் நியமித்தான். பாண்டியக் குலப்பற்றுமிக்க மக்களின் மனதை நிறைவுபடுத்தச் சோழ மன்னன் அப் பிரதிநிதிக்கு, "சோழ பாண்டியப் பிரதிநிதி" என்ற பெயரிட்டதுமன்றி அவனுக்குப் பாண்டியன் பெயரையும் சூட்டினான். இவ்விதமாக முதன்முதல் நியமிக்கப்பட்ட சோழ பாண்டியப் பிரதிநிதி, முதலாம் இராஜேந்திரச் சோழனது புதல்வனாகும். இவனுக்கு ஜடாவர்மன் சுந்தரச்சோழ பாண்டியன் என்ற பெயரைச் சூட்டினார்கள்.

ஆனால் பாண்டிய மன்னர்கள் இதனால் மனம் குளிரவில்லை. தக்கோலத் தோல்விக்குப் பிறகு இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு பாண்டியமன்னன் சோழ நாட்டின்மேல் படையெடுத்தான். இந்தப் படையெழுச்சியின் விவரங்கள் நமக்குத் தெரியவில்லை. ஆயினும் மதுரைத் தாலுக்காவிலுள்ள சீரமாத்தூர், தென்திருவாங்கூர்,

இராமநாதபுரம் என்ற இடங்களில் காணப்படும் பல பாண்டியச் சாசனங்கள், "சோழன் தலைகொண்ட வீரபாண்டியன்" என்று குறித்தலாலும், இரண்டாம் பராந்தகனுடைய புதல்வன் ஆதித்தியன் தன் தந்தையின் தலையைக்கொண்ட பாண்டியனின் தலையைத் தானே கொய்தான் என்று சோழ சாசனம் ஒன்று கூறுவதாலும் வீரபாண்டியன் இரண்டாம் பராந்தகனைத் தோற்கடித்தான் என்பது விளங்குகின்றது. பாண்டியருடைய வலிமைக்கு முக்கியக் காரணம் ஈழ மன்னர்கள் அவர்களுக்குத் தந்த உதவியே ஆகும்.

ஆயினும், முதலாம் இராஜராஜன் கி. பி. 995-ல் சோழர் ஆட்சியை ஒருவாறு பாண்டிய நாட்டில் நிறுவினன். கி. பி. 1017-ல் இராஜேந்திரன் ஈழத்தின்மேல் படையெடுத்து, ஈழ மன்னன் முடியையும் அவன் பட்டத்தரசிகளின் அழகிய முடிகளையும் கொண்டான். ஆயினும் இதோடு பாண்டிய வீழ்ச்சி முடிவடையவில்லை. முதலாம் இராஜாதிராஜனை வீரகோலன், மானபரணன், சுந்தரபாண்டியன் என்ற மூன்று பாண்டியர்கள் எதிர்த்தார்கள் என்றும், அவர்களை ஒருங்கே சோழ மன்னன் முறியடித்தானென்றும் நாம் அறிகின்றோம். இவ்விதமாக இரண்டு தமிழரசுகளும் ஏறக்குறைய நூற்றிருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்நாட்டை, யார் ஆளுவது என்பதை முடிவுகட்டப் போர் பல நிகழ்த்திக் கொண்டேயிருந்தார்கள். கி. பி. 1070-ல் சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கன் பட்டமெய்தினன். கீழைச் சாளுக்கிய வமிசத்தைச் சேர்ந்த குலோத்துங்கன் சோழ அரியணை ஏறியது சோழ இளவல்களுக்குப் பிடிக்கவில்லை; மக்களும் மனம் வெதும்பினர்; எங்கும் ஒரே குழப்பம் ஏற்பட்டது. அவன் காலத்துப் பாண்டிய மன்னன் ஜடாவர்மன் ஸ்ரீவல்லபன் என்பான். குலோத்துங்கனுக்கும் வல்லபனுக்குமிடையே பல போர்கள் நிகழ்ந்திருக்கவேண்டும். ஆனால் இவர்களில் யார் வெற்றிகண்டது என்பதை உறுதியாய்க் கூற முடியாது. சோழ சாசனங்கள் சோழனைப் "பாண்டியன் தலைகொண்டான்" என்று குறிக்கின்றன; பாண்டியச் சாசனங்களோ,

"பாண்டியன் சோழனை வென்று சோழாந்தகன் என்ற பட்டம் சூடினன்" என்று குறிக்கின்றன. இது எங்ஙனமாயினும் வல்லபன் மதுரையில் சிறப்போடு அரசாண்டான் என்பதில் சந்தேகமில்லை. திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் இவன் சாசனங்களில் பலவற்றை இன்றும் காணலாம். வல்லபனுக்குப் பின் பராக்கிரமனும் அவனுக்குப்பின் பராந்த கனும் அவனுக்குப் பின் மாறவர்மனும் பட்டமெய்தினர். "திருவளரச் செயம் வளரத் தென்னவர்தம் குலம்வளர வரு மறை நான்கவை வளர வனைத்துலகிற் துயர்நீங்கத் தென் மதுரை புரித்தோன்றி(னன்)," என்று கூறும் பராக்கிரம சாசனம் இங்கு நாம் குறித்த பாண்டிய மறுமலர்ச்சியை நன்கு விளக்குவதாகும்.

16. சோழருடைய தீரச்செயல்கள்

சோழப் பேரரசை நிறுவிய ஆதித்தியன் சோழ எல்லையைத் தாண்டி அநற்கப்பாற்பட்ட நாடுகளையும் சோழ அரசோடு சேர்க்க முயன்றான். கொங்கு நாட்டைச் சேர்ந்த சேலம், திருச்செங்கோடு முதலிய இடங்களில் ஆதித்தியனது சாசனங்கள் பல காணக்கிடக்கின்றன. இவற்றிற்கு முற்பட்ட சில பாண்டியச் சாசனங்களைத் தவிர இவையே நாம் கொங்குநாட்டில் காணும் தமிழ் மன்னர்களின் முதற் சாசனங்கள். அதுவரை தமிழ்நாட்டை ஆண்ட தமிழ்ப் பேரரசர்கள் நாம் முன்னர் குறித்ததுபோல், தங்கள் நாட்டின் எல்லையைத் தாண்டி அதற்கப்பாற்பட்ட பிரதேசங்களில் தங்கள் ஆட்சியை நிலையாக நிறுவ விரும்பவில்லை. அவர்கள் தங்கள் நாட்டின் அரசாட்சியில் நுணுக்கமான கவனம் செலுத்தியதாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ தங்கள் நாட்டிற்குப் புறம்பாயுள்ள பிரதேசங்களைப்பற்றி அதிகமாக அறிந்துகொள்ளவும் அவர்கள் விரும்பவில்லை. ஆதித்தியன் மட்டும் கொங்குநாட்டில் வெற்றிகண்டான் என்பது மட்டுமல்லாமல் அங்கே சோழ அரசையும் நிறுவி னன். நிக்கல்ஸன் (Nicholson) எழுதிய கோயம்புத்தூர் மாவட்டக் கைப் புத்தகத்தில் (Coimbatore District Manual)

ஒரு கர்ணபரம்பரையான வரலாற்றைக் குறிப்பிடுகின்றார். ஆதித்தியன் கொங்கு நாட்டில் தனது அரசியோடு வந்து கொஞ்சநாள் தங்கினனென்றும், அப்பொழுது அரசிக்குத் துணையாக பலவேளாள் குடும்பங்களைச் சோழநாட்டிலிருந்தே கொண்டுவந்து கொங்கு நாட்டில் குடியேற்றினன் என்றும் மேற்குறித்த ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இது எங்ஙன மாயினும், சோழ அரசாட்சிமுறை கொங்கு நாட்டில் அப்பொழுது நிறுவப்பட்டது என்பதில் எவ்வித சந்தேகமு மில்லை. முதலாம் பராந்தகனது காலத்தில் பொறிக்கப்பட்ட சாசனம் ஒன்றிலிருந்து, கொங்கு நாட்டுக் கோயில்களை மேற் பார்வை செய்வதற்காக அரசாங்க ஊழியர் ஒருவர் நியமிக் கப்பட்டார் என்பது தெரியவருகிறது. ஆதித்தியன் கொங்கு நாட்டில் பல கோயில்களை எழுப்பினனென்பதை சுந்தரச்சோழனின் சாசனம் வாயிலாக நாம் அறிகிறோம். ஆதித்தியனுக்குப்பின் வந்த முதலாம் பராந்தகன் கொங்கு நாட்டுப் பொன்னைக் கொண்டுதான் சிதம்பரத்து நடராஜப் பெருமான் ஆலயத்துக்குப் பொன் வேய்ந்தான் என்பது திருத்தொண்டத்தொகை மூலமாகத் தெரியக்கிடக்கின்றது. ஆனால் பராக்கிரமசாலிகளான சோழர்களும் தங்கள் ஆதிக் கத்தைக் கொங்கு நாட்டில் அதிகமாகச் செலுத்தவில்லை. இராஜராஜ சோழனுடைய கடைசி சாசனம் கி.பி. 1004-ம் ஆண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. அவன் அதற்குப் பின்னும் பத்து ஆண்டுக்காலம் அரசாண்டிருந்தபோதிலும் அவனுடைய சாசனங்கள் வேறு ஒன்றும் கொங்குப் பிரதேசத்தில் கிடையாது. ஆனால் கொங்கு நாட்டைப் படைத்தளமாகக் கொண்டு குடகு, நீலகிரி, மைசூர் முதலிய பிரதேசங்களில் சோழ அரசாட்சியை இராஜராஜன் ஏற் படுத்தினன். இராஜராஜனுக்குப் பிறகு மறுபடியும் இந்தப் பிரதேசங்களெல்லாம் சுய ஆட்சியை நிறுவின.

கி. பி. 1004-ல் இராஜராஜன் கொங்கு நாட்டை ஆளுவதற்காகக் 'கொங்குச் சோழப் பிரதிநிதி' என்ற பெயருடன் ஒரு அரசப் பிரதிநிதியை அங்கு நியமித்தான்.

ஆனால் காலக்கிரமத்தில் இவர்கள் தங்கள் சுய ஆட்சியை அங்கே நிறுவிக்கொண்டார்கள். இவ்விதமாய் எழுந்த கொங்குச் சோழச் சாசனங்கள் பலவற்றை நாம் இன்றும் கொங்கு நாட்டில் காணக்கூடும். இவற்றின்மூலம் பதினைந்து கொங்குச் சோழ மன்னர்கள் ஏறக்குறைய கி. பி. 1004 முதல் கி. பி. 1275 வரை கொங்கு நாட்டில் அரசாண்டார்கள் என்பது புலப்படுகின்றது. இவர்கள் சோழ வமிசத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கொங்குநாட்டில் பல கோயில்களை எடுத்தார்கள். கழஞ்சு, வராகன், அச்சு, பொன், காசு முதலிய நாணயங்களையும் அடித்தார்கள்.

இராஜராஜன் கொங்குநாட்டைப் பிடித்தது மட்டுமின்றிப் பாண்டியரையும் அவர்களோடுசேர்ந்துநின்ற சேரர்களையும் தோற்கடித்தான். இதைப் பற்றித் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் வெகு அழகாகக் கூறுகின்றன ;

"பாண்டிய மன்னனைத் தோற்கடித்த சோழகுலச் சூரியன் கடல் சூழ்ந்து கோட்டைச் சுவர்களால் உறுதிப் படுத்தப்பட்ட வெள்ளினத்தின்மேல் பாய்ந்தான்."

வெள்ளினம் அக்காலத்திய சேரர் துறைமுகம். வெள்ளினத்தைப் பிடித்த இராஜராஜன் காந்தளூர் என்ற மற்றொரு துறைமுகப் பட்டினத்தையும் கைப்பற்றி, "காந்தளூர்ச் சாலை கலமறுத்(தான்)" என்ற பெயர் பெற்றான். காந்தளூர் என்பது இப்பொழுது திருவிதாங்கூர் பகுதியிலுள்ள வலியசாலை என்ற இடமாகும். அக்காலத்தில் சேர நாட்டை ஆண்டுவந்த மன்னன் பாஸ்கர ரவிவர்மன் திருவடி (கி. பி. 978-1036). இராஜராஜன் தென்னாட்டில் மட்டுமல்ல ; ஈழத்திலும் பெரும் வெற்றிகள் கண்டான். திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுவதுபோல், "இராஜராஜனின் ஈழவெற்றி ஸ்ரீராமர் அங்கு கொண்ட வெற்றியிலும் பெரியது." ஈழத்தில் வென்ற பல கிராமங்களைத் தஞ்சை இராஜராஜேசுவர கோயிலுக்கு மானியமாக வழங்கினான். சோழ மன்னன் பராந்தகன் காலந்தொட்டுப்

பாண்டியரும், ஈழத்து மன்னரும் சோழருக்கு எதிராக ஒன்று சேர்ந்திருந்தார்கள் என்பதை நாம் முன்னரே குறித்தோம். ஆகவே இராஜராஜன் ஈழ மன்னர்களின் பெருமையை ஒடுக்கவேண்டுமென்று எண்ணினான். ஈழத்தில் அப்போது ஏற்பட்ட இராணுவக் கலகம் இதற்கு வாய்ப்பளித்தது. அப்போதைய ஈழ மன்னன் ஐந்தாம் மகிந்தன். இவனைச் சோழ மன்னன் பல இடங்களில் தோற்கடித்தான். முடிவாக இராஜராஜன், ஈழத்தின் வடபாகத்தை சோழநாட்டின் ஒருபகுதியாகச் செய்துகொண்டதுமன்றி, அதற்கு 'மும்முடிச் சோழ மண்டல'மென்றும் பெயரிட்டான். ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் ஈழத்தின் தலைநகராயிருந்த அனுராதபுரத்தை விட்டுவிட்டு பொலனருவாவைத் தலைநகராக்கி அங்கே ஒரு சிவன் கோயிலையும் எழுப்பினான். அது இன்றும் இராஜராஜனது ஈழ வெற்றிகளின் அழியாச் சின்னமாகத் திகழ்கின்றது. இராஜராஜன் ஈழத்தில் மட்டுமல்ல; மால்டைவ் தீவுகளிலும் வெற்றிகண்டு அவற்றைச் சோழ நாட்டோடு சேர்த்துக்கொண்டான். கி. பி. 1010-ம் ஆண்டில் பெயர்பெற்ற இராஜராஜேசுவரர் கோயிலைத் தஞ்சையில் எடுத்தான். தமிழ்நாட்டிலுள்ள கோயில்களிலெல்லாம் மிகப் பெரியது என்பது மட்டுமல்ல; இந்தக் கோயிலில்தான் பல அழகிய சிலைகள் சுவரைச் சுற்றிலும் வெட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் கோயிலிலே பல அழகிய படங்களும், வண்ண ஓவியங்களும் தீட்டப்பட்டிருக்கின்றன.

இராஜராஜனின் மகன் முதலாம் இராஜேந்திரன் மறுபடியும் ஈழத்தின்மேல் தன்னுடைய படைகளைச் செலுத்தி ஈழ மன்னன் ஐந்தாம் மகிந்தனைச் சிறைப்படுத்திச் சோழநாட்டுக்கு அனுப்பினான். தென்னாட்டில் பாண்டியரையும், சேரரையும் வென்று "சோழ பாண்டியப் பிரதிநிதி"யை மதுரையில் நியமித்தான். இவ்விதமாக இராஜேந்திரன் தமிழ்நாடு முழுவதுக்கும் ஈழத்திற்கும் அரசனானான். இராஜராஜன் ஈழத்தின் வடபாகத்தை மட்டும் வென்றான். இராஜேந்திரன் ஈழம் முழுவதையுமே வென்றான். ஈழ மன்னனது முடியும்,

அவனது அரசிகளின் அழகிய முடிகளும், அரசனது முத்து மாலையும் இராஜேந்திரன் கைக்குக் கிடைத்தன. இத்தகைய பெரும் வெற்றிகளடைந்த இராஜேந்திரனுடைய சாசனங்களில் பல, பொலனருவாவிலும், கொழும்புப் பொருட்காட்சி சாலையிலும் இன்றும் காணக் கிடக்கின்றன. கி. பி. 1021-22 ஆண்டுகளில் இராஜேந்திரன் மேலைச்சாளுக்கியரை வென்று இரட்டைப்பாடி, ஏ ழ ரை இலட்சம் என்ற நாட்டைக் கைப்பற்றினன். அப்போது அரசாண்ட மேலைச் சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மன் என்பவன். இராஜேந்திரன் இந்தியாவிற் கப்பாற்பட்ட சுமத்திரா, ஜாவா முதலிய தீவுகளில் இராஜராஜன் காலத்தில் ஏற்பட்ட நட்புறவை உறுதிப் படுத்தினன். அஃதேபோலும் சீனவோடு இராஜராஜன் கொண்டிருந்த நட்பையும் மறுபடி உறுதிப்படுத்தினன். இந்தச் சோழ மன்னர்கள் சீனவரை தங்கள் தூதுவரை அனுப்பி வைத்திருந்தார்களென்ருல் பதினோராவது நூற்ருண்டின் முற்பாகத்தில் சோழ அரசு அடைந்திருந்த உயரிய நிலை ஒருவாறு விளங்கும். கடைசியாக இராஜேந்திரன் கங்கைவரை ஒரு படையெழுச்சியை நிகழ்த்தினன். இதனலேயே கங்கை கொண்ட சோழன் என்ற பெயரும், கங்கை கொண்ட சோழபுரம் என்ற ஊரும் எழலாயின. கரிகாலன் முதலிய மன்னர்களின் இமயச் செலவு போன்று, இந்தக் கங்கைப் படையெழுச்சி தமிழ்நாட்டு வரலாற்றிலே இடம் பெறுகின்றது. முற்காலத் தமிழ்நாட்டு மன்னர்களின் இமயப் படையெழுச்சியைச் சங்கநூல்கள் விவரித்துக் கூறுவது போல, திருவாலங்காட்டுப் பட்டையங்கள் இராஜேந்திரனது கங்கைப் படை எழுச்சியைப் பற்றிச் சான்று கூறுகின்றன. இவற்றின் சான்றுப்படி சோழ மன்னன் இந்திரநாதன், தருமபாலன், மகிபாலன், கோவிந்தச் சந்திரன், இரண சூரன், லாடா ஒரிஸா மன்னர்கள் என்ற இவர்களை முறியடித்ததாகவும் சக்கரக்கோட்டம், மதுரை மண்டலம், நாமணைக்கோணம், பஞ்சப்பள்ளி, மாசூனிநாடு, லாடநாடு, வங்காளம் என்ற பிரதேசங்களைக் கைப்பற்றினன் என்றும்

தெரிகிறது. வங்காளத்தில் எழுந்த சேன அரசர்கள் தெற்கேயிருந்து இராஜேந்திரன் படையுடனே சென்ற தமிழர்களே என்பது அறிஞர் R. D. பேனர்ஜியின் கருத்தாகும்.

ஆயினும் மேற்குறித்த திருவாலங்காட்டுச் செப்பேடுகள் இராஜேந்திரன் கடாரத்தில் கொண்ட வெற்றிகளைப் பற்றிப் பேசுவதைப் பார்த்தால் அவைகள் அவனது கங்கைப் படையெழுச்சியினும் மிகப் பெரியவை ஆகும். கடாரப் படையெழுச்சியில் சோழமன்னன் ஸ்ரீவிஜயம், பண்ணை, மலையூர், மயிருதிங்கம், லங்கசோகம், நக்கவரம், மாப்பப்பாலம், தலைத் தக்கோலம், மாமடலிங்கம், இலமூரிதேசம் முதலிய இடங்களைக் கைக்கொண்டான். இவற்றையெல்லாம் இப்பொழுது கண்டுகொள்வது எளிதல்ல; எனினும் கடாரம், ஸ்ரீவிஜயம், பண்ணை, மலையூர், நக்கவரம் இலமூரிநாடு முதலிய இடங்களை தற்போது நாம் எளிதில் கண்டு கொள்ளலாம். கடாரம் என்பது சுமத்திராவையும், ஸ்ரீவிஜயா, சுமத்திராவிலுள்ள பலம்பேங்கையும், பண்ணை என்பது சுமத்திராவின் கீழ்க்கரையையும், மலையூர் என்பது மலேயாவின் தென் கோடியையும், இலமூரி என்பது சுமத்திராவின் வட பாகத்தையும் குறிக்குமென்பது அறிஞருடைய கருத்து. கடாரமும், ஸ்ரீவிஜயமும் பழங்காலந்தொட்டே பெரும் கப்பல் வாணிகத் தலங்களாக இருந்தமையால், இராஜேந்திரன் அவற்றைக் கைக்கொண்டது சோழர் காலத்து வாணிகத்துக்கு பெரும் பயனளிப்பதாயிற்று.

முதலாம் குலோத்துங்கன் கலிங்கத்தில் இரண்டு பெரும் போர்கள் நிகழ்த்தினன். இவை இரண்டிலும் வெற்றி கண்டான். இரண்டாவதான கலிங்கத்துப் போரில்தான் கருணாகரத் தொண்டைமான் படைத்தலைவனாக விளங்கினன். கலிங்கத்துப்பரணி என்ற ஜெயங்கொண்டார் எழுதிய நூல் இதைப்பற்றியதே ஆகும். குலோத்துங்கன் புகழும் சீனாவரை எட்டியிருந்தது; அவனும் சீன மன்னனுக்கு ஒரு தூது அனுப்பினன் என்று சீன நூல்களே கூறுகின்றன.

குலோத்துங்கன் காலத்தில் கிழக்கே சீனம்வரை தமிழர் வியாபாரம் பெருக்கெடுத்து ஓடிற்று. சோழ அரியணையேறிய இராஜராஜன், இராஜேந்திரன் காலத்தைவிட சோழரது புகழ் வெகுதூரம் பரவிற்று. தன் முன்னோர் செங்கோல் ஓச்சிய நாடுகளில் எல்லாம் தன் புகழும் நிலைத்து நிற்க சோழ மன்னன் முயன்றான். ஈழம் ஒன்றில் மட்டும் குலோத்துங்கன் தன் ஆதிக்கத்தை இழந்தான். ஆயினும் அவனுடைய தூதுவர்கள் கம்போடியா, இந்தோ சீனா, சீனாவரை சென்று வந்தார்கள். என்றாலும் குலோத்துங்கன் காலத்தில்தான் தமிழ் நாட்டின் புகழ் இவ்வளவு தூரம் எட்டியது என்பது இதன் பொருள் அல்ல. கி. மு. 7-ம் நூற்றாண்டிலேயே திராவிட வியாபாரிகள் சீனா வரை சென்றிருக்கிறார்கள் என்று தற்போதைய ஆராய்ச்சி நமக்கு அறிவுறுத்துகின்றது. குலோத்துங்கன் தென்னாட்டின் பழங்காலப் புகழை ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் நிலைநாட்டினான்.

17. இராட்டிரகூடரும் மேலைச்சாளுக்கியரும்

சோழர்கள் தமிழ்நாட்டில் பல வெற்றிகள் கண்டு தங்கள் புகழை நிறுவினர். ஆயினும் அதற்கிடையூறாக அவர்களுக்குப் பல இன்னல்கள் நிகழ்ந்தன. அவற்றையெல்லாம் மேற்கொண்டே அவர்கள் தங்கள் புகழை நிலைநிறுத்தினார்கள். கி. பி. 850 முதல் 1200 வரை இராட்டிரகூடரும், மேலைச்சாளுக்கியரும் தென்னிந்தியாவில் சிறந்த புகழ் அடைந்திருந்தார்கள். முதலாம் பராந்தகனது காலத்திலே அவன் இராட்டிரகூடரோடு செய்த சண்டையின் காரணமாகத் தன் புதல்வனையே இழக்க நேர்ந்தது என்பதை முன்னரே குறித்தோம. பராந்தகனுடைய கடைசிக்காலத்தில் கங்கர்களும், இராட்டிரகூடர்களும் ஒன்று சேர்ந்து சோழ மண்டலத்தின் வடமேற்கே வெகு தொந்தரவு கொடுத்துக் கொண்டு வந்தார்கள். இதைத் தடுப்பதற்காக அவன் தன்னுடைய பெரும்படையை அங்கு அனுப்ப வேண்டியிருந்தது.

பராந்தகனுடைய புதல்வன் பட்டத்திற்கு வந்தபோது இராட்டிரகூடர்கள் தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றியிருந்தார்கள்.

இராஜராஜன் பட்டத்துக்கு வந்தபோது மேலைச் சாளுக்கிய மன்னன் சத்தியஸ்ராயன் அவனுக்கு விரோதமாக இருந்தான். ஆனால் அவன் சோழ நாட்டின்மேல் படையெடுக்காவண்ணம் இராஜராஜனே தனது புதல்வனை மேலைச்சாளுக்கியர்மீது படையெடுக்கச் செய்தான். இவ்விதமாகச் சத்தியஸ்ராயன் சோழ நாட்டின்மேல் படையெடுப்பதை இராஜராஜன் தடுத்தான். கி. பி. 1015-ல் சத்தியஸ்ராயன் மகன் இரண்டாம் ஜெயசிம்மன் பட்டத்திற்கு வந்தான். அப்பொழுது இராஜேந்திரச்சோழன் சோழ மன்னனாக இருந்தான். இராஜேந்திரன் ஈழ நாட்டைக் கைப்பற்றுவதிலே கவனம் கொண்டிருந்தபடியால் ஜெயசிம்மன் தென்னாடு நோக்கிப் படையெடுத்து பெல்லாரி வரை வந்து அங்குப் பாளையம் இறங்கினான். இராஜேந்திரன் ஜெயசிம்மனுக்கு எதிராக இரண்டு படைகளை அனுப்பினான். ஒன்று ஜெயசிம்மனைத் தாக்கி மாஸ்கி என்ற இடத்திலே தோற்கடித்தது. இரண்டாவது படை வெங்கி மன்னனான விஜயாதித்தியன் ஜெயசிம்மனோடு சேர்ந்திருந்தபடியால் அவனோடு சண்டை செய்து அவனைத் தோற்கடித்தது. இவ்விதமாக இராஜேந்திரன் காலத்தில் ஏற்பட்ட முதல் சண்டைகள் ஒழிந்தன.

கி. பி. 1042-ல் ஜெயசிம்மனுடைய மகன் சோமேசுவர அகவமலன் என்பவன் பட்டத்துக்கு வந்தான். அவன் காலத்தில் விஜயாதித்தியன் சாளுக்கியரோடு சேர்ந்து வெங்கிநாட்டில் அரசாண்டுவந்த சோழ குலத்தைச் சேர்ந்த இராஜராஜனை எதிர்த்தார்கள், அப்பொழுது இராஜேந்திரன் வயது மிகுந்துவிட்டபடியால் நேரில் போகக்கூடாவிட்டாலும் ஒரு பெரும்படையை வெங்கிநாட்டிற்கு அனுப்பித்துவைத்தான். கி. பி. 1044-ல் முதலாம் இராஜாதிராஜன் பட்டத்திற்கு வந்தபோது அவன் மறுபடியும்

மேலைச்சாளுக்கியர்மீது படையெடுத்து அவர்களைத் தானியகடகா என்ற இடத்தில் தோற்கடித்தான். பிறகு கொள்ளிப்பாக்கை என்ற சாளுக்கியரது கோட்டையையும், கல்யாணி என்ற சாளுக்கியரது தலைநகரத்தையும் தீக்கிரையாக்கித் தன்னையே சாளுக்கிய நாட்டு மன்னனாகவும் முடிசூட்டிக்கொண்டான். இதற்குச் சான்றாகத் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தாராசுரம் என்ற இடத்தில், சாளுக்கியரது கலியாணபுரம் இராஜாதிராஜனால் நெருப்பால் எரிக்கப்பட்ட விவரம் அவ்வூர் கோயிலிலுள்ள சாசனத்தில் காணப்படுகின்றது. ஆனால் கி. பி. 1050-ல் மேலைச்சாளுக்கியர் சோழர் மீது படையெடுத்தார்கள். அப்பொழுது கிருஷ்ணா நதிக் கரையில் கொப்பம் என்ற இடத்தில் ஒரு பெரும் போர் மூண்டது. இதில் இராஜாதிராஜன் உயிர் துறந்தான். ஆயினும் அவன் மகன் இராஜேந்திரன் சண்டையைத் தொடர்ந்து நடத்தி வெற்றிக் கொடியை நாட்டினான். கி. பி. 1061-ல் வெங்கியில் ஆண்ட இராஜராஜன் இறக்கவே, அங்குச் சாளுக்கிய மன்னன் சக்திவர்மன் என்ற விஜயாதித்தியன் மகனை அரசனாக்கி மீண்டும் சோழச் சாளுக்கிய சண்டையைத் தொடங்கினான். பெஜவாடாவுக்கருகில் நடந்த ஒரு கடும்போரில் சாளுக்கியர் தோல்வியுற்றனர். சாளுக்கிய மன்னன் துங்கபுத்திர நதியிலே குதித்து உயிர்விட்டான்.

சோமேசுவரனுக்குப் பிறகு மேலைச் சாளுக்கிய அரச வமிசத்தினரிடையே சண்டை மூண்டது. சோமேசுவரன், விக்கிரமாதித்தியன் என்ற இவர்களுக்குள் யார் பட்டத்திற்கு வருவது என்பதைப்பற்றிச் சண்டை நடந்தது. இதில் விக்கிரமாதித்தியன் சோழர்களுடைய உதவியை நாடிச் சாளுக்கிய நாட்டின் தென்பகுதிக்கு அரசனாக ஆரும் விக்கிரமாதித்தியன் என்ற பெயரோடு முடி சூடினான். கி. பி. 1070-ல் முதலாம் குலோத்துங்கன் சோழ மன்னனானான். அவனோடு சோமேசுவரன் சேர்ந்துகொண்டு விக்கிரமாதித்தியனை எதிர்த்தான். ஆனால் அவன் எண்ணம் பயன் பெறவில்லை. விக்கிரமாதித்தியன் சோமேசுவரனைத் தோற்கடித்து, கி. பி. 1076-ல்

சாளுக்கிய நாடு முழுவதுக்கும் தன்னை அரசனாகச் செய்து கொண்டான். அதன் ஞாபகமாக சாளுக்கிய—விக்கிரம யுகம் என்ற ஒரு புது யுகத்தை அந்த ஆண்டில் தொடங்கினான்.

18. தமிழ் நாட்டின் பொற்காலம்

கி. பி. 10-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து 13-ம் நூற்றாண்டின் இறுதிவரையுள்ள 400 ஆண்டு காலத்தைச் சோழர் காலமென்று வரலாற்றாசிரியர்கள் குறிக்கின்றார்கள். இதையே தமிழ்நாட்டின் பொற்காலம் என்றும் குறிக்கவேண்டும். சேரரோடும், பாண்டியரோடும். மேலைச் சாளுக்கியரோடும், இராட்டிரகூடரோடும் பல போர்கள் நிகழ்த்த வேண்டியிருந்தாலும், சோழ மன்னர்கள் அவற்றிலெல்லாம் வெற்றிகண்டு சோழ ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டிலிருந்து வெகு தூரம்வரை பரப்பினதுமன்றி, ஈழம், ஜாவா, சுமத்திரா முதலிய இந்தியாவிற்கப்பாற் பட்ட பிரதேசங்களிலும் நிறுவினார்கள். தமிழ்நாட்டில் ஆண்ட அரசர்களில் இவர்களினும் அதிகப் பெருமை பெற்ற வர்கள் கிடையாது.

இக்காலத்திலும் சங்ககாலத்தைப்போல் மக்கள் நல்ல நிலையிலிருந்தார்கள். உழவுத் தொழிலே தலையாய தொழி லாக இருந்தபோதிலும், கைத்தொழில்களும் பல வழக்கத்தி லிருந்து வந்தன. காஞ்சியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நெசவுத்தொழில் உச்ச நிலையை அடைந்திருந்தது. தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் இன்னும் கீழ்க்கரை யோரமாகப் பல இடங்களிலும் உப்புக் காய்ச்சும் தொழில் நடைபெற் றிருந்தது. இன்னும் வாணிகம் தழைக்கச் சோழ அரசர்கள் பெரிதும் உறுதுணையாக இருந்தார்கள். உள்நாட்டு வாணிகம் சிறக்கப் பல்வேறு இடங்களும் பாதைகளால் இணைக்கப் பட்டன. அப் பாதைகளில் முக்கியமாக மூன்றைப்பற்றி நாம் சாசனங்களில் கேள்விப்படுகிறோம். அவைகள் சோழ நாட்டி லிருந்து மேலைச்சாளுக்கிய நாட்டிற்கும், கொங்கு நாட்டிற்கும்,

தெலுங்கு நாட்டிற்கும் "பெரும் வழி" களாய் இருந்தன. சோழர் காலத்தில் பல தங்க நாணயங்களும் செப்பு நாணயங் களும், புழக்கத்திலிருந்தன. மடை அல்லது பொன் என்பது அக்காலத்திய உயர்ந்த நாணயம். அதற்கு களஞ்சு என்ற வேறொரு பெயரும் உண்டு. காசு என்பது மடையில் பாதி. இவையன்றிப் பல செப்பு நாணயங்களும் புழக்கத்தி லிருந்தன.

உழவுத்தொழில் சிறக்க, சோழர்கள் பல குளங்களையும், வாய்க்கால்களையும் வெட்டினார்கள். இவற்றில் வைரமேகத் தடாகம், கங்கைகொண்ட சோழபுரத்து ஏரி, சோழ வாரிதி, களியனேரி, கள்ளிநங்கைக் குளம், பாகூர் ஏரி, இராஜேந்திரச் சோழப் பெரிய ஏரி என்ற இவற்றைப்பற்றி நாம் படிக்கிறோம். வைரமேகத் தடாகமென்பது உத்திரமேரூரில் இருந்தது என் பதை அவ்வூரின் பெயர் பெற்ற சாசனத்தால் அறிகின்றோம். சோழ வாரிதி என்பது சோளிங்கனிலும், களியனேரி மதுரை யிலும், கள்ளிநங்கைக் குளம் சோழபுரத்திலும், பாகூர் ஏரி பாகூரிலும், இராஜேந்திரச் சோழப் பெரிய ஏரி புங்கனூரிலும் இருந்தன. ஏரிகளைப் பாதுகாத்தல், தண்ணீர் கிடைக்கும் காலங்களில் அவைகளில் தண்ணீரைத் தேக்குதல், தேக்கின தண்ணீரை உழவர்களுக்கு முறையாக வழங்குதல் முதலிய வேலைகளை ஊராட்சி மன்றங்கள் செய்து வந்தன. ஏரிகளைப் பாதுகாப்பதற்கும் அவற்றைச் செப்பனிடுவதற்கும் பல இடங்களில் செல்வர்கள் தாமே பொருளுதவி செய்து வந்தனர். அத்தகைய நன்கொடைகள் இல்லாத இடங்களில் ஊராட்சிமன்றம் ஏரிஆயம் என்ற வரி வசூலித்து, ஏரிகளுக்கு வேண்டிய செலவுகளைச் செய்து வந்தது. ஏரிகளைக் கவனிப் பதற்கென்றே ஏரிவாரியம் என்ற குழு ஊராட்சி மன்றத்தின் பகுதியாக ஒவ்வொரு ஊரிலும் இருந்து வந்தது.

சோழர் காலத்திலே சாதி வேறுபாடுகள் இக்காலம் போல் இருக்கவில்லை. அக்காலத்திய சாதிகள் முக்கிய மாய்த் தொழிலைப்பற்றியவையே. இவ்விதமே இரதகரர் என்ற தச்சர்களும் ஐயோகவர் என்ற நெசவுத் தொழிலா

ளர்களும் இருந்தார்கள். தவிர, இடங்கை, வலங்கை என்ற இரண்டு பெரும் பிரிவுகள் பல உட்பிரிவுகளுடன் அக்காலத்திலிருந்தன. ஆனால் இவைகள் எப்படி ஏற்பட்டன என்பதைப்பற்றி நாம் உறுதியாய்க் கூறமுடியாது. கரிகாலச் சோழன் ஆண்ட காலத்தில் பல சாதியினர் தங்கள் குறைகளை அரசனிடம் முறையிட வந்தனரென்றும் அவர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து ஒவ்வொரு பிரிவும் அரசனின் ஒவ்வொரு பக்கத்திலும் நின்றதால், இவர்களுக்கும், இவர்கள் வழிவந்தவர்களுக்கும் இடங்கை, வலங்கை என்ற பெயர்கள் ஏற்பட்டன என்பது, பழங்கால மரபு. இடங்கையைச் சார்ந்தவர் தொண்ணூற்றெட்டு சாதியினர் என்று சாசனங்கள் நமக்கு அறிவிக்கின்றன. வலங்கையைச் சேர்ந்தவர்களும் அதிகமான பேர்களாகவே இருக்கவேண்டும். இத்தனை சாதிகள் இருந்தபோதிலும் பொதுக் காரியங்களில் எல்லா சாதிகளிடையேயும் ஒற்றுமை நிலவியது.

சோழர்காலத்தில் மக்கள் மிகத் திறம்படைத்தவர்களாக இருந்தார்கள். அக்காலத்தில் கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள் பலர் இருந்தனர். பொதுவில் அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர் மற்றவர்களுக்குக் கல்வி புகட்டி வந்தனர். சோழர் காலத்து நூற்றுக் கணக்கான சாசனங்கள் அக்காலத்து அரசரும், வணிகரும், பெருமக்களும் அந்தணர் வாழ்விற்காக மானியங்களும், பணமும் தந்துதவினர் என்பதைக் காட்டுகின்றன. அக்காலத்துச் சமுதாய நிலையைப்பற்றி எழுதியுள்ள சர். சார்லஸ் எலியட் என்ற ஆங்கிலேயர், அக்காலத்திய அந்தணர் சமுதாயத்தில் வகித்த உயர்ந்த நிலையைப்பற்றி அழகாகக் கூறுகின்றார்: "அக்காலத்திய அந்தணர்கள் அரசனுக்கும் அறிவுறுத்தி வந்தனர். அவர்கள் அரசுக்குள் ஒரு சிறிய அரசாகத் திகழ்ந்தார்கள் என்று சொல்லுவது பொருத்தமன்று. அவர்கள் அரசு நாட்டின் அரசுக்கு மேற்பட்டதாக இருந்தது என்று சொல்லுவதே சாலவும் பொருந்தும்.'' சோழர்காலத்தில் ஆண்மக்கள் வலிவுற்றிருந்தார்கள். அக்காலத்துப் போர்களிலே அவர்கள்

தங்கள் வலிமையைக் காட்ட ஆசைப்பட்டார்கள். போரிலே, தோற்றுவிடுவதென்பது அவர்கள் எண்ணக்கூடாததொன்று. பதினேருவது நூற்றுண்டுச் சோழச்சாசனங்கள், தோற்றுப் போன வீரர்கள் பெண் உடை உடுக்கும்படி செய்யப்பட்டார்கள் என்று நமக்கு அறிவிப்பதைப் பார்த்தால், அக்காலத்தில் வீ ர ம் எவ்வளவு இன்றியமையாததாகக் கருதப்பட்டது என்பது புலனுகும். சோழர்காலத்துப் பெண்கள் இக்காலத்தவரைக் காட்டிலும் நாகரிக மிக்கவர் என்று சொல்ல வேண்டும். சங்ககாலத்திலும் சோழர்காலத்துக்குப் பிற்பட்ட காலத்திலும் இருந்த உடன் கட்டை ஏறுதல் என்ற பழக்கம் சோழர் காலத்தில் இல்லே. இரண்டாம் பராந்தகன் மனேவி வானவன்மாதேவி மட்டும் தன் மன்னனேடு உடன்கட்டை ஏறினதாக நாம் படிக்கின்ருேம். ஆடலிலும், பாடலிலும் இக்காலத்தைவிட அக்காலத்தில் அநேகர் சிறந்திருந்தனர். இவர்களில் சிலர் தேவதாசிகளாகக் கோயில் திருப்பணியில் அமர்ந்திருந்தார்கள். இக்காலத்தில் தாசிகளிருப்பதுபோல அக்காலத்திலும் சிலர் தாசிகளாக இருந்தார்கள், ஆயினும் பல பொதுமகளிர் பெருமக்களுக்கு சிநேகிதர்கள்போல் இருந்தார்களேயொழிய, மற்றபடி அல்ல.

பல்லவர் காலத்திலேயே வைணவமும், சைவமும் தளேத்தபோதிலும் இவற்றின் ஒழுங்கு முறைகளெல்லாம் சோழர்காலத்திலே சீர்படுத்தப்பட்டன. சங்கரர், இராமானுஜர் என்ற சைவ, வைணவ மத போதகர்கள் வாழ்ந்த காலம் முறையே கி. பி. ஒன்பதாம், பன்னிரண்டாம் நூற்ருண்டுகள். ஆகவே சோழர்காலம் இந்துமதத்தின் வளர்ச்சிக் காலம் என்று சொல்லவேண்டும். சோழ மன்னர்கள் சைவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் பிற மதங்களுக்குத் துன்பம் கொடுக்கவில்லே. இராஜராஜன் என்ற சோழ மன்னனின் தமக்கை குந்தவை, சிவனுக்கும் திருமாலுக்கும் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள தாதாபுரம் என்ற இடத்தில் கோயில்கள் அமைத்தாள். தஞ்சையிலுள்ள

பெரிய சிவன் கோயில் சோழர் புகழை என்றும் தாங்கி நிற்கிறது. ஆனால் இதைக் கட்டிய இராஜராஜன் மைசூரில் திருமாலுக்குப் பல கோயில்கள் எடுத்தான். நாக பட்டினத்தில் புத்தவிகாரம் ஒன்று கட்டவும் இவன் பொரு ளுதவி செய்தான். 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்றபடி மக்கள் குறுகிய மனப்பான்மையை ஒழித்துப் பல மதத்தினரும் ஒன்றுகூடி ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். அக்காலத்தில் சைவமத வெறியர் என்று சொல்லக்கூடிய காலமுகர், கபாலிகர், பாசுபதர் என்ற சிலர்மட்டுமே பிற மதத்தினரைக் குறுகிய கண் கொண்டு நோக்கினர்.

சோழர்காலத்தில் கோயில்கள் எங்கும் பெருமளவில் எடுக்கப்பட்டன. காவிரிக்கரை முழுதும் சோழ மன்னரும், அவர்தம் மனைவிமக்களும் கோயில்கள் கட்டினார்கள். பராந்தகன் புலியூர் சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்தான். இராஜராஜன் பொன்னாலான பல அணிகளையும், முத்து மகுடம், திருக்கொற்றக்குடை முதலிய பல விலையுயர்ந்த பொருள்களையும் தஞ்சைப் பெரிய கோயில் தேவதாசி களுக்கு அளித்தான். இவ்வாறே பிறரும் கோயில் களுக்குப் பல திருப்பணிகள் செய்வித்து மானியங்கள் வழங்கினர். தூண்டா விளக்குக்கும், அனாதைகளுக்கு அன்னமிடும் பொருட்டும் அக்காலத்தில் தானமாகக் கொடுக் கப்பட்ட ஆடுகளும், பசுக்களும் பலப்பல. தஞ்சைப் பெரிய கோயில் பணிகள் நடைபெற முப்பத்தைந்து ஊர்களை இராஜராஜன் கொடையாக அளித்தான்.

கோயில் திருப்பணிகளைக் கவனிக்க அர்ச்சகன், ஓதுவார், பக்கவாத்தியக்காரர், இவர்களுக்கு மேலாக, கண் காணிப்பாளரும் இருந்தார்கள். அக்காலத்தில் கோயில்கள் சமய ஆராய்ச்சியும், சமயச் சொற்பொழிவுகளும் நடக்கு மிடங்களாகவும் இருந்தன. மூன்றாம் குலோத்துங்கன் அரசு செலுத்தியகாலத்தில் அவன் அரசுக்குட்பட்டிருந்த சிற்றரசன் ஒருவன் திருவொற்றியூர்க் கோயிலைச் சேர்ந்தாற் போல் சமய ஆராய்ச்சி மண்டபம் ஒன்றைக் கட்டுவித்துச்

சமயச் சொற்பொழிவுகள் நடைபெறச் செய்தான். அதற்கு மானியமாகக் குலோத்துங்கன் காவனூர் என்ற சிற்றூர் ஒன்றை உதவினன். இவை அக்காலத்தில் கோயில்களில் நடந்த சமயப் பணிக்கு எடுத்துக்காட்டுகள். இத்தகைய சான்றுகள் சாசனங்களில் பல இருக்கின்றன. இன்னும் கோயில்கள் பொது மன்றங்களாகவும், நீதிமன்றங்களாகவும், நாடக மேடைகளாகவும், பள்ளிக்கூடங்களாகவும், மருத்துவ இடங்களாகவும் பணியாற்றின. சுருங்கக்கூறின் சோழர் காலத்துக் கோயில்கள் மத வாழ்க்கைக்கு மட்டுமின்றிச் சமூகவாழ்க்கைக்கும் நிலைக்களமாய் இருந்தன.

சோழர்கால நாகரிகத்தை அளப்பதற்கு அக்காலத்தில் மக்கள் கல்வி கற்பதற்காகச் செய்துவந்த ஏற்பாடுகள் இன்னுமொரு அளவுகோலாக அமைகின்றன. மேல் நாட்டில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தங்கள் மடங்களில் மக்களுக்குக் கல்வி கற்றுக்கொடுத்துவந்த காலத்தில்தான் நம் நாட்டில் சோழ அரசாட்சி நடந்துவந்தது. ஏறக்குறைய மேல் நாட்டு முறைப்படி அக்காலத்தில் தமிழ்நாட்டுக் கோயில்களிலே மக்கள் கல்வி புகட்டப்பெற்ருர்கள். ஆனல் மேல் நாடுகளில் பலதரப்பட்ட வித்தைகளையும் கிறிஸ்துவ மடங்களில் மக்கள் கற்றுக்கொண்டார்கள். சோழர்காலத்துக் கோயிற் பள்ளிகளில் முக்கியமாக மதஞானமே போதிக்கப்பட்டது. வேதங்கள், வேதாந்தம், மீமாம்சம் போன்ற தத்துவ ஞானப் போதங்களும், இலக்கணம் போன்றவைகளுமே அவைகளில் கற்பிக்கப்பட்டு வந்தன. தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள எண்ணுயிரம் என்ற ஊரிலும், புதுச்சேரி மாவட்டத்திலுள்ள திரிபுவனம் என்ற ஊரிலும் இத்தகைய வேதபாடங்கள் சிறந்த விதத்திலே போதிக்கப்பட்டுவந்தன. கி. பி. 1067-ம் ஆண்டுச் சாசனம் ஒன்றில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருமுக்கூடல் என்ற ஊரில் கல்லூரியும் அதையடுத்து மாணவர் விடுதியும், மருத்துவ விடுதியும் இருந்த செய்தி குறிப்பிடப்படுகின்றது. இங்கு உலகியல் சம்பந்தப்பட்ட சாஸ்திரங்கள் போதிக்கப்பட்டிருக்கலாம்.

ஆனல் இதைப்பற்றி நமக்கு ஒன்றும் உறுதியாகத் தெரியாது. மற்ெருரு சாசனம் தஞ்சைமாவட்டத்திலுள்ள திருவாவடு துறை என்ற ஊரில் மருத்துவப்பள்ளி ஒன்று இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. இங்கே பண்டைக்கால மருத்துவ நூலாகிய சரகன் வாக்படன் ஆகியவர்களின் முறைகள் கற்பிக்கப்பட்டன போலும். அக்காலத்திய கல்வி முறைகளைப் பற்றிய விவரங்கள் நமக்குத் தெரியவில்லை. ஆயினும் அநேகர் எழுதப்படிக்கவாவது தெரிந்திருந்தார்கள் என்பதைப்பற்றி சந்தேகம் வேண்டியதில்லை. கிராமங்கள் ஒவ்வொன்றிலும் மரத்தினடியே கூட்டப்பட்ட பள்ளிக்கூடங்கள் இருந்தன என்பது நமக்கு உறுதியாகத் தெரிகின்றது. ஏனென்ருல் ஒவ்வொரு கிராமத்திலும் இருந்த உபாத்தியாயர் கிராம உத்தியோகஸ்தர்களில் ஒருவராகக் கருதப்பட்டாரென்றும், அவருக்கு மானியங்கள் வழங்கப்பட்டன என்றும் நமக்குச் சாசன வாயிலாகத் தெரிகின்றது. கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் என்ற பெரும்புலவர்களும் குலோத்துங்கன், கோவை ஆசிரியர், விராந்த பல்லவராயர், சங்கரசோழன் உலா ஆசிரியர் குணவீரப்பண்டிதர், அரும்பாக்கத்து அருள் நிலை விசாகன் என்ற சிறு புலவர்கள், இன்னும் ஜெயங்கொண்டார் போன்ற பெரும் புலவர்கள், பவணந்தி முனிவர் போன்ற இலக்கண ஆசிரியர்கள் முதலியவர்கள் சோழர் காலத்துப் புலவர்களில் சிலராவர். கம்பராமாயணம், பெருங்கதை, சீவகசிந்தாமணி. பெரியபுராணம் முதலிய நூல்கள் சோழர் காலத்தில் எழுந்து இன்றும் புகழ் மாருது நிற்கும் நூல்களாம். சங்ககாலந்தொட்டு நன்ருகப் பயிலப்பட்டுவந்த தமிழ் இலக்கணம், வரம்பு எய்தியது இக்காலத்திலேதான். யாப்பருங் கலக்காரிகை, வீரசோழியம், தண்டியலங்காரம், நேமிநாதம் போன்ற இலக்கண நூல்களும், பிங்கலம் போன்ற நிகண்டுகளும் இக்காலத்தில் எழுந்தன. சைவ மதத்தைப்பற்றிய பிரமாணங்கள் சோழர் காலத்தில் அறிஞர் உள்ளத்தை ஈர்த்தன. இதன்காரணமாய் சைவ சித்தாந்தம் என்ற தத்துவம் வெளிப்படலாயிற்று. பதிமூன்ரும் நூற்ருண்டின் முதற்பாகத்தில் வாழ்ந்த மெய்

கண்டார் என்பவர் சைவ சித்தாந்தப் பிரமாணங்களைச் சிவஞானபோதம் என்ற நூலிலே வெளியிட்டார். விஜயாலயன் காலத்திற்குப் பிறகு ஒவ்வொரு சோழ அரசனும் ஒரு புலவரைத் தன் ஆசிரியராகக் கொண்டான். இராஜராஜன் காலத்தைச்சேர்ந்த சர்வசிவ பண்டிதர், மூன்றும் குலோத்துங்கன் காலத்தைச் சேர்ந்த ஈசுவர சிவன் முதலியோர் இவர்களில் சிலராவர். சோழர் காலத்தில் கட்டப்பட்ட பல கோயில்களையும், அவற்றில் காணக் கிடக்கும் சிற்பங்களையும் ஓவியங்களையும் இன்றும் நாம் காண்கின்றோம். அவைகளைக் கொண்டு கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்ற இவை அக்காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்தன என்பதையும் காணக்கூடும். டாக்டர் ஸ்மித் என்ற ஆங்கில ஆசிரியர் இராஜராஜன் கட்டிய தஞ்சைக் கோயிலைப்பற்றிக் குறிப்பிடும் போது, "இதைவிட நன்றாக நிர்மாணிக்கப்பட்ட கோயில் தென்னிந்தியாவிலேயே இல்லை" என்று குறிப்பிடுகின்றார். இந்தியாவிலுள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் மிக உயரமானதும், பெரியதும், தஞ்சாவூரில் இராஜராஜன் கட்டிய இந்தக் கோயிலாகும். அவன் மகன் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்தில் மற்றொரு பெரிய கோயிலை அமைத்தான். இது தஞ்சைக் கோயிலினுடைய கட்டடக் கலையைப் பின்பற்றி அதிலும் அழகுற வாய்ந்துள்ளது. இராஜேந்திரன் இந்தக் கோயிலை போர்க் காலங்களில் கோட்டைபோல் உதவும்படி அதை மிக வலுக்கொண்டதாகக் கட்டினான். சோழர்காலம் சிற்பக் கலைக்கு மிகச் சிறந்தது என்று முன்னர் குறித்தோம். சிவன், பிரம்மன், விஷ்ணு, இலக்குமி, பூதேவி, ஸ்ரீராமர், சீதை, தேவாரம்பாடிய சைவப் பெரியார்கள் இவர்கள் இக்காலத்திலே சிலையில் அடித்து வைக்கப்பட்டிருந்தார்கள். இவைகளில் மிக முக்கியமானது கி. பி. 10-ம் நூற்றாண்டில் செய்யப்பட்ட நடராஜர் சிலையாகும். இவைகளில் பல உலகப் பொருட் காட்சி சாலைகளில் இடம்பெற்றிருக்கின்றன, கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயில் விமானத்திலும், வெளிப்

புரத்திலும் காணும் சிற்பங்களைக் காட்டிலும் உயர்ந்த சிற்பங்கள் தென்னிந்தியாவில் மட்டுமல்ல, தென்னிந்தியக் கலையைப் பின்பற்றிய சாவகக் கலையிலும் இல்லையென்பது அறிஞரின் கருத்து.

சோழர்காலத்தைப் பொற்காலம் என்று கூறுவதற்கு அவர்களது சிறந்த அரசியல் முறையும் ஒரு காரணமாகும். இக்காலத்திய அரசியல் முறைகள் போன்று கட்டுப்பாடுகள், திட்டங்கள், சட்டங்கள் என்பன இல்லாவிட்டாலும் ஒழுங்கு தவருமல் சோழ அரசியல் நடந்தது நமக்கு வியப்பை அளிப்பதாகும். அரசனுக்கு அறிவுறுத்த மந்திரி சபை ஒன்று அக்காலத்தில் இருந்தது என்பதற்கு நமக்கு உறுதி யான சான்று ஒன்றும் கிடையாது. மக்கள் மனத்தை அறிந்துகொள்ள இக்காலத்தைப்போல் சட்டசபைகளும் அக் காலத்தில் இருக்கவில்லை. இத்தகைய சூழ்நிலையிலே சோழ அரசியல் உயர்ந்த நிலையை அடைந்திருந்தது என்ருல், அதற்கு அக்காலத்து நாகரிகம், பண்பாடு, பிறர் பொருள் வேண்டாமை, கட்டுப்பாடு, கண்ணியம், பொதுநல எண்ணம் என்பவைகளே காரணங்கள் என்பதை நாம் துணிந்து கூற லாம். அரச சேவையிலேயே தம்மைத் தியாகம் செய்த பல பெரியார்கள் அக்காலத்தில் இருந்தனர். ஏனுதி, மாருயன், அதிகாரி, பெருந்தனம் என்ற பல உயர்ந்த பட்டங்கள் பெற்ற அரசியல் சேவையாளரைப்பற்றி நாம் அக்காலத்து சாசனங்களில் படிக்கின்ருேம். இவர்களெல்லாம் அக்காலத்து அரசியல் அமைதிக்கு உறுதுணையாக இருந்தார்கள். ஆண்கள் மட்டுமல்ல; பெண்களும் அரசியல் சேவையிலே ஈடு பட்டு, மாராசி, அதிகாரிச்சி என்ற பட்டங்கள் சூடப்பட்டார் கள் என்பது அக்காலத்திய சாசன வாயிலாக நாம் அறியும் உண்மையாகும்.

கிராமத்தின் தன்னுட்சி முறையைச் சங்ககால அரசியல் வரலாற்றிலே நாம் கண்டோம். பல்லவர் காலத்தில் இம்முறை வலுப்பெற்றது. சோழர்காலத்தில் அது சிறப்புப் பெற்றது. தவிர, அரசாட்சி நல்லமுறையில் நடப்பதற்காக

சோழநாடு மண்டலம், கூற்றம், ஊர் என்று பெரியதும் சிறியதுமான பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆங்காங்கு அமைக்கப்பட்ட சபைகளின் மூலமாகவும், அரசாங்கக் கண் காணிப்பாளர் மூலமாகவும் அரசாட்சி இயங்கியது. அரசன் தலைவன் என்ற முறையில் அவ்வப்போது நாட்டைச் சுற்றிவந்து, ஊர்க்கோயில் மண்டபங்களில் தங்கி, இந்தச் சபைகளின் காரியங்களைக் கண்காணித்தும் வந்தான். ஆயினும் இவையாவும் மக்களின் சுய ஆட்சிக்கு உதவியாக இருந்தனவேயன்றித் தடையாக இருக்கவில்லை. கிராம சபைகள் வரிகள் விதித்தன. கிராமக் கோயில்களையும், ஏரி களையும், நீர்ப்பாசன வசதிகளையும் இன்னும் இத்தகைய பல அரசியல் விஷயங்களையும் கவனித்து வந்தன. வழக்குகள் நல்லமுறையில் இந்தச் சபைகளில் தீர்த்துவைக்கப்பட்டன என்பதற்கு, சுந்தரமூர்த்தி நாயனர் புராணத்தில் சேக்கிழார் விவரிக்கும் திருவெண்ணைநல்லூர் சபை சிறந்த எடுத்துக் காட்டாகும். கிராமசபைகள் பொதுத்தேவைக்கு வேண்டிய பணத்தைக் கோயில் சபையிடம் கடன் வாங்கும் பழக்கம் அக்காலத்தில் இருந்தது. உதாரணமாக, நல்லூர் கிராமசபை அவ்வூர் கோயில் அதிகாரிகளிடமிருந்து வாங்கிய கடனுக் காக 'அங்காடிக்குழி' என்ற தற்காலத்திய விற்பனைவரி போன்ற ஒருவரியை கிராமத்தாரிடம் வசூலித்து அதை வாங்கின கடனுக்கு வட்டியாக அளித்ததாகச் சாசனங்கள் கூறுவதால் இதை அறியலாம். கிராம சபைகளில் வயது வந்த எல்லா ஆண்களும் உறுப்பினராக இருந்தபோதிலும் காரியங்களைக் கவனிக்க செயற்குழு ஒன்று (Executive Committee) குடவோலை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இவ்விதமே ஒவ்வொரு காரியத்தைக் கவனிக்க ஏரிவாரியம், பொன்வாரியம் போன்ற பல குழுக்களும் இருந்தன.

தமிழ்நாடு போரிலே கண்ட பெரும் வெற்றிகள் எப்படி சோழர் கொண்ட வெற்றிகளாக இருந்தனவோ, அப்படியே சோழர் காலத்திலிருந்த பெரும்படை தமிழ்நாட்டில் மற்ற எக்காலத்திலும் இருந்ததில்லை. காலாட்படை, யானை ஆட்கள்,

குதிரைச் சேவகர், கைக்கோளப் பெரும்படை, வில்லிகள் என்ற வில்வீரர், வேளக்காரர் என்று சொல்லப்பட்ட அரசனது மெய்க்காப்பாளர் என்ற பலவகைப் படையோடு பெரும் கடற்படையும் அக்காலத்திலிருந்தது. இராஜராஜன் சேரர்மேல் கொண்ட காந்தளூர்ச்சாலை வெற்றி போன்ற வெற்றிகளும், இராஜேந்திரனுடைய கடார வெற்றியும் இக் கடற்படையின் பெருமையை எடுத்துக்காட்டுவன வாகும். சோழர் படைகள் நாடெங்கும் பல இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. இந்த இடங்களுக்கு கடகம் (Cantonment) என்ற பெயர் அக்காலத்தில் வழங்கியது.

19. பாண்டியர் மறுமலர்ச்சி

முதலாம் இராஜாதிராஜன் என்ற சோழ மன்னன் காலத்திலேயே பாண்டியர்கள் மறுமுறையும் பலம் பெற்ருர்கள் என்பதை நாம் முன்னரே குறித்தோம். அதுவே பாண்டிய ஸ்ரீமார ஸ்ரீவல்லவன் காலமாகும். அவனுக்குப் பின் பராக்கிரமனும், அவனுக்குப்பின் பராந்தகனும், பராந்தகனுக்குப்பின் மாரவர்மனும் பட்டமெய்தினுர்கள். பாண்டிய மறுமலர்ச்சிக்கு மாரவர்மன் அடிகோலியதை அவனது கன்னியாகுமரி, திருவாங்கூர் சாசனங்கள் எடுத்துக் காட்டும் விதமும் முன்னரே குறிக்கப்பட்டது. மாரவர்மன் காலம்வரை பாண்டியரின் வளர்ச்சிக்குப் பல இன்னல்கள் நேர்ந்தபோதிலும் அவ் வளர்ச்சி தடைப்படவில்லை. ஆனுல் இப்போது பாண்டியருள்ளே ஏற்பட்ட ஒருபோர் அதைத் தடுக்க முற்பட்டது. மாரவர்மன் இறந்த பிறகு குலசேகரன் என்ற அவனது மகன் மதுரையில் சிம்மாசனம் ஏறினுன். ஆனுல் பராக்கிரம பாண்டியன் தானே பட்டத்திற்குரியவன் என்று உரிமை பாராட்டி ஈழ மன்னன் உதவியை நாடினுன். குலசேகரனே, சோழ மன்னருடைய உதவியை நாடினுன். ஈழ மன்னன் பராக்கிரமனுக்கு உதவியாக இலங்காபுர தண்டநாதன் என்ற படைத்தலைவன்கீழ் ஒரு பெரும்படையை அனுப்பி வைத்தான். இவ்விதமாகச்

சிறுசண்டை பெரும் போர் ஆயிற்று. இருபக்கமும் மிகுந்த வீரத்தோடு சண்டை செய்தார்கள். சண்டைகள் பல நடந்தன. யார் யார் எப்போது வெற்றிகண்டார்கள் என்றுகூட நாம் உறுதியாகக் கூறமுடியாத நிலையில் சண்டைகள் நிகழ்ந்தன. மகாவமிசம் என்ற ஈழ நூல் இலங்காபுரனுக்கே முழுவெற்றி என்று கூறுகின்றது. ஆனால் ஆற்பாக்கத்திலிருக்கும் சோழ சாசனம் சோழரே வெற்றி கண்டார்கள் என்று கூறுகின்றது. இது எங்ஙனமாயினும் யுத்தத்திற்குப் பிறகு குலசேகரன் பட்டமெய்தினன். ஆனால் குலசேகரனுக்குப்பிறகு அவன் மகன் விக்கிரம பாண்டியன் பட்டத்திற்கு வராமல் பராக்கிரமன் புதல்வன் வீரபாண்டியன் ஈழநாட்டின் உதவிபெற்றுச் சோழரை எதிர்த்தான். இதிலும் சோழர் ஈழப்படையை வென்று மதுரையிலே வெற்றித்தூண் நாட்டினர். இதோடு நிற்கவில்லை பாண்டியச் சோழப்போர். மூன்றும் முறையும் மூண்டது. இம்முறை வீரபாண்டியன் நெட்டூரில் முறியடிக்கப்பட்டான் (கி. பி. 1187). அதற்குப் பிறகு விக்கிரமன் மதுரையில் மன்னனானன். இதையே நாம் பாண்டிய மறுமலர்ச்சியின் தொடக்கம் என்று கூறவேண்டும். விக்கிரமனுடைய மக்கள் ஜடாவர்மனும், குலசேகரனும், மாரவர்மன் சுந்தரனும் பாண்டிய அரசை உறுதிப்படுத்தினர். குலசேகரன் காலந் தொட்டு பாண்டியர் மேலும்மேலும் புகழ்பெற்றனர். குலசேகரன் காலத்தில் பாண்டியர்கள் தங்கள் அரசாட்சியை உறுதிப்படுத்தினதுமட்டுமல்ல; அவர்கள் தங்கள் அரசின் எல்லையை வடக்கே நெல்லூர், கடப்பைவரை பரப்பினர். அப்போது கி. பி. 12-ம் நூற்றுண்டு முடிவடைந்து கொண்டிருந்தது.

மாரவர்மன் சுந்தரன் மதுரையிலே ஆட்சி செய்த காலம் (கி. பி. 1216-38) பாண்டிய மறுமலர்ச்சி வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய காலம் ஆகும். அப்போது சோழர்களுடைய வாழ்வு மூன்றும் இராஜ ராஜன் என்பவன் கையில் இருந்தது. சுந்தரன் சோழ

நாட்டின்மேல் படையெடுத்து உறையூரையும், தஞ்சையையும் தீ வைத்துக் கொளுத்தினன். சோழர்களால் சுந்தரன் குடும்பம் பெரிதும் உதவப்பட்டுவந்தது. அப்படிப்பட்ட சோழருக்கு பாண்டியன் இத்தகைய நிலையை ஏற்படுத்தியிருக்க வேண்டியதில்லை. ஆயினும் வெற்றிக்குப்பின் சுந்தரனுக்கு நல்ல எண்ணம் உதித்ததுபோலும். சுந்தரன் சிதம்பரம் சென்று அங்கே நடராஜப் பெருமானை வழிபட்டபின், சோழமன்னன் மூன்றும் இராஜராஜனை அழைத்து சோழநாட்டை அவனுக்குத் திருப்பித்தந்தான். இதனல் மாரவர்மன் சுந்தரன் "சோனுடு வழங்கி அருளியவன்", "சோனுடு கொண்டு அருளியவன்" என்று பாண்டிய சாசனங்களில் போற்றப் படுகின்றான். ஆனல் நாடுபெற்ற சோழன் பாண்டியனுக்கு இறை கொடுக்க மறுத்ததால் சுந்தரன் மறுமுறையும் படையெடுத்துச் சோழ மன்னனை முறியடித்தான். கங்கைகொண்ட சோழபுரம் பாண்டியர் கையில் வந்தது. சுந்தரன் தானே சோழ அரசனுகப் பட்டம் (கி. பி. 1236) சூடிக் கொண்டான்.

மாரவர்மன் சுந்தரனுக்குப் பிறகு இரண்டாம் மாரவர்மன் சுந்தரன், முதலாம் ஜடாவர்மன் சுந்தரன், மாரவர்மன் குலசேகரன், முதலியோர் பாண்டிய மன்னர்களாயினர். முதலாம் ஜடாவர்மன் சுந்தரன் ஆட்சிக் காலத்தில் பாண்டிய அரசு உச்ச நிலையை அடைந்தது. இவன் திருவாங்கூர் மன்னனைத் தோற்கடித்துக் கண்ணனூரைக் கைப்பற்றிக் கொங்குநாட்டை வென்று ஹோய்சாளரையும், சோழரையும் புறங்கண்டு, "எம்மண்டலமும் கொண்டருளிய," என்று சாசனங்களால் போற்றப்படுகின்றான். இவனுக்குப் பிறகு பட்டத்திற்குவந்த மாரவர்மன் குலசேகரன் ஏறக்குறைய ஒரு அரை நூற்றுண்டுகாலம் அமைதியாக அரசாண்டான். ஆனல் அது புயலுக்கு முற்பட்ட அமைதியாக முடிந்தது.

20 ஹோய்சாளரும்—காக்கதீயரும்

மாரவர்மன் குலசேகரனுக்கு சுந்தரன், வீரபாண்டியன் என்ற இரு புதல்வர்கள் இருந்தார்கள். இவர்களில் வீர பாண்டியனையே குலசேகரன் தனக்குப்பின் அரசுக்குரியவனுக கருதி அவனுக்கு அரசாங்க விஷயங்களில் பயிற்சி அளித்து வந்தான். இதை ஆற்ருத சுந்தரன் தந்தையைக் கொன்று அரசைக் கைப்பற்றினுன். அப்போதுதான் வீரபாண்டியன் மாலிகாபூரின் உதவியை நாடினுன். (கி, பி. 1310). இவ்விதமாகத் தமிழ்நாட்டு வரலாற்றில் முகமதியர் புக வழி ஏற்பட்டது.

அதேசமயத்தில் தக்காணத்திலும் மைசூரிலும் காக்க தீயர், ஹோய்சாளர் என்ற புது அரச குலங்கள் தோன்றின. இவர்களில் ஹோய்சாளர் என்போர் மைசூர் மாவட்டத்தி லுள்ள சோசவூர் என்ற இடத்தில் தோன்றி அக்காலத்திய சோழ, சாளுக்கியச் சண்டைகளில் பெயர் பெற்றனர். அப்படிப் பெயர் பெற்ற ஹோய்சாளரில் முதல்வன் முதலாம் பள்ளாளன் (கி. பி. 1100-1106). இவனுக்குப்பின் வந்த பிட்டிதேவன் அல்லது விஷ்ணு வர்த்தனன் காலத்தில் ஹோய் சாளர் அரசு தக்காணத்தில் உறுதிபடுத்தப்பட்டது. ஹோய் சாளர்கள் சமணர்கள் ஆனபோதிலும் விஷ்ணுவர்த்தனன் வைணவ மதத்தைத் தழுவி, பேளூரில் பல பெரிய கோயில் கள் அமைத்தான். கி. பி. 1173ல் பட்டத்துக்குவந்த இரண்டாம் பள்ளாளன் மிகுந்த வீரமுடையவன்; இவன் பல வெற்றிகள் கண்டு ஏறக்குறைய அரை நூற்ருண்டு ஆட்சி செலுத்தினுன். இவனுக்குப் பின்வந்த மன்னர்கள் இவனைப் போன்றே வீரம் செறிந்தவர்களாவார்கள்.

ஹோய்சாளர் மைசூர் மாவட்டத்தில் தங்கள் அரசாட் சியை எழுப்பியதுபோல ஐதராபாத் பிரதேசத்திலுள்ள வாரங்கல் என்ற இடத்தில் காக்கதியர் தங்கள் அரசை கி. பி. 12-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் நிறுவினர். இதற்குக் காரணமாயிருந்தவன் முதலாம் பிரதாபருத்திர காக்கதீயன்.

கி. பி. 13-ம் நூற்றாண்டில் ஹோய்சாளரும், காக்கதியரும் தமிழ்நாட்டைக் கைப்பற்ற முயன்றனர். மாரவர்மன் சுந்தரன் மூன்றும் இராஜராஜனைத் தோற்கடித்து பிறகு மறுபடியும் அவனது அரசை அவனுக்குக் கொடுத்ததாக முன்பே சொன்னோம். இதற்குக் காரணமாய் அமைந்தவன் ஹோய்சாள மன்னன் இரண்டாம் நரசிம்மன் ஆவான். இவன் அப்போது காஞ்சியையும், ஸ்ரீரங்கத்தையும் கைப்பற்றி தமிழ்நாட்டில் முன்னுக்கு வந்துகொண்டிருந்தான். பாண்டியனோடு நட்புக் கொண்டான். அதன் வழியாய் சோழர்களுக்கு உதவிபுரிந்து சோழ இராச்சியத்தை நிறுவியவன் என்ற பட்டத்தையும் சூடினான். ஆனால் மாரவர்மன் சுந்தரன் மறுபடியும் சோழமன்னனைத் தோற்கடித்தான், அப்பொழுது சோழ அரசை நிறுவிய தனக்குக் கேவலமாயிற்றே என்று ஹோய்சாள மன்னன் சோழனுக்கு உதவிபுரிந்தான். மூன்றும் இராஜராஜனுக்குப் பிற்பட்ட மூன்றும் இராஜேந்திரன் நரசிம்மன் மகன் சோமசுவரனை மாமன் என்று அழைப்பதையும் இரண்டாம் மாரவர்மன் சுந்தர பாண்டியன் சோமேசுவரனை மாமடி என்று அழைப்பதையும் நாம் சாசனங்களில் பார்க்கின்றோம். பாண்டியரையும், சோழரையும் கீழ்ப்படுத்தி ஹோய்சாளர்கள் தமிழ் நாட்டில் உச்ச நிலையை அடைய எண்ணினர். இதற்குச் சான்றாக மைசூர் பிரதேசத்திலுள்ள நரசிம்மனுடைய சில சாசனங்கள் நரசிம்மனை சோழ அரசை நிறுவினவன் என்று மட்டுமல்ல, பாண்டியரை நீக்கினவன் என்றும் குறிப்பிடுகின்றன. அவனது அரிசிக்கரைச் சாசனம் நரசிம்மனது பெருமையைப் பின்வருமாறு குறிக்கின்றது: "வீரசிம்மன் பாண்டிய நாட்டில் வெற்றிமாலை சூடினான். ஆயினும், பாண்டியர் விட்டுக் கொடுப்பதாயில்லை. அப்பொழுது கடலும், கடல் மீன்களும், எழுந்து பாண்டியருக்குப் புத்தி புகட்டின: 'உனதெலாம் கொடுத்து ஹோய்சாளருக்கு கீழ் படி. அதுவே உனக்கு நலம்'."

ஹோய்சாளர் தமிழ்நாட்டில் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று எண்ணங்கொண்டபோது ஹோய்சாளரை வென்று தமிழ்நாட்டில் தாமே ஆள வேண்டுமென்று

காக்கதியர் ஆசைகொண்டனர். இரண்டாம் நரசிம்மன் காலத்தில் அரசாட்சி செய்த காக்கதிய கணபதி தெற்கே பாண்டிய நாடுவரை படையெடுத்தான். ஆனால் இவன் வெற்றியை முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் தடுத்தான். ஹோய்சாளர்களோ பாண்டியரோடு உறவுகொண்டு, இரண்டாம் பள்ளாளன் என்ற ஹோய்சாள மன்னன் ஒரு பாண்டிய இளவரசியையும் மணந்துகொண்டான். இவன் ஆதிக்கம் தெற்கே மதுரைவரையிலும் மேற்கே மங்களூர் வரையிலும் பரவிற்று. பதிமூன்றும் நூற்றாண்டின் இறுதியில் பட்டமெய்திய மூன்றும் பள்ளாளன் ஹோய்சாள மன்னர்களிளெல்லாம் மிகவும் வீரம் செறிந்தவன். ஆனால் மாலிக் காபூரின் படைகள் பள்ளாளனின் எண்ணங்கள் உருப் பெறுமல் செய்தன.

தமிழ்நாட்டில் ஹோய்சாளர்கள் தங்கள் ஆட்சியின் சின்னங்களை இன்னும் பல இடங்களில் விட்டு வைத்திருக்கின்றார்கள். வீரராமநாதன் என்ற ஹோய்சாள மன்னனுடைய சாசனங்கள் திருச்சிராப்பள்ளியிலிருந்து பெல்லாரி வரையிலும் தாரமங்கலம், இராயக்கோட்டை, அதமன் கோட்டை, சேலம், ஒசூர், கம்பையநல்லூர் முதலிய இடங்களில் இன்றும் காணக்கிடக்கின்றன. மூன்றும் பள்ளாளனுடைய சாசனங்கள் கோயம்புத்தூரிலிருந்து, நீலகிரி பழனி வரை இன்றும் காணலாம். அதுமட்டுமல்ல; பள்ளாளனது படைத்தலைவர்களில் ஒருவனை மாதவதண்ட நாயகன் என்பவனைப்பற்றி நீலகிரியை வென்றவன் என்றும், கொங்கு நாட்டில் வெற்றி கண்டவன் என்றும் சாசனங்கள் குறிக்கின்றன. கோவை மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலத்துக் கருகில் இன்றும் நாம் காணும் டணாயக்கன் கோட்டையைக் கட்டியவனும் இவனே. ஹோய்சாளருடைய ஆட்சி, சோழ, பாண்டிய, கொங்கு நாடுகளில் பதிமூன்று, பதினன்காம் நூற்றாண்டுகளில் மிகுதியாகப் பரவியிருந்தது. 1327-ம் ஆண்டு முகமதியர் தமிழ் நாட்டின் மீது படையெடுத்தபோது ஸ்ரீ ராமானுஜருடைய பெயர் பெற்ற ஸ்ரீபாஷ்யம் என்ற

நூலுக்கு உரைகண்ட வேதாந்த தேசிகர், தனது உரையை சத்தியமங்கலத்திலிருந்த ஹோய்சாளரிடமே கொண்டு சென்று பத்திரப்படுத்திஞரென்றால் அக்காலத்தில் தமிழ் நாட்டில் ஹோய்சாளர்களுக்கு எத்தகைய புகழ் இருந்தது என்பதை நாம் ஒருவாறு ஊகிக்கக்கூடும்.

21. விஜயநகரப் பேரரசு

கி. பி. 1327-ல் டில்லியில் அரசு நடத்திய மகமத்பீன் துக்ளக் என்ற மன்னன் தமிழ் நாட்டின் தென் பகுதியை தன் குடைக்கீழ் கொண்டுவந்து அதற்கு ஜலாலுதீன் ஹஸன் என் பவனைப் பரிபாலகனுக (Governor) நியமித்தான். ஆனல் ஏறக்குறைய 1335-ல் ஹஸன் தன் தனி ஆட்சியை மதுரையில் நிறுவினன். கி. பி. 1340-ல் கியாஸ் உத்தீன் மதுரைக்கு அரசனுகி மிகக் கொடுஞ்செயல்கள் புரிந்தான். அவன் இழைத்த கொடுமை தமிழ்நாடு முழுவதையும் அச்சுறுத்திற்று. இந்த முகமதிய மன்னனின் அட்டூழியங்களை விஜயநகரை ஆண்ட முதலாம் புக்கராயனின் மகன் கம்பண்ணன் என்பவன் அடக்கினன். கம்பணன் காஞ்சியையும், மதுரையையும் கைப்பற்றி முகமதிய மன்னனையும் கொன்று வீழ்த்தினன் என்பது கம்பணன் மனைவி கங்காதேவி எழுதிய மதுரா விஜயம் என்ற நூலின் வாயிலாக நமக்குத் தெரிகிறது. இது நடந்தது ஏறக்குறைய கி. பி. 1345-ல் என்று கூறலாம்.

இவ்விதமாக விஜயநகரப் பேரரசு தமிழ் நாட்டின் விவகாரத்தில் முதன் முதலில் கலந்தது. தென்னிந்தியாவில் எழுந்த முகமதிய ஆதிக்கத்திற்கு அணையிட எழுந்தது விஜயநகரப் பேரரசு. இது கி.பி.1336-ல் நிகழ்ந்தது என்பது வரலாற்று ஆசிரியர்களில் பெரும்பாலானேரின் அபிப்பிராயமாகும். இந்தப் பேரரசு எழுந்தது துங்கபத்திரா நதிக்கரையிலுள்ள ஹம்பி என்ற ஊரிலே. இதற்குக் காரணமாயிருந்தவர்கள் ஹரிஹரன், புக்கன் என்ற இரு சகோதரர்கள்.

இவர்கள் காக்கதிய அரசனின் கீழ் இருந்த சேனைத்தலைவர் என்பர் சிலர். இவர்கள் ஹோய்சாள மன்னன் மூன்றும் பள்ளாளன் சேனையில் இருந்தவர்கள் என்பர் மற்றொரு சாரார்.

விஜயநகர சாம்ராச்சியத்தை நிறுவிய இருவரில் புக்கன் முதலாம் புக்கன் எனப்பட்டான். இவன் காலத்தில் தான் கம்பணன் தமிழ்நாட்டின் பெரும்பகுதியைப் புக்கராயன் குடைக்கீழ் இறுத்தினன். புக்கன் ஆண்ட நாடு பல இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் முல்வாயி இராச்சியம் மைசூர், சேலம், தென் ஆர்க்காடு முதலிய மாவட்டங்களைத் தன்னுள் அடக்கியிருந்தது. கம்பணன் மதுரையிலிருந்த மகமதியரை நிலைகுலையச் செய்ததுமன்றித் தமிழ் நாட்டின் பல பாகங்களையும் விஜயநகர ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். அவன் காஞ்சியைக் கைப்பற்றியதும் தென் ஆர்க்காடு மாவட்டத்திலே தன் ஆட்சியை நிறுவினதும் மதுரா விஜயம் என்ற நூலின் மூலமாக நாம் அறிகின்றோம். இது வன்றிக் கொள்ளேகாலம் தாலுகாவிலுள்ள மொடகல்லி, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சடையம்பாளையம் என்ற இடங்களில் கம்பணனுடைய சாசனங்களை நாம் பார்க்கின்றோம். மேற்குறித்த சடையம்பாளையம் சாசனம், முகமதியரால் நொறுக்கப்பட்ட கூரையூர்க் கோயில்களைக் கம்பணன் புதுப்பித்தான் என்று கூறுவதால், விஜயநகர அரசர்கள் சாத்மிகமாகத் தமிழ் நாட்டில் தங்கள் அரசைப் பரப்பினர்கள் என்பது நன்கு புலப்படும். கி. பி. 1380-ல் இரண்டாம் ஹரிஹரன் என்ற விஜயநகர மன்னன் விருப்பாக்ஷன் என்ற தனது புதல்வனைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பினன். விருப்பாக்ஷன் தொண்டை மண்டலத்திலும், சோழ பாண்டிய மண்டலங்களிலும், ஈழத்திலும் வெற்றி கண்டதாகக் கூறுவதோடு, ஏரகண்டள்ளி, சிங்காநல்லூர் என்ற கொங்கு நாட்டைச் சேர்ந்த ஊர்களிலேயிருந்து சாசனங்கள் பிறப்பித்துள்ளான். இரண்டாம் தேவராயன் காலத்தில் விஜயநகர மன்னர்களின் தமிழ் நாட்டு ஆதிக்கம் உச்ச நிலையை

6

அடைந்தது. இவன் காலத்திய சாசனங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கொழுஞ்சிவாடி என்ற ஊரிலும், சேலம் மாவட்டத்திலுள்ள கடம்பத்தூர் என்ற ஊரிலும் தீர்த்தமலை என்றஊரிலும், மதுரை மாவட்டத்திலுள்ளபழனியிலும் இருக்கின்றன. இவன் காலத்தில் மன்றூடியார் போன்ற விஜயநகர அரசாங்க வேலைக்காரர்களும் நாடுதலவரிக்கை, செட்டியார் மகிமை என்ற விஜயநகர அரசாங்கத்து வரிகளும் குறிக்கப் படுகின்றன. மேற்குறித்த தீர்த்தமலைச் சாசனத்திலிருந்து மகாபிரதானி இலக்கண உடையார் என்பவர் அக்காலத்தில் மதுரையில் விஜயநகரப் பரிப்பாலகராக இருந்து அரசாங்கக் காரியங்களைக் கவனித்து வந்தார் என்பது தெரிகிறது. அக்காலத்து விஜயநகரச் சாசனங்களில் பல, இலக்கணனை "தென் கடல் மன்னன்", என்று குறிக்கின்றன. பிரதானி மட்டண்ணு ராகுத்தன் என்பவர்கள் இலக்கணனிடம் வேலை பார்த்து வந்த படைத் தளகர்த்தர்களாகும்.

இரண்டாம் தேவராயனுக்குப் பிறகு கிருஷ்ண தேவ ராயன் பட்டத்துக்கு வரும்வரை விஜயநகர அரசர்களின் வலிமை தமிழ் நாட்டில் குறைந்தது. அப்பொழுதுதான் மதுரையில் நாயக்கர்களும், கொங்குநாட்டில் உம்மத்தூர் தலைவர்களும், இராமநாதபுர மன்னனும், தஞ்சை, வேலூர் செஞ்சி நாயக்கர்களும் தமிழ் நாட்டை அங்கங்கே ஆளத் தொடங்கினர்.

கிருஷ்ணதேவராயன் காலத்திற்குமுன்பு தமிழ் நாட்டின் பெரும்பகுதி தனது சுய ஆட்சியை நிறுவியிருந்தபோதிலும் கிருஷ்ண தேவராயன் ஏறக்குறைய தமிழ் நாடு முழுவதிலுமே தனது ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தினன். நேரடியாக அவன் தமிழ் நாட்டை ஆளாவிட்டாலும் தனது அதிகாரிகள் மூலமும், நாயக்கர்கள் மூலமும் விஜயநகர் ஆட்சியை அங்கு நிலை நிறுத்தினன். விஜய நகரில் ஆண்ட பல மன்னர்களிலும் மிகப் பெரியவன் கிருஷ்ண தேவராயன். இவன் ஆட்சியின் காலம் கி. பி. 1509-முதல் 1529-வரை உள்ள இருபது ஆண்டு களாகும். இதை மிக நீண்ட ஆட்சிக்காலம் என்று சொல்ல

முடியாது. ஆனால், இதற்குள் பல சண்டைகளில் வெற்றி கண்டு விஜய நகர எல்லையை ஒருபுறம் மைசூர் வரைக்கும், மறுபுறம் ஒரிஸ்ஸா வரைக்கும், தெற்கே தமிழ் நாட்டின் எல்லைவரை அவன் பரப்பினான். இவன் காலத்தில்தான் தென் இந்தியாவினுள் நுழைந்த போர்ச்சுக்கீசியர் கோவாப் பிரதேசத்தில் தங்கள் இருப்பிடத்தை நிறுவினர்.

கிருஷ்ண தேவராயன் காலத்தில் கலைச்செல்வம் வளர்ந்தது. கிருஷ்ண சுவாமிக்கு பிரமாண்டமான கோயில் ஒன்றைத் தலைநகரில் எழுப்பினான், போர்ச்சுக்கீசியப் பொறிவல்லுநர் உதவிகொண்டு நீர்ப்பாசன வசதிகளை அதிகரித்தான். கலைஞர்களைப் போற்றி ஆதரித்தான். அஷ்டதிக்கஜர்கள் என்று சொல்லப்படும் எட்டுப் பெரும் புலவர்கள் இவனால் ஆதரிக்கப்பட்டவர்கள்.

22. மதுரை நாயக்கர்கள்

கிருஷ்ண தேவராயன் ஆட்சியின் முதல் பாகத்தில் மதுரையில் விசுவநாதன் தலைமையிலே நாயக்க வமிசம் ஆளத்தொடங்கியது. இதற்குக் கொஞ்ச காலத்திற்கு முன்பே விஜய நகர மன்னர்கள் தங்களாட்சியைத் தெற்கே காவந்து செய்ய, மதுரையில் ஒரு நாயக்கனை ஏற்படுத்தி அவனை முக்கிய நாயக்கனாகக் கருதி வந்தார்கள். இவர்களில் நாகம நாயக்கன் என்பான் மதுரை மாகாணத்தில் பல மாறுதல்களை ஏற்படுத்தி அதை உறுதிப்படுத்த எண்ணினான். இதனால் விஜயநகர மன்னனுக்கும், நாகமனுக்கும் மன வருத்தம் ஏற்பட்டது. விஜயநகர மன்னன் நாகமனைப் பதவியினின்றும் தள்ளிவிட்டு அவனுக்குப் பதிலாக விசுவநாதனை அப் பதவிக்கு அமர்த்தினான்.

விசுவநாதனின் ஆட்சியின்காலம் கி. பி. 1529 முதல் 64வரை உள்ள காலம் என்று குறிக்கப்படுகின்றது. இவன் ஆட்சி திருச்சிராப்பள்ளியிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரையிலும், மேற்கே கொங்குநாடு வரையிலும் பரவியிருந்தது. இவனது பிரதம மந்திரியாக இருந்தவர் பெயர்பெற்ற

அரியநாத முதலியார். இவன் காலத்தில்தான் தமிழ்நாட்டில் பாளையப்பட்டுகள் எழுந்தன. திருவாங்கூர் சமஸ்தானத்தோடு விஜயநகரம் செய்த சண்டைகளில் இவனும் இவனுக்குப் பிறகு இவன் மகன் கிருஷ்ணப்ப நாயக்கனும் சிறந்த தொண்டாற்றினார்கள். கி. பி. 1565-ல் கிருஷ்ணப்ப நாயக்கன் அரியநாதரை ஒரு பெரும்படையுடன் இராமராசனுக்கு உதவியாகத் தலைக்கோட்டைக்கு அனுப்பி வைத்தான். நாயக்கர் ஆட்சியின் காலத்தில் தமிழ்நாடு 72 பாளையப் பட்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பது கர்னல் மெக்கன்ஸி அவர்கள் சேர்த்த கையெழுத்துப் பிரதிகளிலிருந்து நாம் அறியலாம். இந்த 72 பாளையப்பட்டுகளும் ஒன்பது பாகமாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றின் நான்காம் பாகம் திண்டுக்கல் பகுதியிலும், ஐந்தாவது பாகம் கம்பம், கூடலூர் பகுதியிலும், ஆருவதுபாகம் கோயம்புத்தூர் பகுதியிலும், ஏழாவது பாகம் சேலம் பகுதியிலும் சேர்ந்திருந்தன. இந்தப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் பல பாளையக்காரர்கள் இருந்தார்கள். உதாரணமாக திண்டுக்கல் பாளையப்பட்டில் பதின்மூன்று பாளையக்காரர்களும், கம்பம், கூடலூர் பாளையப்பட்டில் முப்பத்தொன்பது பாளையக்காரர்களுமிருந்தார்கள். இந்தப் பாளையக்காரர்கள் மதுரை நாயக்கர் வேண்டியபோது படைகளனுப்பக் கடமையும், அதற்குப் பதிலாக அவர்கள் பிரதேசத்தில் வரி வசூலித்துக் கொள்ள உரிமையும் பெற்றிருந்தார்கள். இவ்விதமாக நாட்டில் அமைதியும், ஒழுங்கும் நிலவியது. ஆந்திரரும், தமிழரும் சண்டைகளிலே தோளோடு தோள் நின்று போரிடவேண்டியிருந்ததால் ஆந்திரருக்கும், தமிழருக்கும் முன்பில்லாத ஒற்றுமை ஏற்பட்டது. பிற்காலத்திய இராமயப்பன் அம்மானை என்றநூலில் திருமலைநாயக்கன் மதுரையில் ஆண்டகாலத்தில் இராமநாதபுரத்து அரசனுயிருந்த சேதுபதியோடு செய்த சண்டையில் இராமயப்பன் நாயக்கன் படைத்தலைவனுக இருக்கப் பாளையப்பட்டுகளிலிருந்து பல வீரர்கள் அனுப்பப்பட்டார்கள் என்றும்,

கோயம்புத்தூர் மாவட்டதிலுள்ள ஈரோட்டிலிருந்தும் பல படைகள் திருமலைநாயக்கனுக்கு உதவியாக அனுப்பப் பட்டன என்றும் குறிக்கப்படுகின்றன.

கிருஷ்ணப்ப நாயக்கனுக்குப் பிறகு மூன்ரும் கிருஷ்ணப்பன், இரண்டாம் வீரப்பன், திருமலைநாயக்கன், நான்காம் வீரப்பன் என்ற இவர்கள் பட்டமெய்தினர்கள். மூன்ரும் கிருஷ்ணப்பன் காலத்தில்தான் (கி. பி. 1601-1609) இராமநாதபுர மாவட்டம் சேதுபதி என்ற மன்னர்கள் ஆட்சிக்கு வந்தது. முதல் இராமநாதபுர சேதுபதி அரசாளத் தொடங்கியது ஏறக்குறைய கி. பி. 1605 எனக் கொள்ளப் படுகின்றது. இரண்டாம் வீரப்பன் நாயக்கர் தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு மாற்றினன். கி. பி. 1623-ல் திருமலை நாயக்கன் பட்டத்துக்கு வந்தான். இவன் தலைநகரை திருச்சிராப்பள்ளியிலிருந்து மீண்டும் மதுரைக்கு மாற்றினன். திருமலைநாயக்கன் சிறந்த போர்வீரன். இவன் காலத்தில் திருவனந்தபுரமும், இராமநாதபுரமும் மதுரை நாயக்கன் அரசுக்கு உட்பட்டன. கொங்குநாட்டிலே இவர்கள் ஆட்சி வலுப்பெற்றதும் இக் காலத்திலேதான். கி. பி. 1656-ம் ஆண்டு மைசூர் அரசனுக்கும் திருமலை நாயக்கனுக்கும் சண்டை மூண்டது. அதன் காரணமாக மைசூர்ப் படைகள் தங்கள் கைகளில் வீழ்ந்த எல்லோருடைய மூக்குகளையும் அறுத்து அதை மைசூர் மன்னனுக்கு அனுப்பின. காந்திரவன் என்ற மைசூர் மன்னனும் அவற்றைக் கண்டு அகமகிழ்ந்தான். இந்தச் சண்டைக்கு "மூக்குச் சண்டை" என்றே பெயர். மூன்று ஆண்டு யுத்தம் நடந்தபிறகு கடைசியில் மதுரை நாயக்கன் வெற்றி கண்டான். இறுதியில் திருமலைநாயக்கன் விஜயநகர மன்னன் மூன்ரும் ஸ்ரீரங்கனையே எதிர்த்துத் தோற்கடித்தான்.

திருமலைநாயக்கனுக்குப் பிறகு இவனுடைய பேரப் பிள்ளை முதலாம் சொக்கநாதனும், அவனுக்குப் பிறகு நான்காம் வீரப்ப நாயக்கனும் பட்டத்திற்கு வந்தார்கள். சொக்கநாத நாயக்கர் தலைநகரை மீண்டும் திருச்சிராப்

பள்ளிக்கு மாற்றினன். இவன் தஞ்சாவூரைக் கைப்பற்றி நாயக்கர் இராச்சியத்தைப் பரப்பினன். ஆனல் மறுபுறம் கொங்கு நாட்டில் சேலம், கோயம்புத்தூர் பகுதிகள் மைசூருக்குச் சேர்ந்தன.

நான்காம் வீரப்பனுக்குப் பிறகு அவன் புதல்வன் இரண்டாம் சொக்கநாதன் பட்டத்துக்கு வந்தான். ஆனல் அவன் இளமையின் காரணத்தால் அவன் பாட்டியார் மங்கம்மாள் அரசாட்சியை நடத்தி வந்தாள். நாயக்கர் அரசாட்சியின் காலத்தில் மங்கமாளின் ஆட்சிக்காலம் மிகச் சிறந்தகாலம். அவள் அமைத்த பாதைகளும், வெட்டிவைத்த குளங்களும், கால்வாய்களும், கட்டிவைத்த சத்திரம் சாவடிகளும் எண்ணிறந்தவை. பெண்ணுயிருந்தும் தஞ்சையையும், திருவாங்கூரையும் போரில் வென்று தனது ஆட்சியின்கீழ் கொண்டு வந்தாள். ஆயினும் இவள் காலத்தில்தான் இராமநாதபுரத்து சேதுபதி அரசு உச்சநிலையை அடைந்தது. அப்பொழுது கிழவன் சேதுபதி இராமநாதபுரத்தில் அரசாண்டு வந்தான். சொக்கநாதன் காலத்திலேயே புதுக்கோட்டைப் பிரதேசத்தை இரகுநாதன் என்ற தனது மைத்துனன் இரங்கநாதனுக்குச் சொந்தமாக்கினன். பிற்காலத்திய புதுக்கோட்டை சமஸ்தானம் இவ்விதமே உருவாயிற்று. மங்கம்மாளின் காலத்தில் சேதுபதி கிழவன் மங்கம்மாளைப் போரில் வென்று 1702-ல் சேதுபதி அரசாங்கத்தை நாயக்கர் ஆட்சியினின்றும் விடுவித்தான்.

தமிழ் நாட்டில் நாயக்கர் ஆண்ட அரசாட்சிக்காலம் ஏறக்குறைய 200 ஆண்டுக்காலமாகும். இந்த 200 ஆண்டுக் காலத்திலே அவர்கள் தமிழ்நாடு முழுவதுக்குமே அரசர்களாக இருந்தார்கள் என்று சொல்லலாம். சொக்கநாத நாயக்கன் விஜயநகர சாம்ராச்சியத்தினின்றும் பிரியு முன்னரே மதுரை நாயக்கர்கள் தனி அரசர்களாகவே வாழ்ந்தார்கள் என்று சொல்லவேண்டும். இதைப்பற்றி 17-ம் நூற்றுண்டின் முதற்பாகத்தில் தமிழ்நாட்டில் பிரயாணம் செய்த வீகோ என்ற ஐரோப்பியன், " நாயக்கர்கள் விஜய

நகர சமஸ்தானத்துக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள் என்பது அவர்கள் ஆண்டிற்கொருதரம் விஜயநகர மன்னனுக்குக் கட்டிய கப்பம் ஒன்றிலேயே அடங்கும். அவர்கள் இவ்வித மாகக் கட்டிய தொகை 30 இலட்சம் ரூபாயிலிருந்து 45 இலட்சம் ரூபாய்வரை சென்றது,'' என்று கி.பி. 1611-ல் எழுதுகிறுன். நாயக்கர்கள் உண்மையிலேயே தாங்கள் பாண்டியர்களுக்குப் பிறகு மதுரையில் ஆண்டதாகவே கருதினுர்கள். இக் காரணம்பற்றியே அவர்கள் பாண்டியச் சின்னமான மீன் உருவத்தைத் தங்கள் சின்னமாகவும் கொண்டார்கள். இது அவர்கள் கட்டிய பல கோயில் களிலும் பொறிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். பெங்களூர் பொருட்காட்சிசாலையில் இருக்கும் விசுவநாதனுடைய நாணயம் ஒன்றில், "பாண்டிய விசுவநாதன்", என்று பொறிக்கப்பட்டிருக்கின்றது. நாயக்க மன்னர்கள் தமிழ் நாட்டில் கட்டிய கோயில்கள் பலவாகும். மதுரை, ஸ்ரீரங்கம், பேரூர், அவனுசி முதலிய இடங்களில் இவர்கள் கோயில்களை எழுப்பினுர்கள். மதுரை, ஸ்ரீரங்கம் கோயில் களை நாம் பார்க்கும்போது நாயக்கர்களின் பெருமையை நாம் நன்ருகக் காண்கின்ருேம். போர்ச்சுக்கீசியரும், டச்சுக்காரரும், இன்னும் சேசு சபைப் பாதிரிமார்களும் நாயக்கர் காலத்திலேயே முதன் முதலில் தமிழ் நாட்டில் புகுந்தனர். போர்ச்சுகீசியர் தூத்துக்குடியிலும் செந்த்தோமிலும் தங்களிருப்பிடத்தை நிறுவினுர்கள் மூன்ரும் கிருஷ்ணப்ப நாயக்கன் காலத்தில் சேசு சபைப் பாதிரிமார்கள் மதுரையிலேயே அமர்ந்தார்கள். நாயக்கர்கள் பரந்த மதப்பண்பு கொண்டவர்கள் என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டியதில்லை. நாயக்கர்களில் பெயர் பெற்ற திருமலை நாயக்கனிடத்திலும், மங்கம்மாளிடத்திலும், இந்தப் பரந்த மனப்பான்மையை நாம் சிறப்பாகக் காண் கின்ருேம். மனுச்சி என்ற இத்தாலிய யாத்திரிகர், "ஸ்டோரியா டோமாகோர்" (Storia do Mogor) என்ற நூலிலே மங்கம் மாளின் பரந்தநோக்கத்தை அறிவிக்கின்ருர்; "மக்களிற் சிலர் சோற்றை உண்பது போலவும், சிலர் மாமிசத்தைப் புசிப்பது

போலவும் ஒவ்வொருவனும் அவனவன் புத்திக்கு ஒத்த மதத்தைத் தழுவுவதே நியாயமாகும் என்று ராணி மங்கம்மாள் கூறுவார்கள்,'' என்று அவர் எழுதுகின்ருர். சொக்கநாத நாயக்கன் சிறந்த கலையுணர்ச்சி உள்ளவன். சம்பு முதலிய உயர்ந்த வடமொழி நூல்களை எழுதித் தந்த நீலகண்ட தீக்ஷிதர் என்ற பெரும் புலவரைச் சொக்கநாத நாயக்கன் ஆதரித்தான்.

23. செஞ்சி, வேலூர், தஞ்சை நாயக்கர்கள்

செஞ்சி நாயக்கர்கள் கி. பி. 14-ம் நூற்றுண்டிலிருந்தே பெயர் பெற்றவர்களாயிருந்தார்கள். கி.பி. 1370-ல் செஞ்சி நாயக்கனுயிருந்த கோப்பண்ண என்பவன் கோவிந்தராஜர் சிலையைச் சிதம்பரத்தில் நிறுவினன். இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கன் என்பவன் செஞ்சியை ஆண்டகாலத்தில் பிமென்டா என்ற போர்ச்சுக்கீசியப் பாதிரியார் லிஸ்பனைத் தவிர வேறே எந்தப் பட்டணமும் இதற்கு நிகரில்லை என்றும், இந்தியா விலேயே தாம் பார்த்த பட்டணங்களிலெல்லாம் இது மிகப் பெரியது என்றும் எழுதுகின்ருன். இப்பொழுது நாம் போர்டோனேவோ என்று வழங்கும் இடம் கிருஷ்ணப்பனுல் நிறுவப்பட்டதாகும். இதற்கு அப்பொழுது கிருஷ்ணப் பட்டணம் என்ற பெயர் வழங்கப்பட்டது. கடலூரில் டச்சுக் காரர் ஒரு காரியாலயத்தை அமைத்துக்கொள்ள அனுமதித் தவனும் இவனே. கி. பி. 1648-ம் ஆண்டு பீஜப்பூர் சுல்தான் செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றினன். அதுவரை செஞ்சி நாயக்கர்கள் ஆட்சி நடந்து வந்தது.

வேலூர் நாயக்கர்களில் முற்பட்டவன் வீரப்ப நாயக்கன் என்பவனுகும். அவனுக்குப் பிற்பட்டு வந்த அவன் புதல்வன் சின்னபொம்ம நாயக்கன் என்பவன் செஞ்சி நாயக்கனுக்குக் கீழ்ப்பட்டிருந்தபோதிலும் தென்னிந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றவன். கி. பி. 1549-முதல் 1582-வரை சின்னபொம்மன் வேலூருக்கும் அதன் சுற்றுப்புறங்களுக்கும் பரிபாலகனுக இருந்தான்.

மற்ற நாயக்கர்களுக்கு இருந்ததைவிட அதிகமான மதிப்பு இவனுக்கு விஜயநகர சமஸ்தானத்திலிருந்தது. இவனுக்குப் பின்போந்த லிங்கம நாயக்கன் வேலூரைச் செஞ்சிப் பிடியினின்றும் விடுவித்துக் கொள்ள முயன்றான். இதைப்பற்றி இரண்டு நாயக்கர்களுக்கு மிடையே பெரும் போர் மூண்டது; வேலூர்க் கோட்டை செஞ்சிப் படைகளால் சூழப்பட்டது. லிங்கமன் வெகு தீரத்தோடு சண்டை செய்தான். ஆயினும் அவனுடைய சொந்தப் படைத்தலைவர்களின் உதவியாலேயே செஞ்சிப்படைத் தலைவன் 1604-ல் வேலூரைப் பிடித்தான். இவ்விதம் வெற்றி கண்ட படைத்தலைவன் சென்ன நாயக்கன் என்பவன். இவன் புதல்வன் இப்பொழுது தமிழ் நாட்டின் தலைநகரமாயிருக்கும் சென்னைப்பட்டினத்தை நிறுவி, அதற்குத் தன் தகப்பன் பெயரைச் சூட்டினான். கி. பி. 1606-ம் வருஷம் இரண்டாம் வெங்கட்டராயன் என்ற விஜயநகர மன்னன் காலத்தில் வேலூர் விஜயநகரத்தின் தலைநகர்களில் ஒன்றாயிற்று. பெயர்பெற்ற அப்பைய தீக்ஷிதர் என்ற சைவப் பெரியாரை ஆதரித்தவன் வேலூரில் ஆண்ட சின்னப் பொம்ம நாயக்கன் ஆவான்.

விஜயநகர மன்னன் அச்சுத நாயக்கன் காலத்தில், ஒரு நாயக்க அரசு தஞ்சையிலும் நிறுவப்பெற்றது. இந்த நாயக்க ஆட்சிக்கு முதன் முதல் அனுப்பப்பட்டவன் அச்சுத நாயக்கனின் சகலனான செவ்வப்பன். இவனும் இவனுக்குப் பிறகு வந்த அச்சுத்தப்பனும் போர்ச்சுக்கீசியருக்கும், போர்ச்சுக்கீசியப் பாதிரிமார்களுக்கும் உதவியாய் இருந்தனர். அச்சுதப்பனுக்கும், அவன் பின் போந்த அவன் மகன் இரகுநாதனுக்கும், மதுரை நாயக்கருக்கு அரியநாத முதலியார் அமைந்ததுபோல் கோவிந்த தீக்ஷிதர் என்பவர் முதல் அமைச்சராக இருந்தார். இரகுநாதன் சிறந்த அரசனாகமட்டுமல்ல; வீரங்கொண்ட போர் வீரனாகவும், திறமை மிகுந்த எழுத்தாளனாகவும் திகழ்ந்தான். இவன் வடமொழியிலும், தெலுங்கிலும் பல நூல்களை எழுதினான். இரகுநாதன் இராமதேவனை

விஜயநகர அரசனுக்குவதற்கு பெரும் உதவி புரிந்தான். இதை இவன் மகன் விஜயராகவன் "இரகுநாத அப்யுதயம்" என்ற நூல் வடிவாக எழுதிவைத்தான். 17-ம் நூற்றுண்டின் கடைசிப் பாகத்தில் பிஜப்பூர் சுல்தான் இந்த நாயக்கர் அரசை ஒழித்தான். இதற்கு பிஜப்பூர் சுல்தான் மராட்டிய மன்னன் சிவாஜியின் சகோதரனை வெங்காஜியைத் தூண்டினுன். இதன் பலனுக மராட்டிய அரசாட்சி தஞ்சையில் 1675-ல் நிறுவப்பட்டது. வெங்காஜி, போன்ஸ்லே என்ற பட்டப் பெயருடன் முதன் முதல் தஞ்சையில் தனது ஆட்சியை நிறுவினுன். அவனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் சாஜி பட்டத்திற்கு வந்து கி. பி. 1712-வரை அரசாட்சி நடத்தினுன். இவ்விதமாக மராட்டிய அரசு தஞ்சையிலே கி. பி. 1855-வரை நடந்தது. சாஜியின் ஆட்சியும், அவனுக்குப்பின் வந்த அரசர்களின் ஆட்சியும் கலைவளர்ச்சிக்குப் பெயர் பெற்றவை. தஞ்சை மாவட்டத்தில் இப்பொழுது திருவீச்சலூர் என்ற கிராமத்தை சாஜி போன்ஸ்லே 48 புலவர்களுக்குத் தானமாக அளித்தான். அதற்கு அப்பொழுது சாஜி ராஜபுரம் என்று பெயர்.

24. உம்மத்தூர் அரசர்கள்

விஜயநகரில் ஆண்ட இரண்டாம் தேவராயனுக்குப் பிறகு ஏற்பட்ட உள்நாட்டுக் கலகத்தால் விஜயநகர அரசனின் பெருமை குன்றியது. அப்போது கருனடகப் பிரதேசத்தில் விஜயநகர மன்னனின் பிரதிநிதியாக இருந்து வந்த உம்மத்தூர் அரசன் தன் சுய ஆட்சியை நிறுவிக்கொண்டான். தற்போதைய மைசூர்ப் பிரதேசத்தின் தென்கோடியில் தளக்காட்டுக்கு அருகாமையில் உம்மத்தூர் என்ற இடம் உள்ளது. கி. பி. 1478-லிருந்து 1573-வரை ஒன்பது உம்மத்தூர் அரசர்கள் இங்கிருந்து அரசாட்சி செய்தார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்தக்காலத்தில் கொங்கு நாடு இவர்கள் அரசுக்குக் கீழ்ப்பட்டிருந்தது. ஆயினும் முதலாம் நஞ்சராயன், தீபண்ண, சிக்கராயன், இரண்டாம் நஞ்சராயன் என்ற இந்த நான்கு அரசர்களின்

சாசனங்களே இன்று கொங்கு நாட்டில் காணப்படுகின்றன. இவர்களின் ஆட்சிகால அளவைக்கொண்டு உம்மத்தூர் அரசர்கள் 1482-முதல் 1519-வரை மட்டும் கொங்கு நாட்டில் தங்கள் ஆட்சியை நிறுவ முடிந்தது என்பதை நாம் ஒருவாறு யூகிக்கலாம்.

நஞ்சராயனின் சாசனங்கள் கோயம்புத்தூர் மாவட்ட அவிநுசி தாலுக்காவிலும், தாராபுரத்திலும், மதுரை மாவட்டப் பழனியிலும் இருக்கின்றன. சிக்கராயனுடைய மூன்று சாசனங்கள் முறையே அவனுசி, குன்னத்தூர், குண்டூர் (கொள்ளேகால் தாலூகா) என்ற இடங்களில் இருக்கின்றன. இரண்டாம் நஞ்சராயனுடைய சாசனங்கள் நம்பியூர், பட்டானம், கட்டங்கனி என்ற இடங்களில் இருக்கின்றன. இவற்றைக்கொண்டு உம்மத்தூர் அரசு தமிழ் நாட்டில் எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்பதையும் நாம் ஒருவாறு கண்டு கொள்ளலாம். மேற்சொன்ன சாசனங்களைக் கொண்டு உம்மத்தூர் அரசர்களின் ஆட்சியின் மாட்சிமையையும் நாம் கண்டு கொள்ளக்கூடும். முகமதியப் படையெழுச்சியின் காரணமாகத் தகர்க்கப்பட்ட கொடுவாயிலுள்ள பெருமாள் கோயிலை முதலாம் நஞ்சராயன் திரும்பவும் கட்டி, இரண்டு கிராமங்களையும் அதற்கு மானியமாக வழங்கினான். இரண்டாம் இராஜராஜனுடைய சாசனங்களில் லிருந்து பட்டானம் என்ற ஊரில் உள்ள கோயில் திரும்பக் கட்டப்பட்டதாக நாம் அறிகிறோம். இதுவன்றி முதலாம் நஞ்சராயன் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பெரிய பாளையம் என்ற ஊரில் நீர்ப்பாசன வசதிக்காக ஒரு குளம் தோண்டினான். அது இன்றும் நஞ்சராயன் குளம் என்று வழங்குகிறது.

25. தமிழரும் ஆந்திரரும்

விஜயநகரப் பேரரசின் காலத்திலே தமிழ்நாடு முதன் முதல் ஆந்திரரோடு கலந்தது. ஆந்திர நாட்டுப் பார்ப்பனரும், போர்வீரரும், பயிர்த் தொழில்

கைத்தொழில் வேலையாட்களும் பல்லாயிரக் கணக்காக, தமிழ் நாட்டின்மேல் விஜயநகரம் ஆட்சிகொண்ட 300 ஆண்டு காலத்திலே தமிழ்நாட்டினுள் நுழைந்தனர். இதற்குச் சான்றாகச் சொக்கநாத நாயக்கன் காலத்தில் கொடுக்கப் பட்ட செப்பேடுகள் ஓர் ஆந்திரப் பார்ப்பனருக்காக அந்த நாயக்கன் வழங்கிய மானியங்களைக் குறிக்கின்றன. இதைக் கோவை மாவட்டக் குமாரலிங்கத்தில் இன்றும் காணக்கூடும். தவிரக் கைக்கோளர், உப்பு வாணிகம் செய்த உப்புலியர்கள், சேனியர் எனப்பட்ட தெலுங்கு நெசவுக்காரர், தொட்டியர், ஒட்டர், கம்மவார் நாயுடுகள், தோல் வேலை செய்யும் சக்கிலியர், கழைக்கூத்தாடும் தொம்பர்கள், இன்னும் பிறரும் இக்காலத்தில் ஆந்திர நாட் டிலிருந்து தமிழ் நாடு போந்து தமிழரோடு கலங்கினர். இதனால் ஒரு புதுக்கலை தமிழ் நாட்டில் ஏற்பட்டது. ஆந்திர நாட்டு மொழியாகிய தெலுங்கு தமிழ் நாட்டிலே பேசப்பட்டது. இதுவன்றி தெலுங்கர் தொடர்பால் தமிழ்நாட்டில் பயிர்த் தொழிலும், கைத்தொழிலும் செழித்தன. அக்காலத்தில்ஆந்திர நாட்டிலிருந்துவந்த பலிஜர்களும், கம்மவார்களும் பயிர்த் தொழிலிலே சிறப்பாக ஈடுபட்டார்கள். ஒட்டரும், கம்மாளரும் கட்டட வேலைக்கு ஆக்கம் தேடினர்கள். அக்காலத்தில் வியாபாரம் பெருகிற்று. ஒசூர் தாலுக்காவிலுள்ள தளி என்ற இடத்தில் அவ்வூர் வியாபாரிகள் ஒன்றுகூடி ஒரு குளம் வெட்டினதாகச் சாசனம் கூறுகின்றது. உம்மத்தூர் அரசர்கள்காலத்தில் பட்டானத்தில் இடிந்த கோயிலை திருப்பிக் கட்டினதும் அவ்வூர் வியாபாரிகளில் அறுவராவர். ஹோய்சாளர் காலந்தொட்டு தமிழ் நாட்டின் வாணிகத்தைப் பெருக்கிவந்த நானுதேசிகர் என்ற வணிகர் குலம் விஜயநகர அரசாட்சியின் காலத்தில் இன்னும் அதிகமாகப் பெருகிற்று.

தமிழ் நாட்டிலே இந்துமதம் விஜயநகர அரசாட்சியின் காலத்தில் மிகவும் உறுதிப்படுத்தப்பட்டது. குமார கம்பணன் கூரையூர்க் கோயில்களைப் பழுதுபார்த்ததி லிருந்து தாரமங்கல முதலியார்கள் அந்த ஊரிலே கோயில்

கட்டியவரை விஜயநகர ஆட்சியின் காலத்தில் எடுக்கப்பட்ட கோயில்கள், பழுது பார்க்கப்பட்டவை, மானியம் தரப் பட்டவை பலவாகும். தாடிக்கொம்பு, தாரமங்கலம் என்ற இடங்களில் மிக அழகிய கோயில்களை எடுத்த கெட்டி முதலியார்கள் விஜயநகர அரசின் கீழ்ச் சேலம் மாவட்டத் திலே அரசு நடத்தியவர்களாவர். அவர்கள் விஜயநகரக் கட்டடக் கலையைப் பின்பற்றி இந்தக் கோயில்களை அமைத்தார்கள். விஜயநகர ஆட்சியின் காலத்தில் தமிழ் நாட்டில் கட்டடக்கலை வளர்ந்த விதம் மிகச் சிறப் பானது. இவர்கள் காலத்தில்தான் மதுரை நாயக்கர்கள் கட்டிய மீனுட்சியம்மன் கோயில், ஆயிரக்கால் மண்டபம், ஸ்ரீரங்கம், பேரூர் கோயில்கள் எழுந்தன. இந்துமதம் தழைக்க விஜயநகர அரசர்கள் பிராமணர்களைப் போற்றினுர்கள். பல விழாக்கள் எடுத்தார்கள்; அதற்கு வேண்டிய செலவுகளையும் அரசாங்கம் அளித்தது. சேலம் மாவட்டத்திலுள்ள அரசலூர் என்ற இடத்தில் விழாச் செலவிற்காகத் திருச்சங்கோட்டுச் சந்தைச் சுங்கம் கிருஷ்ண தேவராயன் காலத்தில் மானியமாக வழங்கப்பட்டது என்பதைச் சாசனம் கூறுகின்றது.

விஜயநகர அரசாட்சியின் காலத்தில் இந்து மதமும், முகமதிய மதமும், கிறித்துவ மதமும் தமிழ்நாட்டில் பெருகத் தொடங்கின. தமிழ் நாட்டில் முகமதியமதம் எப்பொழுது காலெடுத்து வைத்தது என்பதைப்பற்றி நாம் அறுதியிட்டுக் கூற முடியாது. ஏறக்குறைய கி. பி. 10-ம் நூற்றுண்டில் தமிழ் நாட்டின் கிழக்குக் கரையிலே முகமதியர்கள் குடியேறி யிருந்தார்கள். அவர்களது முக்கியப்பட்டணங்கள் காயல் பட்டினம், நாகூர் என்ற இவையாகும். அடுத்த நூற்றுண்டின் தொடக்கத்தில் திருச்சிராப்பள்ளியில் முகமதிய மதம் பரப்பப்பட்டது. ஹோய்சாளரும் விஜயநகர மன்னர்களும் ஆயிரக்கணக்கான முகமதியரைத் தங்கள் படையில் வைத் திருந்தார்கள். அவர்கள் தமிழ் நாட்டோடு கொண்ட தொடர்பாலும் இஸ்லாமிய மதம் பரவியிருக்கவேண்டும்.

தமிழ் நாட்டில் கிறித்துவ மதம் சென்னையிலே கிறிஸ்து பிறந்த முதல் நூற்றுண்டிலேயே பரவத் தொடங்கியது என்பது வழிவழியாக வரும் ஒரு வரலாற்றுக் குறிப்பாகும். இது எங்ஙனமாயினும் கி. பி. 1533-ல் தூத்துக்குடிக் கரையிலுள்ள பரதவர்களில் பலர் கிறித்துவ மதத்தைத் தழுவினுர்கள். கி. பி. 1606-ம் ஆண்டில் மூன்ரும், கிருஷ்ணப்ப நாயக்கன் ஆட்சிசெய்த காலத்தில் தேநொபிலி என்ற கிறித்துவப் பாதிரியார் மதுரையிலே வந்திறங்கினுர். நாயக்க மன்னர்கள் கிறித்துவ மதத்திற்கு பெரும் ஆதரவு காட்டினுர்கள். அதைக் கண்ணுற்ற தமிழ் நாட்டின் மற்ற சிற்றரசர்களும் அதற்குச் சலுகை காட்டினுர்கள். இவ்விதமாக கிறித்துவ மதம் தமிழ் நாட்டில் பரவுவதற்கு நல்ல வசதி ஏற்பட்டது. தேநொபிலி மதுரையிலிருந்து சேந்தமங்கலம், சேலம் வழியாகக் கொச்சிவரை தமது மதத்தைப் போதித்தார். சேந்தமங்கலத்தில் அரசாண்ட இராமச்சந்திர நாயக்கனும் சேலத்தில் அரசாண்ட செலபதி நாயக்கனும் இவருக்கு நல்ல ஆதரவு காட்டினுர்கள். 17-ம் நூற்றுண்டின் கடைசிப் பகுதியில் மைசூரிலிருந்தும், கோவாவிலிருந்தும் பல கிறித்துவப் பாதிரிமார்கள் தமிழ் நாட்டில் நுழைந்தார்கள். தஞ்சை, திருச்சிராப்பள்ளி, கரூர், ஈரோடு, தாராபுரம். கோயம்புத்தூர் முதலிய இடங்களில் கி. பி. 17ம் நூற்றுண்டில் கிறித்துவக் கோயில்கள் கட்டப்பட்டன.

விஜயநகர ஆட்சியின் காலத்தில் பிரதானிகளும், மகாப் பிரதானிகளும், நாயக்கர்களும், தண்டநாதர்களும், உடையார்களும், தமிழ்நாட்டில் ஒழுங்கான அரசாட்சி நடக்க முயற்சி செய்தார்கள். இருந்தபோதிலும் விஜய நகர இராச்சியத்தின் பரப்பின் காரணத்தாலோ, அல்லது அக்காலத்து இடைவிடாத போர்களின் காரணத்தாலோ அவர்கள் அரசாட்சியில் முற்காலத்தில் இருந்ததுபோல் அமைதி நிலவவில்லை. நாட்டில் கொள்ளையும், திருடர் பயமும், பாளையக்காரருடைய அட்டூழியங்களும் நிறைந்திருந்தன. கிருஷ்ண தேவராயன் காலத்தில் அரகலூர் கோயில் ஸ்தானிகர் மூவர் அரசாங்கச்

சேவைக்காரர்களுடைய அட்டூழியங்களை எடுத்துச்சொல்வதற்காக விஜயநகரத்திற்குச் சென்றூர்கள். அரசன் அவர்களுடைய குறைகளைக் கேட்டு அவர்களுக்கு 300 குழி நிலம் சர்வ மானியமாகவும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாலையும், தலைப்பாகையும், குதிரையும், குடையும் கொடுத்தனுப்பினுனென்று சாசன வாயிலாக நாம் அறிகின்ரேம். விஜயநகர மன்னர்கள் நல்ல ஆட்சியைத் தரவேண்டுமென்று தான் எண்ணினுர்கள். ஆனுல் அது உண்மையிலேயே அமல்நடத்தப்படவில்லை. பழங்காலந்தொட்டுத் தமிழ் நாட்டில் வழங்கிவந்த கிராம சுய ஆட்சியை அவர்கள் மண்ணிட்டுப் புதைக்கவில்லை. ஒவ்வொரு கிராமமும் அதன் நிலத்தைப் பாதுகாத்துக்கொள்ளத் தலையாரிகளை நியமிக்கவும், அதற்காகத் 'தலையாரிக்கம்' என்ற வரியை வசூல் செய்யவும், வழக்குகளைத் தீர்த்துவைக்கவும் ஒவ்வொரு கிராம சபைக்கும் உரிமை யிருந்தது. ஆயினும் பாளையக்காரருடைய அட்டூழியம் அதன் சேவைக்குத் தடைசெய்தது. விஜயநகர அரசாட்சியின்கீழ் நாட்டின் நிலைமை கஷ்டமானதாக இருந்தபோதிலும் கல்விச் செல்வம்மட்டும் மக்களுக்குக் குறையாது வழங்கப்பட்டது என்பது ஈண்டு குறிப்பிடத்தகும். அக்காலத்தில் பல பள்ளிக்கூடங்களும் சில கல்லூரிகளும் இருந்தன என்பதற்கு அக்காலத்திய மிஷினரிமார்களின் கடிதங்களே போதிய சான்ருகும். வெங்கட்டப்ப நாயக்கனும், முத்துக் கிருட்டினப்ப நாயக்கனும் பல கல்லூரிகளைக் கட்டினுர்களென்றும், மதுரைக் கல்லூரியிலேயே பத்தாயிரம் மாணவர்கள் படித்துவந்தார்களென்றும் தேநொபிலி குறிக்கின்ருர். இவையன்றி வேதாந்த தேசிகர், மாதவாச்சாரியார், சயணு, போகநாதா, சுப்பையதீக்ஷிதர் போன்ற பெரும் கல்விமான்களும், அருணகிரி, தாயுமானவர், அதிவீர ராமபாண்டியர் போன்ற தமிழ்புலவர்களும் அக்காலத்தில் வாழ்ந்தார்கள்.

26. தமிழ் நாட்டில் மைசூர் மன்னர்கள்.

கி. பி. 16ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து 18ஆம் நூற்றுண்டின் பிற்குதிவரையில் சுவார் 180 ஆண்டுகாலத்தில் மைசூர் ஆதிக்கம் மெல்ல மெல்ல தமிழ்நாட்டில் பரவிற்று. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஆறு மைசூர் அரசர்கள் தமிழ்நாட்டோடு தொடர்பு கொண்டிருந்தார்கள். ராஜஉடையார், காந்திரவநரசா, தொட்ட தேவா, சிக்க தேவா, தொட்ட கிருட்டின ராஜா, சிக்க கிருட்டின ராஜா என்ற ஆறு அரசர்கள் தமிழ்நாட்டில் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தினுர்கள். திருமலை நாயக்க னும், சொக்கநாத நாயக்கனும் ஆட்சி செய்த காலத்தில் மைசூரோடு அவர்கள் செய்த போர்களைப்பற்றி நாம் முன்னரே குறித்தோம். இந்தப் போர்களுக்குக் காரணமா யிருந்தவன் காந்திரவ அரசன். அவன் அப்பொழுது கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் பல இடங்களைப் பிடித்து மதுரைமாவட்டத்திலுள்ள திண்டுக்கல்வரை தனது படைகளைச் செலுத்தினுன். அவனுக்குப் பின் போந்த தொட்டதேவராஜன் காலத்தில் தாராபுரம், சேலம் முதலிய இடங்கள் மைசூர் மன்னனுக்குச் சொந்தமாயின. சிக்கதேவன் மைசூரை ஆட்சி செய்தகாலத்தில் கோயம்புத்தூர், கரூர், ஈரோடு, பழனி, ஆனைமலை, அடகாசி, குமாரபாளையம், தவள கிரி, தொட்டப்பேரூர், பொள்ளாச்சி, பல்லடம் முதலிய இடங்கள் மைசூர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. சிக்கதேவன் காலத்தில் நஞ்சராஜய்யா, சங்கரய்யா என்ற இருவர் மைசூர் சமஸ்தானத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்று அரச னுக்குப் பதிலாகவே காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தனர். அவர்களில் சங்கரய்யா கொங்குநாட்டின் பரிபாலனத்தைக் கவனித்துக்கொள்ள கோயம்புத்தூரிலேயே வந்து தங்கினுன். இது கி. பி. 18-ம் நூற்றுண்டின் மத்திய பாகத்தில் நடந் தது. சங்கரய்யா பேரூர் கோயிலுக்கு முன் ஒரு பெரும் குளத்தை வெட்டி வைத்தான். அவினுசிக் கோயிலைப் பழுது பார்த்தான். பவானிக் கோயிலின் முன்மண்டபத்தைக் கட்டினுன் என்று சாசனங்கள் கூறுகின்றன. ஆனுல்

மைசூர் மன்னர்களின் தமிழ் நாட்டு ஆட்சி அப்பொழுதே குன்றத் தொடங்கியது. போதாக் குறைக்கு மன்னன் சிக்கக் கிருட்டிணன் வலிமையற்றவனயிருந்தான். படைத்தலைவர் பலா அரசாட்சியைக் கைக்கொள்ள முயன்றனர். தமிழ்நாடு மைசூர் மன்னனின் கையினின்று விடுதலைபெற முயற்சித்தது. இதற்கு அறிகுறியாக 1746-ம் ஆண்டு தாராபுரத்தில் ஒரு பெரும் குழப்பம் ஏற்பட்டது. அதை அடக்குவதற்காக மைசூர் படைப்பலம் பூராவும் அங்கு அனுப்பப்பட வேண்டியிருந்தது.

மைசூர் மன்னன் இவ்விதம் தள்ளாடிக்கொண்டிருந்த காலத்தில் ஐதர்-அலி மைசூர்ப் படையில் ஒரு போர்ச் சேவகனைச் சேர்ந்தான். 1755 - 56 ஆண்டுகளில் திண்டுக்கல் பிரதேசத்தில் ஏற்பட்ட ஒரு பெரும் குழப்பத்தை மைசூர் மன்னன் அடக்கவேண்டியதாயிற்று. அப்பொழுது ஐதர் திண்டுக்கல்லுக்கு அனுப்பப்பட்டான். இந்தச் சண்டையில்தான் தமிழ்நாட்டில் முதன் முதல் துப்பாக்கி பிரயோகிக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளியிலும், புதுச்சேரியிலுமுள்ள பிரெஞ்சுத் தலைவர்களோடு ஐதர் அப்போது தொடர்புகொண்டான். 1759-ம் ஆண்டு மராட்டியரோடு மைசூர் மன்னர்கள் செய்யவேண்டிய போருக்காகப் பெரும் பணம் தேவையாக இருந்தது. இதற்காக ஐதர் கோயம்புத்தூர் மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டான். பெருந்தொகையும் அங்கு ஐதருக்குக் கிடைத்தது. அதைக் கண்ட மைசூர் மன்னன் 1760-ம் ஆண்டு கோயம்புத்தூர் மாவட்டத்தின் தலைவராக ஐதரை நியமித்தான். 1765-ம் ஆண்டு சிக்க கிருட்டிணராஜன் இறந்தபொழுது ஐதர் தன்னையே மைசூர் மன்னனக முடி சூட்டிக்கொண்டான். ஐதரும், திப்புவும் தமிழ்நாட்டில் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தினர்கள். ஆனல் அவர்கள் காலம் முழுவதும் ஆங்கிலேயரோடு சண்டை செய்வதிலேயே கழிந்தது. அக்காலத்தில் கொங்கு நாடு இந்தச் சண்டையின் பெரும் போர்க்களமாக இருந்தது. அதைப் பற்றி பின்னர் கவனிப்போம்.

இவ்விதமாக ஏறக்குறைய 150 ஆண்டு மைசூர் அரசாட்சி தமிழ் நாட்டின் ஒரு பெரும் பகுதியில் நிலவியது. அப்போது பல கன்னடக்காரர்கள் தமிழ் நாட்டில் நுழைந்தார்கள். விஜயநகர அரசாட்சியின் காலத்தில் தெலுங்குப் பார்ப்பனர் தமிழ் நாட்டில் நுழைந்ததுபோல இப்போது கன்னடப் பார்ப்பனர் பலர் நுழைந்து பெரும் மானியங்களை அரசனிடமிருந்து பெற்றூர்கள். தொட்டக் கிருட்டிண ராஜனுடைய ஒரு சாசனத்தில் பதினைந்து கிராமங்கள் இவர்களுக்கு மானியமாக வழங்கப்பட்டதாகக் குறிக்கப் படுகின்றது. இவ்விதமாக மைசூர் மன்னர்களின் ஆட்சியின் காலத்தில் தமிழ்நாட்டின் கலையில் இன்னும் தடுமாற்றம் ஏற்பட்டது. மைசூர் மன்னர்கள் கொங்கு நாட்டில் பல கோயில்கள் கட்டினுர்கள். பல கோயில்களைப் பழுது பார்த்தார்கள். உதாரணமாக சத்தியமங்கலத்திலுள்ள குமாரசாமி கோயில் சிக்கதேவராயனுல் கட்டப்பட்டது. அவர்கள் நாட்டின் வளப்பத்திற்காகப் பல குளங்களை வெட்டினுர்கள். கோயம்புத்தூரில் சிக்க தேவன் வெட்டிய குளம் ஒன்று இன்றும் இருக்கிறது. அதற்குச் 'சிக்க தேவராயன் குளம்' என்று பெயர். கொங்குநாட்டிலுள்ள நிலங்களின் அளவு, வளம் முதலியவற்றைப்பற்றிய விவரங்களைச் சிக்கதேவன் கணக்கெடுத்தான். மைசூர் மன்னர்கள் நாட்டின் வளத்திற்குப் பல வசதிகள் செய்தபோதிலும் பல வரிகளையும் வசூலித்தார்கள். அவற்றில், புகையிலை வரி, புல்வரி, ஆட்டு வரி என்ற பலவற்றைப்பற்றி நாம் சாசன வாயிலாக அறிகின்ருேம். இந்த வரிகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இவர்களுக்குப் பின்போந்த ஐதர், திப்பு முதலியவர்கள் இந்த வரிகளை இன்னும் அதிகப் படுத்தினுர்கள். ஆகையால் மக்கள் பயிர் தொழிலில் இலாபம் காணவில்லை. அவர்கள் பொருளாதார நிலையை இன்னும் அதிக மோசமாக்குவதற்கு வியாபாரமும் குன்றத் தொடங்கியது. அக்காலத்தில் மூன்று முக்கியப் பாதைகளே தமிழ் நாட்டில் இருந்ததாகத் தெரிகின்றது. ஒன்று தளவாய்ப் பேட்டை, குமாரபாளையம், நெடுஞ்சிப்பேட்டை, ஈரோடு,

ஓமலூர், சேலம், ராசிபுரம், நாமக்கல், திண்டுக்கல், என்ற இடங்களுக்குச் செல்லும் பாதை, மற்றொன்று. திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், பாலக்காடு, தாராபுரம் முதலிய இடங்கள் வழியாகச் சென்றது. மூன்றாவது பாதை கோயம்புத்தூரிலிருந்து பாலக்காடு வழியாக மலையாள இராச்சியத்திற்குச் சென்றது. இவைகள் வியாபாரப் போக்குவரத்துக்குப் போதிய வசதி அளிப்பதாக இல்லை. திப்பு சுல்தான் அரசாண்ட காலத்தில் அவன் போக்குவரத்து வசதிகளில் அதிகக் கவனம் செலுத்தினான். அவன் காலத்தில்தான் கோயம்புத்தூரிலிருந்து அவினாசி வழியாக சத்தியமங்கலம் செல்லும் பாதை பிரபலமாயிற்று. பெங்களூரிலிருந்து ஒசூர், தருமபுரி வழியாகச் சேலம் செல்லும் பாதை அவனாலேயே அமைக்கப் பட்டது. ஆயினும் 150 ஆண்டு காலமாகக் குறைந்துகொண்டு வந்த வாணிகம் ஒரு அரசனுடைய ஊக்கத்தினால் மட்டும் முன்னுக்கு வரக்கூடவில்லை. மதவளர்ச்சியைப் பொறுத்த வரையில் இந்துமதம் எவ்வித முக்கியமான வளர்ச்சியையும் இக் காலத்தில் காணவில்லை. அதற்குப் பதிலாக முகமதிய மதமும் கிறிஸ்தவ மதமும் பெரிதும் வளர்ச்சியடைந்தன. முகமதிய மதத்தைத் தமிழ் நாட்டில் பரப்புவதற்காக திப்பு சுல்தான் பெரும் முயற்சிகள் செய்ததாகக் கூறப் படுகின்றது. ஆனால் அது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நாம் இப்போது அறுதி இட்டுக் கூறமுடியாது. ஆயினும் திப்புவின் காலத்தில் பல இந்துக்கள் பயத்தாலும், மன்னனுடைய மதிப்பைப் பெறுவதற்காகவும் முகமதிய மதத்தைத் தழுவினர் என்பதுமட்டும் உண்மை. அபே டுபுஆ (Abbe Dubos) என்ற பெயர் பெற்ற கிறிஸ்த்தவப் பாதிரியார் ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு, 1799-ல் வந்து சேர்ந்தார். அங்கிருந்து சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி என்ற ஊர்கள் வரை அவர் கிறிஸ்த்தவ மதத்தைப் போதித்தார். அவருக்குப் பின் பல பாதிரிமார்கள் தமிழ் நாட்டில் நுழைந்தார்கள். சீகன்பால்க் (Ziegenbalg), ஸ்வார்டஸ் (Schwartz) போன்ற மதப்பிரச்சாரர்கள் இப்போது தமிழ் நாட்டில் நுழைந்தார்கள்.

முகமதிய மன்னர்கள் மைசூரிலிருந்து தமிழ் நாட்டை ஆட்சிசெய்த காலத்தில் அரசாங்க முறை பல விதத்திலும் மாறியது. திப்புவின் அரசாங்க எல்லை, ஆட்சி வசதிக்காக பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும், ஆயிரம் கிராமங்கள் இருந்தன. மாவட்டங்கள் 40 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மாகாணத்திலும் அசாவ் (Asaf) வாவ்ஜ்தார் (Faujdar) என்ற உத்தியோகஸ்தர்கள் தலைமை வகித்தனர். அவர்களுக்கு உதவியாக செரிஸ்ததார் (Sheristadar) என்ற கணக்குப் பிள்ளை ஒருவன் இருந்தான். இதேபோல் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமில்தார் (Amildar) தரப்தார் (Tarafdar) செரிஸ்த்ததார் (Sheristadar) என்ற உத்தியோகஸ்தர்களும் இருந்தார்கள். கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் நடந்தன. மைசூர் மன்னன் சிக்கதேவராயன் காலத்தில் தபால், போலீஸ் இலாக்காக்கள் (Departments) ஏற்பட்டன. திப்புசுல்தான் காலத்தில் இவைகள் முறைபே ஒழுங்குபடுத்தப்பட்டன. அக்கால கோயம்புத்தூர் மாவட்டத்தில் நொய்யல் நதிக்கு வடக்கே மட்டும் ஏறக்குறைய 15 ஆயிரம் போலீஸ்காரர்கள் வேலை செய்தார்கள் என்று கூறப்படுகின்றது. தற்போது உபயோகத்திலிருக்கும் ரூபாய்களைப்போன்ற நாணயங்களை முதலில் அடித்தவன் திப்புசுல்தான். அவைகள் இப்போதைய ரூபாய்களைவிடப் பெரியதாகவும், மதிப்பில் இரண்டு ரூபாய்க்கு சமமாகவும் இருந்தன. இவை அவன் காலத்தில் கொங்கு நாட்டில் புழக்கத்திலிருந்தன.

27. ஐரோப்பியர் வருகை

கி. பி. 1498-ம் ஆண்டு வாஸ்கோடகாமா என்ற போர்ச்சுக்கிசிய மாலுமி தென் ஆப்பிரிக்காவைச் சுற்றித் தென் இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கள்ளிக் கோட்டையில் வந்து சேர்ந்தான். இவனே இந்தியாவிற்கு வந்த முதல் ஐரோப்பியன். இதற்குப் பிறகே போர்ச்சுக்

கீசியரும், போர்ச்சுக்கீசிய பாதிரிமார்களும் தொடர்ச்சியாகத் தென் இந்தியாவிற்கு வரத்தொடங்கினர். சென்னையில் சென்தோம் என்ற இடம் போர்ச்சுக்கீசியருக்குச் சொந்த மாயிற்று. இது இங்ஙனமிருக்க கி. பி. 1610-ம் ஆண்டு சென்னைக்கு அருகாமையிலுள்ள பழவேர்க்காட்டில் டச்சுக் காரர் ஒரு அலுவலகத்தை அமைத்தார்கள். அதன்பின் கி. பி. 1620-ல் தரங்கம்பாடியிலும் 1658-ம் ஆண்டு தூத்துக்குடியிலும், அதற்கடுத்தாண்டு நாகையிலும் அவர்கள் வாணிக நிலையங்களை நிறுவினர். டச்சுக்காரர் பழவேர்க் காட்டில் இருந்ததற்குச் சான்றாக அவர்களது பல கட்டடச் சின்னங்களை சிதைந்த நிலையில் இன்னும் பழவேர்க்காட்டில் காணலாம். இங்கு அப்ரகாம் ரோஜர் என்ற டச்சுப் பாதிரி பல வடமொழி நூல்களை மொழிபெயர்த்தார்.

கி. பி. 1615-ல் சர். தாமஸ் ரோ என்பவர் இந்தியாவில் ஆங்கில வாணிகம் நடைபெறுவதற்குச் சலுகைகள் தரும்படி ஜகாங்கீர் மன்னனை நேரில் கண்டு வேண்டினார். இதன் பலனாக ஆங்கில வாணிகத் தலமொன்று சூரத்தில் நிறுவப் பட்டது. இதுவே இந்தியாவில் ஆங்கிலேயர் தொடர்புக்கு முதற்படியாகும். கி. பி. 1639-ல் பிரான்ஸிஸ் டே என்ற ஆங்கிலேயன் சென்னையில் இப்போது ஜார்ஜ் கோட்டை இருக்குமிடத்தைச் சின்னப்ப நாயக்கன் மகன் வெங்கடப்ப நாயக்கனிடமிருந்து பெற்று அங்கே ஒரு வாணிக விடுதியை அமைத்தான். இதற்கு இவரோடு சேர்ந்த கோகன் என்ற மற்றொரு ஆங்கிலேயனும் உதவினான் என்பது சில வரலாற்று ஆசிரியரின் அபிப்பிராயம். இது எங்ஙன மாயினும் கி. பி. 1639-ல் சென்னையில் ஆங்கிலேயர் உறுதியாக இடம் பெற்றுவிட்டனர். சென்னையின் முக்கியத் துவத்தைக் கண்டுபிடித்த பெருமை ஆங்கிலேயரையே சேரும். அதற்குமுன் வந்த ஐரோப்பியர் பழவேர்க்காட்டிற்கே சென்றனர். 1626-ம் ஆண்டிலேயே ஆங்கிலேயர் பழவேர்க்காட்டிற்கு அருகாமையிலுள்ள ஆர்மகான் என்ற இடத்தில் ஒரு அலுவலகத்தை அமைத்தார்கள். ஆயினும்

அதைவிட சென்னையே சிறந்த வியாபாரத் தலமாகும் என்று அவர்கள் விரைவில் கண்டு கொண்டனர். ஆர்மகானைவிட சென்னையில் நூற்றுக்குப் பதினைந்துரூபாய் அளவில் குறைந்த விலையில் துணி கிடைக்கும் என்பதை ஆங்கிலேய வியாபாரிகள் தான் முதலில் கண்டுபிடித்தார்கள்.

கி. பி. 1647-ம் ஆண்டு கோல்கொண்டா மன்னன் சென்னையின் சுற்றுப் பிரதேசங்களை வென்றபோது அங்கே இருந்த ஆங்கிலேயருடைய உரிமைகளை உறுதிப்படுத்தினான். 1690-ல் மொகலாயர் கோல்கொண்டாவைக் கைப்பற்றியபோது அவ்வுரிமைகள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டன. கி. பி. 1666-ல் வாக்ஸ் க்ராவ்ட் (Foxeraft) என்பவர் சென்னையில் முதல் கவர்னராக நியமிக்கப்பட்டார். இவருக்குப்பின் வந்தவர்கள் முறையே சர். வில்லியம் லேங் ஆர்ன் (கி.பி. 1672-78) சர். ஸ்டேரஷனும் மாஸ்டர் (கி. பி. 1678-81) என்பவர்களாகும். இவர்கள் சென்னையில் ஆங்கிலேய ஆட்சி முறைகளையும் நாகரிகத்தையும் புகுத்த முயன்றனர். ஆங்கிலேயர் இந்தியாவில் கட்டிய முதல் கிறித்துவக் கோயில் சென்னை ஜார்ஜ் கோட்டையில் (1680) ஸ்டேரஷனும் மாஸ்டர் காலத்தில் எழுந்தது. அவருக்குப் பின்போந்த கவர்னர்களின் ஆட்சியின் காலத்தில் சென்னை நகராட்சி மன்றம் தோற்றுவிக்கப்பட்டது (கி. பி. 1688). இதுவே தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்கொண்ட ஆதிக்கத்தின் முதற் கட்டம். இதன் கால அளவு கி. பி. 1626 முதல் 1690 வரை உள்ள 60 வருடகாலமாகும். இந்த அறுபது வருட காலத்தில் ஆங்கிலேயர் சென்னையில் அசைகக முடியாத வலுப்பெற்றனர். தமிழ் நாட்டிலும் செல்வாக்கு அடைந்தனர். கூடலூர், போர்ட்டோ நேவோ முதலிய இடங்களிலும் ஆங்கிலேய வியாபார விடுதிகள் இக்காலத்தில் அமைக்கப்பட்டன.

கி. பி. 1664-ல் பிரெஞ்சுக்காரருடைய முதல் வாணிக நிலையம் தோன்றியது. 1672-ம் ஆண்டு சென்தோமிலும், புதுச்சேரியிலும் அவர்களுடைய அலுவலகங்கள்

ஏற்பட்டன. புதுச்சேரி நிலையத்தை ஏற்படுத்தியவன் பிரான்சுஆ மார்டின் (Francois Martin) என்பவன். இவன் இவ்விடத்தை ஷெர்கான் லோடி என்பவரிடமிருந்து நன்கொடையாக அடைந்தான். 1686-ல் புதுச்சேரியில் லூயிஸ் கோட்டை நிறுவப்பட்டது. 1720-ல் புதுச்சேரிக்கு கவர்னராக நியமிக்கப்பட்ட லெனுஆர் (Lenoir) புதுச்சேரியை ஒரு அழகான பட்டினமாக்கினன். 1735-ல் புதுச்சேரிக்குக் கவர்னரான டூமாஸ் (Dumas) என்பவன்தான் முதன்முதல் இந்திய அரசியல் விவகாரங்களில் கலக்க ஆரம்பித்தவன். இவன் தஞ்சை அரசுக்கு உரியவனை சிம்மாசனம் ஏறுவதற்கு உதவி அவனிடமிருந்து நன்கொடையாகக் காரைக்கால் பட்டினத்தைப் பெற்றான். இவனுக்குப்பின் ஜோசப் பிரான்சுஆ டூப்ளே (Joseph Francoi's Duple) பிரெஞ்சு இந்தியக் கவர்னரானன். இவன் இந்தியாவில் பிரெஞ்சு ஆட்சியை உறுதியாக நிறுவ முயன்றான். இதனால் பிரெஞ்சுக்காரருக்கும், ஆங்கிலேயருக்கும் அடிக்கடி சண்டைகள் உண்டாயின (கி. பி. 1742).

28. ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும்

(கி. பி. 1742–1763)

டூப்ளே பாண்டிச்சேரியில் கவர்னராக ஆனகாலத்தில், தென்னாட்டில் முகம்மதிய அரசர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டனர். இந்தச் சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக்கொண்ட ஐரோப்பியர்களில் முதலிடம் வகிக்கத் தகுந்தவன் டூப்ளே. கி. பி. 1744-ல் கருநாடகத்தின் அரசியல் நிலைமை ஒரே தலைவிரிகோலமாயிருந்தது. 1710-ல் கருநாடகத்தில் தன் ஆட்சியை நிறுவி, ஆர்க்காட்டையும் தலைநகராகக் கொண்டான் சத்துல்லாகான், அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த தோஸ்த்அலி மராட்டியரோடு சண்டை செய்து இறக்கவே, இவன்மகன் சப்தர் அலி கருநாடக நவாப் ஆனன். ஆனல் ஒருநாள் திடீரென்று சப்தர் அலி கொல்லப்பட்டான். அவனுக்குப்பின் பட்டமெய்திய

அவன் மகன் சையத்கானும் இரண்டு ஆண்டில் கொல்லப் பட்டான். இந்தக் கொலைகளுக்கெல்லாம் முக்கியக்காரணமாக இருந்த ஆசப்கான் என்பவன் அன்வாருதீன் என்பவனை கருநாடக நவாப்பாக ஆக்கினன். ஆனல் சையத்கானுக்கும் அன்வாருதீனுக்கும் எவ்வித உறவும், தொடர்பும் இருந்த தில்லை. இவ்விருவரையும்பற்றிக் கர்நாடகத்தில் இரண்டு கட்சிகள் எழுந்தன. இவைகளில் ஒன்று டூப்ளேயின் உதவியை நாட, மற்ருென்று ஆங்கிலேயர் உதவியை நாடிற்று. அப்போது சென்னையில் ஆங்கிலேயக் கவர்னராயிருந்த நிகோலாஸ் மோர்ஸ் (Nicholas Morse) என்பவன் உடனே தமது கடற்படையைச் சண்டைக்குத் தயாராக்கினன். பிரெஞ்சுக்காரர் ஆங்கிலேயரை எதிர்த்தனர். நூறு ஆண்டு காலத் திற்குமேலாக ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிருந்த சென்னை மாநகரம், விளையாட்டுப்போல் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமாயிற்று (கி. பி. 1746). கவர்னர் டூப்ளேயே இதைப்பற்றி அங்கலாய்த்தான். அதைத் திருப்பிக் கொடுக் கவும் செய்தான். இதற்கிடையில் ஆர்க்காட்டுக்கு நவாப்பா யிருந்த அன்வாருதீன் இந்திய விவகாரங்களில் கலந்த பிரெஞ்சுக்காரருக்கு ஒரு பாடம் கற்பிக்க எண்ணினன். அதற்காக சென்தோம் என்ற இடத்தில் பிரெஞ்சுக்காரரோடு கைகலந்தான். இதில் பிரெஞ்சுக்காரர்கள் மேனுட்டு ஆயுதங் களை உபயோகித்து ஆர்க்காட்டு நவாப்பின் படையைச் சுலப மாகத் தோற்கடித்தார்கள். இந்திய ஐரோப்பிய வரலாற்றில் சென்தோம் யுத்தம் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. ஏனென்ருல் அந்தப் போரில்தான் இந்தியப் படைகள் ஐரோப்பியர் பெருமையை முதல் முதல் கண்டன.

கி. பி. 1749-ல் தஞ்சை அரசுக்கு உரிமை பாராட்டிய மராட்டிய மன்னனுக்கு உதவி, அதற்குக் கைம்மாருக ஆங்கிலேயர் தேவகோட்டையைப் பெற்ருர்கள். இது இவ்வாறு இருக்க, ஐதராபாத் பிரதேசத்தில் நாசிர்ஜங், முஜபர்ஜங் என்ற இருவருக்கிடையே நவாப் பதவிக்கு போட்டி ஏற்பட்டது. முஜபர்ஜங் டூப்ளேயின் உதவியை

நாடினன். முஜபர்ஜங்கோடு சந்தா சாகிப்பும் சேர்ந்திருந்தான். அவருக்குத் தான் ஆர்க்காடு நவாப் ஆக வேண்டுமென்று ஆசை. டூப்ளே அப்போது ஆர்க்காடு நவாப்பாக இருந்த அன்வாருதீன் என்பவனை ஆம்பூரில் சண்டையிட்டுக் கொன்று, முஜபரையும், சந்தா சாகிப்பையும் முறையே தக்காண சுபேதாராகவும், கருநாடக நவாப்பாகவும் நியமித்தார். இறந்துபோன கருநாடக நவாப்பின் புதல்வன் முகமதுஅலி ஆங்கிலேயர் உதவியை நாடி, திருச்சிராப்பள்ளியை அடைந்தான். அப்போதுதான் ராபர்ட் கிளைவ் என்பவனின் யோசனை வெற்றி அளித்தது. அவன் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியில் ஒரு சிறிய குமாஸ்தாவாக இருந்தான். ஆனல் அவன் ஆங்கிலப் படைக்கே இப்போது தலைமைதாங்கினன். ஆர்க்காட்டைப் பிடித்தான். சந்தாசாகிப்பைக் கொன்றான்; முகமதுஅலியைக் கருநாடக நவாப் ஆக்கினன்.

ஆங்கிலேயரின் ஆர்க்காட்டு, வெற்றி, இந்திய வரலாற்றிலேயே ஒரு பெரிய நிகழ்ச்சி ஆகும். ஏனென்றால் ஆங்கிலேயருடைய வலிமை அப்போது நாட்டுக்கு எடுத்துக்காட்டப்பட்டது. இவ் வெற்றியின் பெருமை பிரான்ஸ் தேசம்வரை எட்டியது. உடனே ஆங்கிலேயரோடு சமாதானம் செய்துகொள்ளும்படி பிரான்ஸிலிருந்து டூப்ளேக்கு அடிக்கடி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. கி. பி. 1754-ல் டூப்ளே ஆங்கிலேயரோடு சமாதானம் செய்துகொண்டு தாய்நாடு திரும்பினன். டூப்ளேயின் வீழ்ச்சி ஆங்கிலேயரின் எழுச்சிக்கு உரமாயிற்று. டூப்ளே தம் வலிக்கும் துணை வலிக்கும் மீறிய வினையில் இறங்கினன். அவனுக்கு பிரஞ்சு அரசாங்கத்தாருடைய ஆதரவு போதிய அளவு இல்லாமலிருந்ததோடு ஆங்கிலேயருக்குச் சமமான கடற் படையும் இல்லாமற் போயிற்று.

டூப்ளேக்குப் பிறகு கோடஹியு, லேரி, லாலி, ஆகியவர்கள் புதுச்சேரி கவர்னர்களாக நியமிக்கப்பட்டார்கள் இவர்களில் கி. பி. 1756-ல் பதவி ஏற்ற லாலி, மிகவு

ஊக்கமும், திறமையும் வாய்ந்தவன்; இவனுடைய குரலைக் கேட்டாலே எல்லோரும் நடுங்குவர் என்று ஒரு ஆசிரியர் எழுதுகிறார். தஞ்சை அரசர் கொடுக்கவேண்டிய பாக்கிக்காக இவன் தஞ்சாவூரை முற்றுகையிட்டான். பிறகு மக்கள் மனத்தில் கலக்கம் எழுவது கண்டு, இந்த முற்றுகையை விட்டுவிட்டு புஸ்ஸீ என்ற தளகர்த்தரையும் தன்னோடு சேர்த்துக் கொண்டு, புதுச்சேரிக்கும், சென்னைக்கு மிடையே செங்கல்பட்டு நீங்கலாக மற்ற எல்லா ஊர்களையும் கைப் பற்றினான். கி. பி. 1758-ல் லாலி சென்னையை முற்றுகை யிட்டான். ஆனால் ஆங்கிலக் கடற்படையோடு சண்டைசெய்ய முடியாத நிலையில் மீண்டும் முற்றுகையைக் கைவிட்டான். பிரெஞ்சுக்காரர்கள் இவ்விதமாக மறுபடியும் தங்கள் பல மின்மையைக் காட்டிக் கொண்டனர். அவர்கள் சில வெற்றி கள் கொண்டார்கள் எனினும் அவைகளையும் நன்கு பயன் படுத்திக் கொள்ள அவர்களால் முடியாமற் போயிற்று. கி. பி. 1760-ல் ஆங்கிலப் படைத்தலைவன் சர். அயர் கூட் என்பவன் வந்தவாசியில் பிரெஞ்சுக்காரரைத் தோற்கடித் தான். இதன் பயனாய் பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி, மாகி, செஞ்சி ஆகிய இடங்களைத் தவிர பிற இடங்களையெல்லாம் இழந்தனர். அதற்கடுத்தாண்டு சர். ஹையர் கூட் புதுச்சேரி யையும், அதற்குப் பிறகு செஞ்சியையும் கைப்பற்றினான். பிரெஞ்சுக்காரருடைய வாழ்வு இவ்விதமாக வெகு சீக்கிரத்தில் சீர்குலைந்தது. அது எவ்வளவு தூரம் சீர் குலைந்தது என்றால்: ஆங்கிலேயர் லாலியையே கைது செய்து இங்கிலாந் துக்கு அனுப்பினர். இதோடு பிரெஞ்சுச் சூரியன் ஒரு விதத்திலே தமிழ் நாட்டிலே மறைந்தது.

29. ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கம்
(கி. பி. 1763 - 1780)

தென்னிந்தியாவிற்கு வந்த வெள்ளையர்களில் ஆங்கிலேயர் மட்டுமே தலைதூக்கி நின்றனர். அவர்களுக்கு அப்பொழுது தங்கள் ஆட்சியை அங்கு நிறுவ வேண்டும் என்ற

எண்ணம் உதயமாயிற்று. அதற்கு அப்பொழுது எதிராக இருந்தவன், மைசூர் பிரதேசத்தை ஆண்டுவந்த ஐதர் மட்டுமே. அவன் ஐதராபாத் நிஜாமைத் தன்னோடுசேர்த்துக் கொண்டு, கரூர், ஈரோடு, தஞ்சை, திருநெல்வேலி முதலிய இடங்களைக் கைப்பற்றினன். இவர்களோடு சண்டை செய்ய முடியாத ஆங்கிலேயர் கி. பி. 1769-ல் சமாதானம் செய்து கொண்டனர். அதன்படி அவரவர்கள் பிடித்த இடங்களைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும், ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. கரூர் மட்டும் ஐதரிடம் விடபட்டது.

கி. பி. 1772-ம் ஆண்டு தமிழ் நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான காலமாகும். ஏனென்றால் இந்த ஆண்டில் தான் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே ஆங்கில ஆட்சி தொடங்கியது. அந்த ஆண்டில் வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப் பட்டான். தமிழ் நாட்டின் வரலாறு அதிலிருந்து இந்திய வரலாற்றோடு கலந்து ஓடலாயிற்று. கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்ட வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவில் ஆங்கிலேயருக்குச் சொந்தமான இடங்களில் ஆங்கில அரசாட்சி முறையை உடனே தோற்றுவித்தான். முதன் முதலாக நாம் இப்போது ஜில்லாக்கள் என்று சொல்லும் மாவட்டங்கள் தோன்றலாயின. ஒவ்வொரு மாவட்டத்தின் அரசாட்சி முறையின் தலைவராக கலெக்டர் என்பவர் நியமிக்கப்பட்டார். அப்படி நியமிக்கப்பட்ட கலெக்டர்களின் வேலைகளை மேற்பார்வையிட ரெவின்யூ போர்டு எனப்பட்ட ஒரு வருவாய்க் குழு கவர்னர் ஜெனரலின் தலைமையின்கீழ்க் கல்கத்தாவில் நியமிக்கப்பட்டது. வசூலான வரிப் பணத்தைக் காப்பதற்காக கால்ஸா என்ற ஒரு கஜானா நிறுவப்பட்டது. அதற்குத் தலைவராக தலைமைக் கணக்கர் (Accountant General) ஒருவர் நியமிக்கப்பட்டார். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சிவில் நீதி மன்றமும், ஒரு கிரிமினல் நீதி மன்றமும் நிறுவப்பட்டன.

இந்துச் சட்டங்களைத் தொகுத்து பாரசீகத்திலும், ஆங்கிலத்திலும் அவைகளை மொழிபெயர்க்க ஹேஸ்டிங்ஸ் ஏற்பாடு செய்தான். திருடர்களை ஒழித்து வாணிகம் செழிக்க வழி செய்தான். இதற்கு உதவியாக கல்கத்தாவில் ஒரு பாங்கியையும் நிறுவினன் வாரன் ஹேஸ்டிங்ஸ். சுருங்கக் கூறின், மிஸ். மாங்க்டன் ஜோன்ஸ் என்ற ஆசிரியர் குறித்ததுபோல் நாட்டின் தீமைகளுக்குக் காரணமாயிருந்த ஆங்கிலேயர் இப்பொழுது நாட்டின் நன்மைகளைப் பேணுபவர்கள் ஆனர்கள்.

ஆனல் இதே சமயத்தில் சென்னையில் ஆங்கிலேயருடைய ஆட்சி முறை சீர்குலைந்திருந்தது. கி பி. 1755-முதல் 1785-வரையிலும் உள்ள 30 ஆண்டுகளில் 12 கவர்னர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களில் வேலைக்குத் தகுதியற்றவர்கள் என்று தள்ளப்பட்டவர்கள் இருவர் (வின்சு, ரம்போல்ட்); வேலையினின்றும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டவர் இருவர் (ஸ்டேரட்டன், வொய்ட்டில்); மதிக்கப்படாதவர் ஒருவர் (பிகட்); வேலை வேண்டாமென்று விலகியவர் ஒருவர் (மக்கார்ட்னி). இந் நிலைமை கவர்னர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பெரியோர்களின் குறையால் நேர்ந்ததல்ல; சென்னையிலிருந்த ஆங்கிலேயக் கம்பெனியாரின் குறையாலேயே இது நேர்ந்தது. கம்பெனியின் அலுவலாளர்கள் லஞ்சம் வாங்குவதிலும், பணம் சேர்ப்பதிலுமே கவனம் செலுத்தி தங்கள் கடமைகளைச் செய்யத் தவறினர். சுயமாகவே வியாபாரம் செய்வதிலே அவர்கள் ஈடுபட்டனர். இவ்விதமாகச் சேர்த்த பணத்தை இந்தியச் சிற்றரசர்களுக்கு வட்டிக்குக் கொடுத்தனர். இப்படி அநேகக் கம்பெனி அலுவலாளர்கள் பிரபுக்களானர்கள். இங்கிலாந்திலும் இவர்களுக்கு ‘ரூபாய் பிரபுக்கள்’ என்ற பெயர் வழங்கலாயிற்று. இவர்களில் பெயர் பெற்றவன் பால் பென்பீல்ட். இவன் ஒருவனே ஆர்க்காடு நவாப்புக்கு 23 இலட்சம் ரூபாய் கடன் கொடுத்திருந்தான்.

இந்தச் சூழ்நிலையை நன்ருகப் பயன் படுத்திக்கொண்டு 1780-ம் ஆண்டு ஐதர் அலி 90 ஆயிரம் பேர்களுடன் கருநாடகத்தின்மேல் பாய்ந்து சென்னையைக் கைப்பற்ற முயன்ருன். சென்னைக் கவர்னர், கவர்னர் ஜெனரலின் உதவியை நாடினன். இருபது ஆண்டுகளுக்கு முன்பு வந்தவாசியில் பிரெஞ்சுக்காரரைத் தோற்கடித்த சர். அயர் கூட், சென்னை ஆங்கிலேயருக்கு உதவி புரிய அனுப்பப்பட்டான். வந்தவாசி வீரன், போர்ட்டோநோவோ, சோழங்கிவரம் என்ற இடங்களில் ஐதரைத் தோற்கடித்தான்; ஐதர் கடலூரைக் கைப்பற்றினன். இங்கிலையில் திடீரென்று ஏற்பட்ட முதுகுப் பிளவையால் ஐதர் 1782-ம் ஆண்டு சித்தூர்க்கருகில் காலமானன். ஐதரின் மரணச் செய்தியை மறைத்து வைத்துக் கொண்டே அவன் மகன், 'மைசூர்ப்புலி' என்ற பெயர் பெற்ற திப்புசுல்தான் சண்டையைத் தொடர்ந்து நடத்தினன். திப்பு, மங்களூரைக் கைப்பற்றினன். ஆங்கிலேயர், தாராபுரம், கோயம்புத்தூர், பாலக்காடு ஆகிய இடங்களைக் கைப்பற்றினர். கி. பி. 1784-ம் ஆண்டு மங்களூரில் நடந்த உடன்படிக்கைப்படி சண்டையில் கிடைத்த இடங்களை அவரவர்களுக்குக் கொடுத்துவிடும்படித் தீர்மானமாயிற்று. ஆனல் திப்பு அந்த உடன்படிக்கைப்படி நடந்து கொள்ளவுமில்லை; ஆங்கிலேயர் அவனைக் கட்டாயப் படுத்தக்கூடவுமில்லை.

1784-ம் ஆண்டு திப்பு திருவாங்கூரைத் தாக்கினன். திருவாங்கூர் சமஸ்தானம் ஆங்கிலேயரோடு உறவு பூண்டிருந்ததால் ஆங்கிலேயர் திப்புவோடு சண்டை தொடங்க வேண்டியதாயிற்று. அப்போது சென்னையில் கவர்னராயிருந்தவன் ஹாலன்ட் என்பவன். அவனுக்குத் திப்புவோடு சண்டையிட விருப்பமில்லை. ஆனல் அப்போது கவர்னர் ஜெனரலாயிருந்த காரன்வாலிஸ் பிரபு சண்டையில் இறங்க முடிவு செய்து மெடோஸ் என்ற தளகர்த்தரைச் சென்னைக்கு அனுப்பி வைத்தான். அப்போது கோயம்புத்தூர், திண்டுக்கல், பாலக்காடு முதலிய இடங்கள், ஆங்கிலேயர் வசமாயின.

திப்பு, பிரெஞ்சுக்காரர்களை ஸ்ரீரங்கபட்டணத்துக்கு அழைத்து அவர்களோடு ஆலோசிக்கவும், நெப்போலியன் என்ற புகழ் பெற்ற பிரெஞ்சு மன்னனோடு கடிதப் போக்குவரத்து நடத்தவும் தொடங்கினான். இதை அறிந்த கவர்னர் ஜெனரல் வெல்லெஸ்லி இரண்டு பெரும்படைகளை சென்னையிலிருந்தும், பம்பாயிலிருந்தும் அனுப்பி திப்புவை எதிர்த்தான். கி. பி. 1799-ம் ஆண்டு ஸ்ரீரங்கபட்டணம் என்ற தன் தலைநகரிலேயே திப்பு சுட்டுக் கொல்லப்பட்டான். தலைநகரும் ஆங்கிலேயர் வசமாயிற்று.

30. ஆங்கிலேய ஆட்சியின் வளர்ச்சி
(கி. பி. 1780 – 1800)

கி. பி. 18-ம் நூற்றாண்டின் கடைசிப்பாகம் தமிழ் நாட்டின் வரலாற்றிலே மட்டுமல்ல; இந்திய வரலாற்றிலேயே மிக முக்கியமான பாகமாகும். ஏனெனில், இந்தக் காலத்தில் தான் தமிழ் நாட்டின் பெரும்பகுதி ஆங்கிலேயருக்குச் சொந்தமாகியது. நாம் முன்னே குறித்தது போல், சேலம், கோயம்புத்தூர், தாராபுரம், பாலக்காடு, தஞ்சை முதலிய பட்டணங்கள் ஆங்கிலேயருக்கு இப்போது சொந்தமாயிருந்தன. மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கைப் பகுதிகள் 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயின. இதன் வரலாற்றை முதலில் ஈண்டு குறிப்போம்.

மதுரையிலே ஆண்ட நாயக்கர் அரசு நாட்டிலே பல பாளையப்பட்டுகளை ஏற்படுத்தின என்பதை நாம் அறிவோம். அவைகள் நாயக்கர்கள் மறைந்த பின்னர் தனிச் சிற்றரசுகளாக மாறின. இவ்விதமாக 18-ம் நூற்றாண்டின் இறுதிப் பாகத்தில் எழுந்த சிற்றரசுகள் பலப்பல. எட்டையபுரம், பாஞ்சாலங்குறிச்சி, நெற்கட்டுஞ்செவ்வல் முதலிய பாளையப்பட்டுகள் திருநெல்வேலி மாவட்டத்தில் அப்போது தோன்றின. இவைகள் பொதுவாக, கிழக்குப் படாகைப் பாளையப்பட்டுகள், மேற்குப் படாகைப் பாளையப்பட்டுகள்

என்று இரு கூறுகப் பிரிந்தன. கிழக்குப் புறத்தார் எல்லோரும் தெலுங்கர்கள் ; மேற்குப்புறத்தாரில் சிவபுரி, அழகாபுரி என்ற இரு வன்னியப் பாளையப்பட்டுகளைத் தவிர எல்லோரும் மறவர்கள். மேற்குப் புறத்தாருக்குத் தலைவனாக புலித்தேவன் என்பவனும், கிழக்குப் புறத்தாருக்குத் தலைவனாக கட்டபொம்மனும் விளங்கினார்கள்.

இந்தச் சூழ்நிலையிலே இவர்களுக்குத் தலைமையாக இருந்த ஆர்க்காட்டு நவாப் 1792-ம் ஆண்டு ஆங்கிலேயரோடு ஒரு உடன்படிக்கை செய்து கொண்டான். அதன்படி அவன் ஆங்கிலேயரிடமிருந்து பெற்ற கடனுக்காக பாளையப்பட்டுகளின் கப்பப் பணம் முழுவதையும் ஆங்கிலேயரே வசூலித்துக் கொள்ளும்படி ஏற்பாடாயிற்று. பாளையக்காரரோ தம்முள் ஒற்றுமை இல்லாமல் தவித்தனர், ஆயினும் அவர்களில் பலர் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்டுவதாக இல்லை. இதனால் 1801-ம் ஆண்டில் பாளையப்பட்டுகளுக்கும், ஆங்கிலேயருக்கும் சண்டை மூண்டது. இவ்விதமாய் இதுவரை அரசர்களோடு சண்டை செய்து வந்த ஆங்கிலக் கம்பெனியார், இப்போது மக்களோடு நேரடியாகச் சண்டை செய்யத் துவங்கினார்கள். ஒவ்வொரு பாளையக்காரரையும் தோற்கடித்து வெற்றி கண்டபோது, அவர்கள் அதிகாரம் செலுத்தி வந்த பிரதேசத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டார்கள். இப்படியாக 19-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் திருநெல்வேலிச் சீமையில் அங்குலம் அங்குலமாகப் பிடிக்கப் பட்டது.

கட்டபொம்மன் 1760-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ம் தேதி ஜகவீரக் கட்டபொம்மன் என்பவரின் மகனாகத் தோன்றினான். இவர்கள் முன்னோர்கள் கி. பி. 11-ம் நூற்றுண்டில் பஞ்சத்தின் காரணமாக பெல்லாரியிலிருந்து திருநெல்வேலிக்கு அடுத்த சாலிக்குளத்தில் குடியேறினார்கள். குடியேறிய ஜகவீரன் வீரபாண்டியபுரத்தில் அரசு நடத்தி வந்த பாண்டிய மன்னனிடம் படைத்தலைவனாக அமர்ந்தான். அப்போது அவனுடைய ஆற்றலின் காரணமாக அவனுக்குக்

கெட்டி பொம்மு என்ற பட்டம் வழங்கப்பட்டது. பிறகு அதுவே நாளடைவில் கட்டபொம்மு என்று மாறிற்று. பாண்டிய மன்னன் பலம் குன்றியபோது அவனே அரசுக்கும் தலைவன் ஆனான்.

ஜகவீரனுக்குப் பிறகு கட்டபொம்மு வீரபாண்டியன் 1790-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ம் தேதி வீரபாண்டிய புரத்திற்கு அரசனானான். பாளையக்காரரிடம் வரி வசூலிப் பதற்காக வெள்ளையர்கள் ஜாக்ஸன் என்பவனைத் திருநெல் வேலி மாவட்டத்தின் கலெக்டராக, கட்டபொம்மன் பட்டத் திற்கு வந்த இரண்டு ஆண்டுகளில் நியமித்திருந்தார்கள். கட்டபொம்மன் வரி கொடுக்க மறுத்ததால் ஜாக்ஸன் அவனைத் தம்மை வந்து காணும்படி பணித்தார். அதிக நாள் கால தாமதத்துக்குப் பிறகு இந்தப்பேட்டி இராமநாதபுரத்தில் நடந்தது. கலெக்டர் கட்டபொம்முவைக் கைது செய்ய எண்ணினான். கட்டபொம்மனே திடீரென்று புறப்பட்டு வாயிலில் காவல் செய்து வந்த கிளார்க் என்ற தளபதியை வெட்டி வீழ்த்திவிட்டு வெளியேறினான். இது தான் சண்டையின் தொடக்கம். ஜாக்ஸனுக்குப் பிறகு வாஷிங்டன் இராமநாதபுரக் கலெக்டரானான். படைகொண்டு பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்க வேண்டுமென்ற முடிவுக்கு அவன் வந்தான். 1799-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ம் தேதி மேஜர் பானர்மென் தலைமையின் கீழ் ஒரு ஆங்கிலேயப் படை சீவலப்ப ஏரி வழியாகப் பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிப் புறப்பட்டது.

இந்த ஆண்டில்தான் திப்பு சுல்தான் ஸ்ரீரங்கபட்ட ணத்தில் கொல்லப்பட்டான். அவனுடைய தோல்விக் குப்பின் தமிழ் நாட்டின் பெரும்பகுதி ஆங்கிலேயர் அரசாட்சியின் கீழ்வந்தது. அதன்காரணமாய் ஆங்கிலேயர் மிகுந்த உற்சாகம் கொண்டிருந்தனர். அப்போது பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையில் கட்டபொம்மு, சிவத்தையா நாயக்கன், தானாபதிப் பிள்ளையின் தம்பி வீரபத்திரப்பிள்ளை, சம்பிரதி பொன்னப்ப பிள்ளை, பாதர் வெள்ளை எனப்பட்ட

வெள்ளையத்தேவன் முதலானோர் இருந்தார்கள். ஆங்கிலேயப் படைக்கு மேஜர் பானர்மென், கேப்டன் ஓரிலி, ப்ரூய், லெப்டினன்ட் டல்லஸ், காலின்ஸ், டக்ளஸ், ப்ளேக், ப்ரௌன் முதலியோர் தலைமை தாங்கினர்.

மேஜர் பானர்மென் பீரங்கி கொண்டு பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை இடிக்க ஆரம்பித்தான். கோட்டையின் தெற்கு வாயிலில் ஆங்கிலப் பீரங்கிகள் குண்டு மழை பொழிந்தன. அதே சமயத்தில் டல்லஸ் இந்திய சிப்பாய்களைக் கொண்டே வடக்கு வாயிலைத் தாக்கினான். கோட்டையின் தெற்குச் சுவர் வீழ்ந்தது, வாயில் திறந்தது. காலின்ஸ் குதிரைமேல் ஏறி உள் நுழைந்தான். நாட்டுப்பாடல்கள் நமக்கு அறிவிக்கிறபடி வெள்ளையத்தேவன் ஈட்டி கொண்டு காலின்ஸைக் குத்தினான் என்றும், அவன் சாவதற்கு முன் தன் கைவாளால் வெள்ளையத்தேவனை வெட்டி வீழ்த்தியதாகவும் தெரிகிறது. ஆயினும் வேறு ஆதாரங்கள் வெள்ளையத்தேவன் அப்பொழுது கொல்லப்படவில்லை என்றும் பின்னர் தூக்கிலே இடப்பட்டுக் கொல்லப்பட்டதாகவும் நமக்கு அறிவிக்கின்றன.

இது எங்ஙனமாயினும், வெள்ளையர்களுக்கும் பாஞ்சாலங் குறிச்சிப் படைகளுக்கும் நடுவே பலத்த சண்டை நடந்து இரு தரத்திலும் பெரும் சேதம் விளைந்தது. பாளையக்காரர் வேல், கம்பு, விளரித்தண்டு, குத்தீட்டி, சுருள்வாள் முதலிய பலதரப்பட்ட கருவிகளைக் கையாண்டனர். ஆயினும் மேல்நாட்டு ஆயுதங்களைக் கையாளும் ஆங்கிலேயரிடமிருந்து கோட்டையைக் காப்பாற்றப் போதிய வலிமை பாளையக்காரரிடமில்லை. ஆகவே சண்டை தொடங்கிய அன்றிரவே கட்டப்பொம்முவும் அவன் தம்பியரும் கோட்டையை விட்டு வெளியேறி, நாகலாபுரம், சிவகிரி, இராமநாதபுரம் முதலிய பாளையக்காரர்களைத் தட்டி எழுப்பி ஒன்று சேர்த்தார்கள். அப்பொழுதுதான் கட்டப்பொம்முவுக்கும். ஆங்கிலேயருக்கும் ஏற்பட்ட தனிச்சண்டை ஒருவிதத்தில் ஆங்கிலேயரோடு தமிழ்நாடு செய்த சண்டையாக மாறியது. ஆனால் இந்த

ஒற்றுமை பலனளிக்கவில்லை. ஏனென்றால், எட்டையபுரத்துப் பாளையக்காரன் வெள்ளையரோடு சேர்ந்து கொண்டு இவர்களைக் காட்டிக் கொடுத்தான். நாகலாபுரத்துப் பாளையக்காரனின் மூத்த புதல்வன் சௌந்திர பாண்டியன் என்பவனும், கட்டபொம்முவின் தானாபதியாயிருந்த தானாபதிப் பிள்ளையும் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார்கள். கட்டபொம்மு தப்பிப் போய் புதுக்கோட்டை மன்னனிடம் அடைக்கலம் புகுந்தான். ஆனால் புதுக்கோட்டை மன்னன் எட்டையபுரம் பாளையக்காரரைப் போல் ஆங்கிலேயரோடு சேர்ந்திருந்தான். ஆகவே அவனைப் பிடிப்பது ஆங்கிலேயருக்குச் சுலபமாயிற்று. 1799-ம் ஆண்டு அக்டோபர் மாதம் கயத்தாற்றிலே கட்டபொம்மு தூக்கிலிடப்பட்டான்.

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்முவின் தம்பிமார்கள் இருவரும் இன்னும் உயிரோடு இருந்தார்கள். இவர்களில் சிவத்தையா குமாரசாமி என்பவன் ஊமையாயிருந்தாலும் மிகுந்த மனத் திடம் உள்ளவன். இவர்கள் காலத்தில் பாஞ்சாலங்குறிச்சிச் சண்டை உண்மையாகவே ஒரு புரட்சியாக மாறிற்று. தென் பாண்டிய நாட்டின் வீரர் இளைஞர்கள் எல்லாம் ஒன்றுகூடி ஓட்டநத்தம் என்ற சிற்றூரில் இரவெல்லாம் புரட்சித்திட்டம் வகுப்பதிலேயே காலம் கழித்தனர். ஊமைத்துரையும், அவர் துணைவர்களும் அப்போது பாளையங்கோட்டைச் சிறையிலே வைக்கப்பட்டிருந்தனர். அவர்களை விடுவிக்க இளைஞர் படை ஒருங்கு திரண்டது. பாளையங்கோட்டைச் சிறைச்சாலையும் தகர்ந்தது. குலையநல்லூரில் வெள்ளையருடைய துருப்புகள் முகாம் இறங்கி இருந்தனர். ஆனால் அவர்கள் கூடாரம் அடித்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சுமார் 1200 பேர்கள் கொண்ட ஒரு பெரும் மறவர் படை அவர்களைத் தாக்கி ஓடச்செய்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு புரட்சிக்காரர் தூத்துக்குடியைக் கைப்பற்றினர். அதே சமயத்தில் வெள்ளையருடைய ஆயுதங்களும், குண்டுகளும் பல இடங்களில் இவர்கள் கையில் கிடைத்தன. இதற்கிடையில் பல

மக்களுடைய உதவி கொண்டு பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை புதிதாக எழுப்பப்பட்டது. 1801ம் ஆண்டு பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை எதிரில் மீண்டும் யுத்தம் மூண்டது. எட்டையபுரத்துப் பாளையக்காரன், ஆயிரம் பேர் கொண்ட படை ஒன்றை வெள்ளையருக்கு உதவினன். ஆயினும் போரின் முதற்பகுதியிலே வெள்ளையர் தோற்கடிக்கப்பட் டார்கள். அப்பொழுது கர்னல் ஆக்ன்யூ ஒரு புதுப்படை யோடு வந்து கோட்டையைத் தாக்கினன். நிலைமை மோசமானதைக் கண்டு ஊமைத்துரையும், அவனது துணைவர்களும் சிவகங்கை சென்று சேர்ந்தார்கள்.

சிவகங்கைப் பிரதேசம் சேதுபதியின் ஆட்சியில் அடங்கியிருந்தது. ஆயினும், கி. பி. 1710-முதல் இராம நாதபுர சேதுபதி இறந்து அவனுக்குப் பின் வலிமை பொருந்திய அரசன், சேதுபதி சமஸ்தானத்தில் ஆளுவதற்கு இல்லாத காரணத்தால் அது பல சிறு பிரிவுகளாகப் பிரிந் தது. அவற்றில் ஒன்று சிவகங்கை ஆகும். அதை சசி வர்ணத் தேவன் என்பவன் அப்பொழுது ஆண்டு வந்தான். பெரியமருது, சிறியமருது என்ற இரு வீரச் சகோதரர்கள் சசிவர்ணத்தேவன் கீழ் சேனைத்தலைவராக அமர்ந்தார்கள்.

சிவகங்கை தனி அரசு ஆன பின், அதுவும் ஆர்க்காட்டு நவாப்புக்குக் கப்பம் கட்ட வேண்டியதாயிற்று. அதற்குப் பிறகு நவாப்பின் உடன்படிக்கைப்படி ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்டவேண்டியதாயிற்று. இப்பொழுது மற்ற பாளையப்பட்டுகளோடு சேர்ந்து சிவகங்கைப் பாளையப்பட்டும் அவர்களுக்குக் கப்பம் கட்ட மறுத்தது. அப்பொழுது முத்து வடுகநாதன் என்ற வீரம் செறிந்த பாளையக்காரன் சிவகங் கையில் அரசாண்டு வந்தான். ஆனல் முத்துவடுகநாதன் இறக்கவே, அவன் மனைவி வேலுநாச்சியும் மருது சகோதரர் களும் சிவகங்கையை விட்டுத் திண்டுக்கல் பிரதேசத்தில் மறைந்து வாழ்ந்து வந்தார்கள். முத்துவடுகநாதனுக்குக் குழந்தை இல்லாததால் வேலுநாச்சியையே சிவகங்கை அரசியாகப் பட்டம் சூட்டுவித்து மருது சகோதரர்கள்

அவளுடைய அமைச்சர்களாக அமர்ந்தனர். இந்த சமயத்தில் தான் ஊமைத்துரை மருது சகோதரர்களைச் சந்தித்தான். சிவ கங்கைப் பாளையத்தாரிடம் மட்டுமே ஏறக்குறைய இருப தாயிரம் வீரர்கள் கொண்ட பெரும் படை இருந்தது. அவர் களோடு ஊமைத்துரையும் சேர்ந்து கொண்டு ஆங்கிலேய ரோடு சண்டையிட்டார்கள். போர் கமுதியில் தொடங்கியது. பிறகு நாகலச்சேரி, திருப்புவனம், திருப்பாச்சேத்தி என்ற பல இடங்களில் போர் செய்யப்பட்டது. பல வீரர்கள் இரு புறமும் மாண்டார்கள். இந்தச் சண்டைகளில் ஆங்கிலேயர் பக்கத்தில் பெயர் பெற்ற பிளாக்கர், கோல், பர்மின்ட்டர், ஸ்வெட் என்ற பெரும் படைத்தலைவர்கள் இருந்தார்கள் என்று தளபதி வெல்ஸ் எழுதிவைத்த நாட்குறிப்பு ஒன்று கூறுகின்றது. மறவர் இழைத்த பெரும் கொடுமைகளைப் பொருத ஆங்கிலேயர், பல ஊர்களுக்குத் தீ வைத்துவிட்டு மருது பாண்டியன் தலைநகரான சிறுவயலுக்கு ஓடினர்.

சிறுவயலுக்குத் தென்மேற்கில் எட்டு மைல் தூரத்தி லுள்ள காளையார் கோயிலைச் சேர்ந்த காட்டுக்குள்ளே மறவர் புகுந்து மரங்களிலும், புதர்களிலும் பதுங்கிக் கொண்டார்கள். ஆங்கிலேயரோ முதலில் காட்டுக்குள் நுழையப் பாதை போட ஆரம்பித்தார்கள். அப்பொழுது இருட்டுக் காலம். மறவர் கள் ஆங்கிலேயரை அடிக்கடி தாக்கி, அவர்களைக் கண்டதுண்ட மாக வெட்டிப் புதைத்தார்கள். இது ஒரு மாதத்திற்குமேல் காளையார் கோயில் காட்டில் நடந்தது. அப்பொழுது ஆங்கி லேயர் எட்டையாபுரத்துப் பாளையக்காரரையும், புதுக் கோட்டைத் தொண்டைமானையும் உதவிக்கு நாடினர்கள். அவர்கள் ஆங்கிலேயருக்கு ஒரு சுருக்கமான வழி சொல்லிக் கொடுத்தார்கள். உடையத்தேவன் என்பவனே சிவகங்கை அரச பதவிக்கு உரிமை உடையவன் என்பதை ஆங்கிலே யருக்கு எடுத்தோதி, சிவகங்கைப் படை நடுவே பிளவு செய்யும்படி வழி காண்பித்தார்கள்.

இந்தவழி எளிதில் ஆங்கிலேயருக்கு அனுகூலம் அளித்தது. 1801-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ம்தேதி

ஆங்கிலேயரின் உதவியால் உடையத்தேவன் சிவகங்கைப் பாளையப்பட்டின் தலைவனானான். உடனே சண்டையின் நிலைமை மாறினது. மறவர் படையோடு சேர்ந்திருந்த பலர் உடையத் தேவனுக்கு உதவியாக ஆங்கிலேயரோடு சேர்ந்தனர். மேலூர், பிரான்மலை, கடைசியில் காளையார் கோயிலும் ஆங்கிலேயர் வசமாயிற்று. மருது சகோதரர்களும், ஊமைத் துரையும் சங்கரப்பதிக்கு ஓடி, அங்கே உள்ள காடுகளில் மறைந்து கொண்டனர். ஆங்கிலேயர், இவர்களைப் பிடித்துக் கொடுப்பவருக்குப் பல கிராமங்களை மானியமாக வழங்குவ தாக அறிக்கை வெளியிட்டனர். மருது சகோதரர்கள் இந்தக் காடுகளிலுள்ள பாலைமரப் பொந்துகளில் மிகுந்த பணத்தை வைத்திருப்பதாகவும் அந்த மரங்களை யார் வேண்டுமானாலும் குத்தகைக்கு எடுத்துப் பணம் சம்பாதிக்கலாமென்றும் ஆங்கி லேயர் வெளிப்படுத்தினர். இவ்விதமாக சங்கரப்பதிக் காடுகள் அழிக்கப்பட்டன. சுதந்திர வீரர்களைப் பற்றிய தகவல்கள் வெளிவரலாயின. அவர்கள் பதுங்கி இருந்த கோட்டை கள் காட்டிக் கொடுக்கப்பட்டன. வீரர்கள் பிடிபட்டார்கள். இதில் ஆங்கிலேயருடைய தந்திரத்தை வியப்பதா, அல்லது நம் மக்களுடைய அறியாமைக்கு வருந்துவதா? எப்படி இருந்த போதிலும் இராமநாதபுரத்தைச் சார்ந்த திருப்பத்தூர்க் கோட்டையில் 1811-ம் ஆண்டின் முடிவில் மருது சகோதரர்களும், சிவஞானமும் தூக்கிலிடப்பட்டார்கள். இவ்விதமாய் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை முதலிய இடங்கள் அப்போது ஆங்கிலேயருக்குச் சொந்தமாயின.

31. சென்னையில் ஆண்ட ஆங்கிலேயக் கவர்னர்கள்

(கி. பி. 1800 – 1880)

கி. பி. 1800-ஆம் ஆண்டிலிருந்து ஆங்கிலேய ஆட்சி தமிழ் நாட்டில் உறுதிப் பட்டது. ஆர்க்காட்டு வீரர் சர். ராபர்ட் கிளைவின் புதல்வன் லார்ட் கிளைவ், கி. பி. 1798-ம்

ஆண்டிலிருந்து 1803-ம் ஆண்டு வரை சென்னையில் கவர்னராக ஆட்சி புரிந்தான். இவன் காலத்தில்தான் திருநெல்வேலிப் பாளையக்காரனை கட்டபொம்மன் தூக்கிலிடப் பட்டான். தமிழ் நாட்டில் ஆங்கிலேய ஆட்சி நிலை பெற்றது என்பதற்கு இது ஒரு அறிகுறியாக இருந்தது. தற்பொழுது சென்னை மவுண்ட் ரோட்டிலுள்ள கவர்னர் மாளிகையைக் கட்டி முடித்தவனும் லார்ட் கிளைவே. இது ஆங்கிலேய ஆட்சி தமிழ்நாட்டில் நிலை பெற்றதற்கு மற்றொரு அறிகுறியாக இருந்தது.

1806-ம் ஆண்டு, பிரபு வில்லியம் பென்டிங் (William Bentinck) கவர்னராக இருந்த காலத்தில் வேலூரில் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்தார்கள். இக் கிளர்ச்சியை அடக்குவதற்கு ஆங்கிலேயருக்கு வெகு சிரமமாகப் போய் விட்டது. அதற்குப் பிறகு நாட்டில் அமைதி நிலவ போலீஸ் படை ஒன்று தேவை என்பதை அவர்கள் கண்டு உணர்ந்தார்கள். பென்டிங் பிரபுவுக்குப் பிறகு கவர்னராக வந்த சர். ஜார்ஜ் பார்லோ (George Barlow) காலத்தில் ஆங்கிலேய வீரர்களே அரசாங்கத்திற்கு விரோதமாகக் குழப்பம் செய்தார்கள். இதற்கு 'வெள்ளைக் கலகம்' (White Mutiny) என்று பெயர். சென்னையில் ஆங்கிலேய ஆட்சி வலிமை பெற்ற காரணத்தால், ஆங்கிலேயச் சிப்பந்திகளுக்குக் கிடைத்து வந்த லாபமும் வருமானமும் குறையலாயின. இதுவே இந்த வெள்ளையர் கலகத்திற்குப் பொதுவில் காரணமாகும். அப்பொழுது கவர்னர்ஜெனரல் பதவி வகித்த பிரபு மின்டோ (Minto) இக் கலகத்தை அடக்கத் தாமே சென்னைக்கு வந்தார். இவ்விதமாக பார்லோவின் கவர்னர் பதவி முடிவடைந்தது.

18ı6-ஆம் ஆண்டு எலியட் (Hirgh Elliot) என்ற பெருமகன் சென்னை கவர்னர் ஆனான். அதே சமயத்தில் சர். தாமஸ் மன்ரோ (Thomas Munro) என்பவனின் தலைமையின் கீழ் சென்னை இராச்சியத்தின் ஆட்சிக்கு அவசரமான சில சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இவற்றில் முக்கியமானவை:

(1) போலீஸ் அதிகாரிகளைக் கவனித்து அமல் நடத்த வேண்டியவர் மாவட்ட அதிகாரியான கலெக்டர் ஆவர்.

(2) கிராமங்களில் மணியக்காரர்கள் கணக்குப்பிள்ளைகள் வமிசா வழியாக (hereditary) நியமிக்கப்பட வேண்டும்.

(3) கிராம அதிகாரிகள் குடிமக்களின் சாதாரணக் குறைபாடுகளை விசாரித்து நியாயம் தீர்க்க வேண்டும்.

(4) கிராமங்களில் பஞ்சாயத்துகள் நியமிக்கப்பட வேண்டும்.

எலியட் ஆட்சியின் காலத்தில்தான் ரூபாய் நாணயங்களும், கால்ரூபாய், இரண்டணு, ஒரணு நாணயங்களும் அமலுக்கு வந்தன. இவைகளெல்லாம் வெள்ளி நாணயங்கள். இவைகளைத் தவிர பைகள் என்ற செப்பு நாணயங்களும் அப்போது அடிக்கப்பட்டன.

1820-ஆம் ஆண்டு சர். தாமஸ் மன்ரோ (Thomas Munro) சென்னை கவர்னர் பதவிக்கு உயர்த்தப்பட்டான். 1780-ஆம் ஆண்டு சாதாரணச் சிப்பாயாக சென்னையில் வந்து இறங்கிய இவன், காலக்கிரமத்தில் மேஜர் ஜெனரல் பதவியை அடைந்தான். அதற்குப்பிறகு சேலம் மாவட்டத்தில் உதவிக் கலெக்டராகவும், தென் கன்னடம், அனந்தப்பூர் முதலிய மாவட்டங்களில் கலெக்டராகவும் பதவி வகித்தான். இவன் கவர்னராக இருந்த காலத்தில் பல புது மாற்றங்கள் சென்னையின் ஆட்சிமுறையில் ஏற்பட்டன. இவற்றில் முதலாவதாகக் குறிக்கப்படவேண்டியது ரயத்வாரி முறை (Ryotwari System). தமிழ்நாட்டில் மக்கள் ஆங்கிலம் பயில வேண்டும் என்று, ஆங்கிலம் போதிக்கும் பள்ளிக்கூடங்களை முதன் முதல் நிறுவிய கவர்னர் இவன். போக்குவரத்து வசதிக்காக சென்னையில் முக்கியமான பாதைகளை நிறுவியவனும் இவனே.

1827-ஆம் ஆண்டு மன்ரோ இறந்த பிறகு லஷிங்டன் (Lushington), ஏடம் (Adam). ரசல் (Russel) என்ற மூவர் 1837-ஆம் ஆண்டுவரை சென்னையின் கவர்னராக இருந்

தனர். இவர்கள் காலத்தில் தமிழ் நாட்டில் ஆங்கில முறைக் கல்வி வேரூன்றியது. இவர்களுக்குப் பிறகு வந்த எல்பின்ஸ்டன் (Elphinstone) கவர்னர் காலத்தில், சென்னை கிண்டி கவர்னர் மாளிகையும், உதகமண்டல கவர்னர் மாளிகையும் கட்டப்பட்டன. தனது காரியதரிசிகளோடு முதன் முதல் உதகமண்டலத்திற்குக் கோடை வாசத்திற்குச் சென்ற கவர்னர் இவன் ஆகும். இன்னும், சென்னை மாநிலக் கல்லூரி, கிறிஸ்துவக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம் இவை யாவும் ஓரளவு இயங்கத் தொடங்கியதும் இவன் காலத்தில்தான்.

1854-ஆம் ஆண்டு கவர்னர் பதவி ஏற்ற லார்ட் ஹேரிஸ் (Harris) சென்னையில் ஆண்ட கடைசி கம்பெனி கவர்னர் ஆகும். சென்னையில் கர்நாடக நவாப்புக்குச் சொந்தமான சேப்பாக்கம் மாளிகை, இவன் காலத்தில் ஆங்கிலேயருக்குச் சொந்தமானது. இந்தியர்களின் கல்வி விஷயத்தைப் பற்றி 1854-ஆம் ஆண்டு கம்பெனியின் தலைவர்களால் (Board of Directors) ஒரு பெயர்பெற்ற அறிக்கை பிரகடனம் செய்யப்பட்டது. அதைச் சென்னையில் அமலுக்குக் கொண்டு வருவதற்காக ஹேரிஸ் அரும்பாடு பட்டான். இதை ஒட்டி சென்னைப் பல்கலைக்கழக முதல் சட்டம் 1857-ஆம் ஆண்டு அமலுக்கு வந்தது.

1857க்குப் பிறகு ஆங்கிலேய அரசனால் நியமிக்கப் பட்ட கவர்னர்கள் சென்னையை ஆண்டார்கள். இவர்களில் ஒருவனை சர். வில்லியம் டெனிசன் (William Denison) காலத்தில் சென்னை உயர்நீதிமன்றம் ஏற்பட்டது, 1866 ஆம் ஆண்டு கவர்னரான லார்ட் நேப்பியர் (Napier) காலத்தில் சென்னை மத்தியத் தபால் நிலையம், மாநிலக் கல்லூரி கட்டிடம், மராமத்துக் கட்டிடம், செனட் கட்டிடம் என்ற அழகான கட்டிடங்கள் கட்டப்பட்டன. 1853-ஆம் ஆண்டில் தொடங்கிய ரயில்வே கம்பெனி வளர்ச்சியுற்றதும் லாட் நேப்பியர் காலத்தில்தான். 1876-ஆம் ஆண்டு ஏற்பட்ட

கஞ்சித்தொட்டிப் பஞ்சத்தில் மக்களுக்கு மிகுந்த உதவி செய்ய முன் வந்தவன், அக்காலத்தில் கவர்னராக இருந்த பக்கிங்காம் பிரபு என்பவன். அவன் பெயர் பெற்று விளங் கும் பக்கிங்காம் கால்வாய், பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு வேலை தருவதற்காகவே வெட்டப்பட்டது. மேலும் சென்னைத் துறைமுகம் இவன்காலத்தில்தான் ஏற்பட்டது.

32. ஆங்கிலேயர் செய்த சீர்திருத்தங்கள்.

ஆங்கிலேயருக்கும், தமிழ் மக்களுக்குமிடையே பல போர்கள் நடந்துகொண்டிருந்த காலத்திலேயே ஆங்கிலேயர் பல சீர்திருத்தங்களை நாட்டின் அரசாட்சியில் கொண்டு வந்தார்கள். தளகர்த்தர்களும், சிப்பாய்களும் தங்கள் வேலையை ஒருபுறம் செய்ய, கவர்னர்களும், கவர்னர் ஜெனரல்களும் அரசாட்சி வேலையை மறுபுறம் கவனித்துக் கொண்டார்கள். இந்த அரசியல் சீர்திருத்தங்களில் தமிழ் நாடு சம்பந்தப்பட்டவரையில் சிலவற்றைப்பற்றி ஈண்டு குறிப்போம். இவற்றுள் முதலாயது கார்ன்வாலிஸ் செய்த "நிரந்தரமான நிலவரித்திட்டம்" (Permanent Revenue Settlement) என்பது. கார்ன்வாலிஸ் 1786-ம் ஆண்டு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டான். அவனுடைய சீர்திருத்தங்களில் முதன்மையானது இந்த நிலவரித் திட்டமாகும். இதனால் ஆங்கிலக் கம்பெனியார் நிரந்தரமான நிலவரி வருமானத்தைப் பெற்றார்கள். இது வங்காளத்தில் முதலில் அமுலுக்கு வந்தது எனினும், சீக்கிரத் திலேயே ஆங்கிலேயருக்குச் சொந்தமான எல்லா இடங் களிலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. கார்ன்வாலிஸ் நீதி மன்றங்களைத் திருத்தியமைத்தான். அவைகளை உயர் மன்றங்கள், மாகாண மன்றங்கள், மாவட்ட மன்றங்கள், நகர மன்றங்கள், முன்சிபல் மன்றங்கள் எனப் பலவகை மன்றங்க ளாகப் பரித்தான். H. D. கோல்புரூக் என்பவர் எழுதிய "இந்துச்சட்டம்" என்ற நூலையும், சர். வில்லியம் ஜோன்ஸ் எழுதிய "முகமதியச் சட்டம்" என்ற நூலையும் ஆதரித்

தான். போலீஸை நிறுவினன். கம்பெனி நிர்வாகத்தைச் சீர்திருத்தும்பொருட்டு கம்பெனியின் ஆங்கில அலுவலாளர் களின் சம்பளத்தை உயர்த்தினன். கம்பெனி நிர்வாக முறைகளை வகுத்துத் தொகுத்து வெளியிட்டான். ஆயினும் கார்னவாலிஸ் நினைத்தபடி ஆட்சிமுறை உயரவில்லை. அதற்கு முக்கியக் காரணம் கார்ன்வாலிஸ் கம்பெனியின் இந்திய அலுவலாளர்களைக் கவனியாமல் விட்டுவிட்டது. ஆங்கில உத்தியோகஸ்தர்களுக்கும் இந்திய உத்தியோகஸ்தர்களுக்கு மிடையே இவ்விதமாகப் பெரும் வித்தியாசம் ஏற்பட்டது. இது கார்ன்வாலிஸ் சீர்திருத்தத்தில் ஒரு பெரும் குறை யாகும். அவர் அன்று இட்ட வித்து இன்றும் நாட்டை விட்டு நீங்கவில்லை. உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும், சாதாரண உத்தியோகஸ்தர்களுக்கு மிடையே உள்ள சம்பளக்குறைவுக்கு ஒருவிதத்தில் கார்ன்வாலிஸின் சீர் திருத்தமே காரணமென்று நாம் சொல்லக்கூடும்.

லார்ட் பென்டிங் சென்னைக் கவர்னராக இருந்தபோது ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்தைப்பற்றி முன் இயலில் குறித்தோம். அப்போது சென்னை ஆங்கிலேயப் படைக்கு தள கர்த்தராயிருந்த சர். ஜான் கிரடாக் என்பவன் சிப்பாய்கள் முகத்தைச் சவரம் செய்துகொள்ள வேண்டுமென்றும், தான் கொடுக்கும் ஒரு நூதனமான தலைப்பாகையையே அணிந்து கொள்ளவேண்டுமென்றும் ஆணை பிறப்பித்தான். இதனல் தான் கலகம் விளைந்தது. சுமார் நூறு ஆங்கிலேயரும் முந்நூறு இந்தியச் சிப்பாய்களும் இந்தக் கலகத்தின் விளை வாக மாண்டனர். அதனல் அப்போதையக் கவர்னர் ஜெனரல் இந்த ஆணைகளை நீக்கினதுமன்றி, கவர்னரையும், தளபதி யையும் வேலையினின்றும் நீக்கினன். கவர்னர் வேலையி லிருந்து நீக்கப்பட்ட லார்ட் பென்டிங் 1828-ம் ஆண்டு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டான். இது ஒரு விதத்தில் விந்தையே ஆனலும், மனிதரின் மனப் பான்மை காலத்தில் எப்படி மாறுகிறது என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஏனென்றல், அவர் கவர்னர் ஜெனரல்

பதவியிலிருந்த ஏழு வருட காலமும் இந்தியாவுக்காகப் பெரிதும் உழைத்துச் சிறந்த சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொணர்ந்தார். இந்தியாவின் கல்வி முன்னேற்றத்திற்கு அடிகோலியவர் பென்டிங் என்று சொன்னால், அவர் பெருமைக்கு அதைத் தவிர வேறு சான்று வேண்டியதில்லை. அவருடைய காலத்தில்தான் மெக்காலே என்பவருடைய கல்வி அறிக்கை எழுதப்பட்டது (1835).

கி. பி. 1848-ம் ஆண்டு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக ஜேம்ஸ் ஏன்ட் ரூ ப்ரவுன் ரேம்ஸே டல்ஹௌஸி வந்து சேர்ந்தான். இவனுடைய பெயர் பெற்ற சீர்திருத்தங்களில் முக்கியமானவை இரயில் பாதை அமைத்தது,' தந்தி தபால் முதலிய வசதிகளை ஏற்படுத்தியது, வாய்க்கால்களை வெட்டியது, பாதைகள் அமைத்தது ஆகியவையாகும். இவனுடைய திட்டத்தின்கீழே 1856-ல் சென்னையில் முதன்முதல் இருப்புப்பாதை அமைக்கப்பட்டது. இதேபோல் தந்திகள் அமைக்கப்பட்டன. தபால் கட்டணங்கள் உள்நாட்டுக்கு அரையணு, காலணுவாக மிக எளிய மக்களுக்கும் பயன்படும்படி விதிக்கப்பட்டன. உலகத்திலேயே முதல் இருப்புப்பாதை கி. பி. 1825-ல்தான் ஏற்படுத்தப்பட்டது என்பதையும், இங்கிலாந்தில் தபால்முறை 1840-ல்தான் அமுலுக்கு வந்தது என்பதையும் யோசித்தால், டல்ஹௌஸி எவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு வசதிகளைச் செய்து முடித்திருக்கிறுரென்று தெற்றெனு விளங்கும். இன்னும் இவர் காலத்தில் பொறிவல்லுநர்கள் தோன்றினுர்கள். கால்வாய்களும், பாலங்களும், பாதைகளும் அமைக்க மராமத்து இலாகா (P. W. D.) முதன் முதலில் ஏற்படுத்தப்பட்டது. காவிரி, கொள்ளிடம் அணைக்கட்டுகள் இப்போதுதான் கட்டப்பட்டன. கல்கத்தா, பம்பாய், சென்னைப் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டதும் இவர் காலத்திலேயே.

டல்ஹௌஸியின் ஆட்சிக்குப் பிறகு இந்தியாவில் சிப்பாய்க் கலகம் ஏற்பட்டது (1858). அப்போது சென்னையில் கொடிய செயல்கள் செய்த நெய்ல் துரை லக்னே வீதி

யிலே கலகக்காரரால் சுட்டுக் கொல்லப்பட்டான். சிப்பாய்க் கலகத்தின் பயனுக. இந்திய அரசு ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து பறிக்கப்பட்டு, இங்கிலாந்து அரசுக்குச் சொந்தமாக்கப்பட்டது. அப்போது இங்கிலாந்தை ஆண்டு வந்த விக்டோரியா மகாராணி 1858-ம் ஆண்டு, நவம்பர் மாதம், முதல் தேதி இந்திய அரசைத் தாமே ஏற்றுக்கொள்வதாகப் பிரகடனம் செய்தாள். அதில் தம்முடைய இந்தியக் குடிகள் சுகமாக இருக்க வேண்டுமென்றும், எல்லா உத்தியோகங்களுக்கும் இந்தியர் அருகராகக் கருதப்பட வேண்டுமென்றும், அவர்கள் தங்கள் பழைய வழக்கங்கள், மதாச்சாரங்கள் என்ற இவற்றில் பூரண சுதந்திரத்தோடு வாழ வேண்டுமென்றும் தெரிவித்தாள். ''அவர்கள் வாழ்வு எங்கள் வலிமை; அவர்கள் திருப்தி எங்கள் ஊக்கம்; அவர்கள் நன்றி எங்கள் வெகுமதி.'' என்று அழகாக முடியும் இந்தப் பிரகடனம் தமிழ் நாட்டிற்கும், இந்தியாவிற்கும் ஒரு புது வரலாற்றைத் தொடங்கித் தந்தது.

கி. பி. 1876-ல் மழைக் குறைவின் காரணமாக நாடெங்கும் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது வைசிராய்ப் பதவி வகித்தவர் லிட்டன் பிரபு என்பவர். பஞ்சத்தோடு காய்ச்சலும், வாந்திபேதியும் மக்களை வாட்டின. இப் பஞ்சம் தமிழ் நாட்டில் இரண்டாண்டு காலம் நீடித்தது. அரசாங்கம் மக்களுக்கு உதவியாகத் தொட்டிகளிலே கஞ்சி வார்த்தனர். இதற்காகப் பதினறு கோடி ரூபாய் செலவு செய்தார்களென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. லிட்டன் பிரபு, தாமே சென்னைக்கு வந்து பஞ்ச நிவர்த்தி வேலைகளில் ஈடுபட்டார். இந்தப் பஞ்சத்தையே தமிழ் நாட்டில் 'கஞ்சித் தொட்டி பஞ்சம்' என்று வழங்கலாயினர். லிட்டன் பிரபு தற்காலிகமாக மட்டுமல்ல; பூரணமாகவே பஞ்சத்தை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணத்தால், 1878ம் ஆண்டு சர். ரிச்சர்ட் ஸ்டேரச்சி என்பவரின் தலைமையின் கீழ் ஒரு பஞ்ச நிவாரணக் கமிட்டியை நியமித்தார். அதன் சிபாரிசுகளைப் பின்பற்றி

1883ம் ஆண்டு இந்தியாவின் பஞ்சகாலச் சட்டங்கள் (Indian Famine code) என்ற ஒரு சட்டத் தொகுதியை அரசாங்கத்தார் வெளியிட்டதுமன்றி, பஞ்ச நிவாரண வேலைகளுக்காகவும், இரயில் பாதைகள் அமைக்கவும், வாய்க்கால்கள் வெட்டவும் ஆண்டொன்றுக்கு ஒன்றரைக்கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்றும் உத்திரவு பிறப்பித்தனர். ஆயினும் பஞ்சம் இந்தச் சட்டங்களை வென்றது .1895-ம் ஆண்டு ஒரு பெரும் பஞ்சம் மீண்டும் இந்தியாவில் ஏற்பட்டது. ஏறக்குறைய ஐம்பது இலட்சம் மக்களுக்கு அரசாங்கமே உணவு அளிக்க வேண்டியதாயிற்று. 1898ம் ஆண்டு சர். ஜேம்ஸ் லயால் என்பவரின் தலைமையின் கீழ் மற்றொரு பஞ்சநிவாரணக் குழு அமைக்கப்பட்டது. ஆனால் இந்தக்குழு அதன் சிபாரிசுகளை அரசாங்கத்தாருக்குச் சமர்ப்பித்த சமயத்திலேயே முந்திய பஞ்சங்களைவிட மிகப்பெரிய பஞ்சம் ஒன்று ஆரம்பித்தது. இதனால் சென்னை மாகாணம் அதிகமாகப் பாதிக்கப்படாவிட்டாலும் இந்தியாவில் இதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை 50 இலட்சம் என்றும், இதனால் அரசாங்கத்துக்கு ஏற்ப்பட்டசெலவு 60 இலட்சம் பவுன் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. ஒன்றுக்கு மூன்று பஞ்சங்கள் நாட்டில் நிலவியும் அரசாங்கத்தார் சலிக்கவில்லை. அவர்கள் மறுபடியும் ஒரு பரிசீலனைக் குழுவை நியமித்தார்கள். இதற்குத் தலைமை தாங்கியவர் சர். அந்தோணி மெக்டோனல் என்பவர். இதன் சிபாரிசுப்படி பஞ்சம் ஏற்படுவதற்கு முன்னமேயே நில வரியைக் குறைத்தோ அல்லது கடன்கள் வழங்கியோ பஞ்சம் வராமல் தடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இதிலிருந்து பஞ்சமும் ஒருவாறு நீங்கினது.

நிலவரி தவிர, வருமான வரி (Income Tax) என்ற புதுவரி ஆங்கிலேய அரசாங்கத்தாரால் முதன் முதல் 1862-ம் ஆண்டு விதிக்கப்பட்டது. இதற்குக் காரணம், பஞ்சநிவாரணத் தாலும், மற்ற மராமத்து வேலைகளாலும் இந்திய சர்க்கார் 1857 முதல் 1861 வரை உள்ள ஐந்து ஆண்டு காலத்

தில் 36 கோடி ரூபாய் செலவு செய்திருந்தார்கள். இப்படி வரிகள் உயர்ந்து வருமானமும் உயர்ந்தபோது சிலவற்றை மாகாணங்களுக்குத் தனியாக ஒதுக்கி வைக்கும் வழக்கம் இப்பொழுதுதான் ஏற்பட்டது. உதாரணமாக 1872-76 ஆண்டுகளில், வருமானவரி, ஆங்கிலேயச் சாமான்களின் இறக்குமதி வரி என்ற இவை போன்றவை மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்டன.

இந்தியாவை ஆண்ட ராஜப் பிரதிநிதிகளில் மிக முக்கிய மானவர்கள், லார்டு ரிப்பனும், லார்டு கர்ஸனும் ஆவர். இவர்கள் காலத்தில் இந்திய வாணிகத்திற்கும், ஆலைத் தொழிலுக்கும் அடிகோலப்பட்டது. ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகளின் நன்மைகளைக் கோரி கி. பி. 1881-ம் ஆண்டு முதல் 'ஆலைச்சட்டம்' (First Factory Act) நிறைவேறியது. இதன்படி ஏழு வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஆலை வேலைக்குச் சேர்க்கக் கூடாதென்றும், ஏழு வயதிலிருந்து பன்னிரெண்டு வயதுக்குட்பட்டவர்கள் ஒரு நாளைக்கு 9 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யக்கூடாதென்றும் நியதி ஏற்பட்டது. இதற்குப் பிறகு 1891, 1934, 1938, என்ற ஆண்டுகளில் பெண்களுக்கு உதவி அளிக்கும் ஆலைச் சட்டங்கள் அமுலுக்கு வந்தன. லார்டு கர்ஸன் 'ஆலைத் தொழில் வாணிக இலாகா' (Department of Industries and Commerce) என்ற ஒரு இலாகாவை ஏற்படுத்தி, இந்தியரின் ஆலைத் தொழில் முயற்சிகளுக்கெல்லாம் உதவி புரிந்தான். குடியானவர்களுக்கு உதவியாயிருக்கும் பொருட்டு, கூட்டுறவுச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தவனும், விவசாய ஆராய்ச்சி நிலையத்தை பூசாவில் தொடங்கி வைத்தவனும் இவனே. கால் நடைகளின் அபிவிருத்திக்காக அண்மையில் வைசிராயாயிருந்த லின்லித்கோ பிரபு எவ்வளவு ஊக்கம் காட்டினர் என்பது பலர் அறிந்ததொன்று. கி. பி. 1925 - 34 என்ற இந்த ஒன்பது ஆண்டுகாலத்தில் தமிழ் நாட்டுக்கு மிகுந்த பயனளிக்கும் மேட்டூர் அணை, பைக்காரா திட்டம் என்ற இவை இரண்டும் அமலுக்குக் கொண்டு வரப்பட்டன.

இனி, சமூகச் சீர்திருத்த விஷயங்களில் 'சதி' (Sati) அல்லது 'உடன்கட்டை ஏறுதல்' என்னும் பழக்கம் பென்டிங் காலத்தில் ஒழிக்கப்பட்டதுபோல், குழந்தை விவாக ஒழிப்பு இர்வின் பிரபு வைஸ்ராயாயிருந்த காலத்தில் ஏற்பட்டது (1929). இதைப் பற்றிய சட்டம் அதற்குப் பெரிதும் காரணமாயிருந்த சாரதா என்பவர் பெயரை ஒட்டி 'சாரதாச் சட்டம்' என்று அழைக்கப்பட்டது. அது 1938-ல் இந்தியா வெங்கும் அமலுக்குக் கொண்டுவரப்பட்டது.

கல்வி விஷயத்திலேயும் ஆங்கிலேய ராஜப் பிரதிநிதிகள் மிகவும் ஊக்கம் காட்டினுர்கள். கி. பி. 1882-ல் ரிப்பன் பிரபு ஹன்டர் என்பவனின் தலைமையின்கீழ், கல்வியைப் பற்றிய குழு ஒன்றை நியமித்தான். இக்காலத்தில் மாவட்ட அலுவலகங்களும் நகராட்சி மன்றங்களும் புதிதாய் ஏற்பட்டன. இவை ஆரம்பக்கல்வி விஷயத்தில் மிகுந்த ஊக்கமும், ஆதரவும் காட்டவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. உயர்தரப் பள்ளிகள் விஷயத்தில் அரசியலார் போதிய உதவி செய்ய வேண்டுமென்றும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாதிரிப் பள்ளிக்கூடம் (Model School) அரசியலாரால் நடத்தப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. பள்ளிக்கூடங்களுக்கு அரசியலார் உதவி (Grant-in-Aid) உறுதியாக ஏற்பட்டது ரிப்பன் காலத்தில்தான். லிட்டன் காலத்தில் ஏற்பட்ட பத்திரிகைச் சட்டம் நீக்கப்பட்டுச் சுதேசப் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு அடிகோலப்பட்டதும் இவன் காலத்திலேதான்.

1901-ம் ஆண்டில் கல்வித்துறை வல்லுநர்கள் (Educational Experts) சிம்லாவில் கூடினர். இதற்குப் பிறகு சர். தாமஸ் ராலே என்பவன் தலைமையின் கீழ் ஒரு பல்கலைக்கழகக் குழுவை (University Commission) கர்ஸன் நியமித்தான். இதன் பயனுகக் கி. பி. 1904-ம் ஆண்டில் இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் உருவாகியது. இதனுல் பல்கலைக்கழகங்களின் உரிமை ஓரளவு பாதிக்கப்பட்டதெனினும், அவற்றின் வளர்ச்சி குன்றவில்லை. கி. பி.

1916-க்கும் 1929-க்கும் இடையே மைசூர், ஐதராபாத் (உஸ்மானியா), முதலிய 16 பல்கலைக் கழகங்கள் எழுந்தன. கி. பி. 1917-ல் ஏற்படுத்தப்பட்ட சேட்லர் (Sadler) குழு இதற்குப் பேருதவியாய் நின்றது. பல்கலைக் கழகங்களுக் கிடையே தொடர்பு ஏற்படுமாறு, "இன்டர்-யூனிவர்சிட்டி போர்ட்" ஒன்று கி. பி. 1925-ல் நிறுவப்பட்டது. கி. பி. 1926-ல் ஆந்திரப் பல்கலைக் கழகமும், 1929-ல் அண்ணு மலைப் பல்கலைக்கழகமும் எழுந்தன. கி. பி. 1937-ம் ஆண்டில் திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப் பட்டது.

வரலாற்று ஆராய்ச்சிக்கு உதவியாகக் கி. பி. 1870-ம் ஆண்டு, இந்தியாவின் தொல்பொருள் ஆராய்ச்சி இலாகா (Archaeological Dept.—Archaeological Survey of India) நிறுவப்பட்டது. கி. பி. 1904-ல் பழங்காலச் சரித்திரச் சின்னங்களின் பாதுகாப்புச் சட்டம் (Ancient Monuments Preservation Act.) என்ற ஒரு சட்டம் செயல் முறைக்குக் கொண்டுவரப்பட்டது. கி. பி. 1902-ல், சர். ஜான் மார்ஷல் இந்த ஆராய்ச்சிக்குத் தலைவராக (Director General of Archaeology) நியமிக்கப்பட்டான். இவற்றிலெல்லாம் கர்ஸன் பிரபு காட்டிய ஊக்கம் மிகப் பெரியது.

33. விடுதலை உணர்ச்சி

மனிதன் தன் வாழ்க்கையின் உச்சியைத் தொடும்போது தான் அவனுடைய கீழ்நோக்கிய வாழ்க்கையும் தொடங்கு கிறது. இது இயற்கையின் ரீதி. அதற்கு ஆங்கிலேய அரசாங்கம் விதிவிலக்காக இருக்கவில்லை. ஆங்கிலேய இந்திய வரலாற்றிலே 19-ம் நூற்றுண்டின் கடைசிப் பகுதி அவர்கள் இந்தியாவில் அடைந்த உயர்வைத் தொட்டுக் காட்டுகின்றது; கி. பி. 1880-ம் ஆண்டு லார்டு ரிப்பன் என்பவர் இந்தியாவின் ராஜப்பிரதிநிதி ஆனுன். அவனுடைய நான்கு ஆண்டு ஆட்சியின் காலத்திலே நமக்கு நிகழ்ந்த நன்மைகள் பலப்பல. ஆனுல் அவனுடைய ஆட்சியின் காலத்

தில்தான் இந்தியர்களுடைய விடுதலை உணர்ச்சியும் காங்கிரஸ் சபையின் மூலம் உருப்பெற்றது. அதோடு பொது நல நாட்டம்கொண்ட பல சங்கங்கள் ஏற்பட்டு, அவையெல்லாம் காங்கிரஸ் என்ற சபையின்கீழ் இயங்கத் தொடங்கின. இவ்விதமாக விடுதலை உணர்ச்சி உருப்பெற்றது ஏறக்குறைய ரிப்பன் வைஸ்ராயாயிருந்த நான்கு ஆண்டுகளிலாகும்.

அக்காலத்தில் சென்னையிலிருந்த வி. கிருட்டிணசாமி ஐயர், ஜஸ்டிஸ் மணி ஐயர் என்ற இவர்களுடைய யோசனையின் பேரில் கி. பி. 1885-ல் காங்கிரஸின் முதற்கூட்டம் கூடிற்று. அப்பொழுது வைஸ்ராயாயிருந்த டவ்ரின் பிரபு இதைப்பற்றிக் குறிப்பதைப் பார்த்தால் தொடக்கத்திலேயே காங்கிரஸ் கட்சி சாத்மீகமான முறையையே கையாண்டது என்பது புலப்படும். டவ்ரின் பிரபு பம்பாயில் கூடிய முதல் காங்கிரஸ் கூட்டத்தைப் பற்றிப் பின்வருமாறு குறிக்கின்றான்: "நான் கண்ட இந்தியரில் அநேக அறிவாளிகள் இருக்கின்றார்கள். அவர்களோடு ஒத்துழைப்பதிலும் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு நடப்பதிலும் எவ்விதக் குறையுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் நம்முடனிருந்து ஊக்கம் தருவார்கள்." அதே சமயத்தில் அப்போது நாடெங்கும் காணப்பட்ட விடுதலை உணர்ச்சியைப்பற்றி அவனே பின் வருமாறு குறிக்கின்றான்: "கொந்தளிக்கும் சமுத்திரத்தின் மத்தியிலே தனித்து நிற்கும் இந்தப் பாறைக்கு (இந்தியாவில் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு) இந்திய அறிவாளிகளின் யோசனை ஒரு பெரும் ஆதரவை அளிக்கும்." கிருட்டிணசாமி ஐயர், மணி ஐயர் போன்றவர்கள் எண்ணம் ஆங்கில அரசாங்கத்தை நேர்முகமாக எதிர்க்க வேண்டுமென்பதில்லை; அதிலே ஒரு இடம் பெற்றுக் கொண்டு அதன்மூலம் அதை நாட்டினின்று நீக்க வேண்டுமென்பதே அவர்கள் கொண்ட எண்ணம். இந்தக் கட்டத்தை மாற்றி அமைத்ததில் தலைமை பூண்டவர் பாலகங்காதர திலகர் (1886 - 1919).

"சுயராஜ்யம் நமது பிறப்புரிமை," என்ற ரத்தினச்சுருக்கமான தேசீய வாக்கியத்தை எல்லோருடைய மனத்திலும் முதன் முதல் பதித்தவர் அவரே. இதன் பயனாக காங்கிரஸிலே பிளவு ஏற்பட்டது. ஆயினும், திலகரும் அவருடன் சேர்ந்தவர்களும் தங்கள் கொள்கைகளை விட்டுக் கொடுக்கவில்லை. இந்த நிலைமையை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயர் தீவிரவாதிகளை நாடு கடத்தவும், சிறையிலடைக்கவும் முற்பட்டனர். அப்பொழுது அரவிந்த கோஷ் புதுவையில் அடைக்கலம் புகுந்தார். திலகருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிய வ. உ. சிதம்பரனார், திலகரின் கொள்கைகளைத் தென்னாட்டில் பரப்பத் தீவிரமாக முயன்றார். திருநெல்வேலியிலும், தூத்துக்குடியிலும் சர்க்கார் கட்டடங்கள் தீக்கிரையாயின. ஆங்கிலேய வியாபாரிகளின் வியாபாரத்தை ஒடுக்க, சிதம்பரனார் தாமே ஒரு கப்பல் கம்பெனியை நிறுவினார். அதன் பயனாய் கோயம்புத்தூர்ச் சிறையிலே அவர் செக்கிழுக்கத் தண்டிக்கப்பட்டார்.

1909-ம் ஆண்டு ஆங்கிலேயர் இந்தியாவின் அரசியலிலே ஒரு மாறுதலை வழங்கினார்கள். அப்பொழுது லார்டு மார்லி இந்திய செக்ரடரியாகவும், மின்டோ பிரபு வைசிராயாகவும் இருந்தனர். இவ்விருவரும் சேர்ந்து இந்த மாறுதல்களை அமலுக்குக் கொண்டு வந்தபடியால், இவற்றிற்கு 'மார்லி-மின்டோ' சீர்திருத்தங்கள் என்ற பெயர் ஏற்பட்டது. இதன்படி மத்திய அரசாங்கச் சபையிலும், மாகாண சட்ட சபையிலும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இடமளிக்க வேண்டுமென்றும், இந்திய செக்ரடரியின் ஆலோசனை சபையில் இரண்டு இந்தியர்களும், ராஜப்பிரதிநிதி ஆலோசனை சபையிலும், சென்னை, பம்பாய் கவர்னர் ஆலோசனை சபைகளிலும் ஒவ்வோர் இந்தியர் நியமிக்கப்படலாமென்றும் தீர்மானமாயிற்று. ஆனால் இந்தச்சீர்திருத்தங்கள் இந்திய மக்களுக்குத் திருப்தி அளிப்பதாக இல்லை. நிலைமை இவ்வாறு இருக்க 1914-ம் ஆண்டு முதலாம் உலகப் போர் தொடங்கியது. அப்பொழுது இந்தியாவினுடைய

உதவி ஆங்கிலேயருக்குத் தேவையாயிற்று. ஆகையால் இந்தியாவுக்குப் படிப்படியாய் சுய ஆட்சி வழங்குவதே ஆங்கிலேய அரசின் முடிவு என்றும், சண்டை முடிந்தவுடன் அரசியல் சீர்திருத்தங்களை வழங்குவதாகவும் ஆங்கிலேயர் வாக்களித்தனர். அதன்படி 1919-ம் ஆண்டு ஒரு சட்டம் அமலுக்கு வந்தது. இதன்படி மத்திய சர்க்காரை அப்படியே விட்டுவிட்டு மாகாணங்களில் பொறுப்பாட்சியை முதலில் தொடங்குவதென்றும், நகராட்சி மன்றம் முதலிய ஸ்தாபனங் களைப் பொது மக்களே நடத்தும்படி விட்டுவிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளில் சிலரை மந்திரிகளாக நியமிப்பதென்றும் தீர்மானமாயிற்று.

34. தமிழ் நாடும் விடுதலே உணர்ச்சியும்

கி. பி. 1800-லிருந்து ஏறக்குறைய 145 ஆண்டு விடுதலே உணர்ச்சி நம் நாட்டில் வலுப்பெற்று வந்தது. இந்த நீண்ட காலத்தை மூன்று பாகமாகப் பிரித்தால், இந்த உணர்ச்சியின் வளர்ச்சி நமக்கு ஒரு விதமாகத் தெரியவரும். கி. பி. 1800 - முதல் 1858 - வரை விடுதலே உணர்ச்சி நம் நாட்டில் உருக்கொண்டது. 1858-ல் அதுவே ஒரு இயக்க மாக மாறியது. 1900-ல் இவ்வியக்கம் உச்சநிலேயை அடைந்து, 1947-ல் வெற்றி பெற்றது.

காங்கிரஸ் இயக்கம் தொடங்கு முன்னரே, இந்து, சுதேச மித்திரன் என்ற தேசியப் பத்திரிகைகள் முறையே, 1878-லும் 1882-லும் சென்னேயில் ஆரம்பிக்கப்பட்டன. 1881-லேயே ஜி. சுப்பிரமணிய ஐயர், அரங்கைய நாயுடு முதலியோர் விடுதலே இயக்கத்தில் சேர்ந்து உழைத்தார்கள். 1885-ல் பம்பாயில் கூடிய முதல் காங்கிரஸ் மாநாட்டிற்கு அனந்தாச்சாரலு என்பவர் தென்னுட்டின் பிரதிநிதியாகச் சென்றிருந்தார். அவரே மக்களின் சுதந்திர உணர்ச்சியைப் பெருக்குவதற்காக வைஜயந்தி என்ற ஏடு ஒன்றையும் நடத்தி வந்தார். 1891-ல் நாகபுரியில் நடந்த ஏழாவது காங்கிரஸ்

மாநாட்டுக்குத் தலைமை வகித்தவரும் இவரே. 1917-ல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸின் 32-வது மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் சென்னையிலே வாழ்ந்து வந்த அன்னி பெஸன்ட் அம்மையார் ஆகும். அவர் தோற்றுவித்த ஹோம்ரூல் இயக்கமும், நியூ இந்தியா, காமன்வீல் என்ற சுதந்திர ஏடுகளும் தமிழ் நாட்டில்தான் முதன் முதல் பிறந்தன. விஜயராகவாச்சாரியார், எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் முதலியோர் நம் விடுதலை இயக்கம் உச்சநிலையை அடைந்த காலத்தில் பெரும் சேவை செய்துள்ளார்கள். இவர்கள் முறையே நாகபுரி, கௌஹட்டி காங்கிரஸ் மாநாடுகளுக்குத் தலைமை வகித்தார்கள். 1920-ம் ஆண்டில் ஸ்ரீனிவாச ஐயங்கார் அவர்கள், விடுதலை உணர்ச்சியை நாடுதோறும் பரப்புவதற்காகக் கிராமம் கிராமமாகச் சென்று பிரசாரம் செய்யும் ஒரு இயக்கத்தைச் சென்னையிலே தோற்றுவித்தார்.

இப்போது நாம் எல்லோரும் போற்றும் சி. சுப்பிரமணிய பாரதியாரும், வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களும், சிதம்பரம் பிள்ளையோடு சேர்ந்திருந்த சுப்பிரமணிய சிவா என்பவரும் தமிழ் நாட்டில் தோன்றி விடுதலைக்காகப் பெரும் பணி செய்தார்கள். 1904-ம் ஆண்டிலே பாரதியார் சுதேசமித்திரன் உதவி ஆசிரியராக மதுரையிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டார். அப்பொழுது சிதம்பரனாரும் காங்கிரஸ் மாசபையில் சேர்ந்து பணியாற்ற ஆரம்பித்தார். 1908-ம் ஆண்டு தேசாபிமானச் சங்கம் என்ற ஒரு சங்கத்தைச் சிதம்பரனார் திருநெல்வேலியில் தோற்றுவித்தார். அதே ஆண்டு பாரதியார் தம் வேலையை இன்னும் அதிகத் துணிவோடு செய்யச் சென்னையைவிட்டுப் புதுவைக்குப் போனார். ஆங்கிலேயரை இந்தியாவினின்றும் துரத்துவதற்குச் சிறந்த வழி அவர்கள் வாணிகத்தைத் தாக்குவதே என்று கண்ட சிதம்பரனார், கதர் இயக்கம் தொடங்கா முன்னரே 'அன்னியர் துணிக்கண்டனம்' என்பதைத் தோற்றுவித்தார். இந்தக் கருத்தைப் பின்பற்றியே அவர் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தூத்துக்குடியில் நிறுவினர். இன்னும்

இவரோடு சேர்ந்த சுப்பிரமணிய சிவா, வாஞ்சி ஐயர், பரலி சண்முகசுந்தரம் பிள்ளை, வ. வே. சு. ஐயர் ஆகிய இவர்கள் எல்லாம் தமிழ் நாட்டில் தோன்றிய சுதந்திர வீரர்களாகும். வாஞ்சி ஐயர் ஏழு ஆண்டுகள் சிறைவாசம் அடைந்தார். சிதம்பரனார் செக்கிழுக்க அனுப்பப்பட்டார். அப்பொழுது பரலி சண்முகசுந்தரம் பிள்ளை 'வந்தேமாதரம்' என்ற விடுதலை முழக்கத்தைத் தமிழ் நாடெங்கும் பரப்பினர். இக் காரணம் பற்றி இவரை மக்கள், 'வந்தேமாதரம் பிள்ளை' என்றே அழைத்தனர். வ. வே. சு. ஐயர் புதுவை மூலமாக துப்பாக்கி முதலிய மேல்நாட்டுப் போர்க் கருவிகளை தமிழ் நாட்டில் இறக்குமதி செய்வதற்காகப் புதுவையிலிருந்து கொண்டு வேலை செய்து வந்தார்.

இவர்கள் எல்லாம் கால வெள்ளத்திலே மறைந்து போயிருப்பினும், தமிழ் நாடு இவர்களை என்றும் மறக்க முடியாது.

திரு. வி. க. என்று தமிழ் நாட்டார் அன்புடன் அழைத்த திரு. வி. கலியாணசுந்தரனர், பெயர்பெற்ற அரசியல்வாதி யாய்த் திகழ்ந்த திரு. எஸ். சத்தியமூர்த்தி என்ற இருவரும் சமீபகாலம் வரை நம்மோடு வாழ்ந்தவர்கள். திலகர் சிறை சென்றார் என்று கேள்விப்பட்டதும் சென்னையில் ஸ்பென்ஸர் கம்பெனியில் தமக்கு இருந்த வேலையை வேண்டாமென்று உதறிய தமிழ்ப் பெருந் தலைவர் திரு. வி. க. அவர்கள். இவர் "தேச பக்தன்" என்னும் செய்தித் தாளை 1917-ல் தொடங்கி, தமிழ்நாட்டில் தேசபக்தியைத் தூண்டினர்; அரசியலார் "தேச பக்தனை"த் தடைசெய்தபின் "நவசக்தி" என்ற வார இதழை ஆரம்பித்துத், தாம் எடுத்துக்கொண்ட பணியை வழுவாமல் செய்தார். இவர் பல ஆண்டுகள் காங்கிரஸ் சபையில் உறுப் பினராயிருந்தார். திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் வரலாறு பெரும்பாலும் அரசியல் வரலாறேயாகும். இவர் வக்கீலாகப் பதிவு செய்து கொண்டாரே யன்றித் தன் அக்கறை முழுவதையும் தேசத் தொண்டிற்காகவே செலவழித் தார். இவர் 1936-ல் தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டியின்

தலைவரானுர். சென்னையிலும் சரி, டெல்லியிலும் சரி, சட்ட சபைக் கூட்டங்களில் வெள்ளையரும் அஞ்சும்படி வாதாடிய பெருமை இவருக்கு இருந்ததுபோல் தமிழ்நாட்டில் வேறு எவர்க்கும் இல்லை என்றே நாம் கூறலாம். இவர், பேச்சிலே வெகு தீரர். சுயராச்சியக் கட்சியின் சார்பாக இங்கிலாந்திற்கே சென்று பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியவர் திரு. எஸ். சத்தியமூர்த்தி.

நிற்க; சுதந்திர உணர்ச்சியோடு சிறந்த பணியாற்றிய பலர் இன்றும் நம்மோடு இருக்கின்றுர்கள். இவர் ஒவ்வொருவரைப் பற்றியும் நாம் இங்கு எழுதப் புகுவோமானுல் இந்நூல் மிக விரிந்து பெருகும். ஆயினும் இவர்களில் ராஜாஜியை நாம் மறக்க முடியாது. சக்கரவர்த்தி சி. ராஜகோபாலாச்சாரியார் என்ற நீண்ட பெயர் பூண்ட இப்பெரியாரது புகழும் மிக நீண்டதேயாகும். இவர் 1900-ல் வக்கீல் தொழிலை சேலத்தில் ஆரம்பித்து, 1920-ல் தேச விடுதலைக்காக வருவாய் நிறைந்த தமது தொழிலை விட்டுவிட்டுச் சிறைச்சாலையை நாடினுர். அப்பொழுது காந்திஜி தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட உப்பு சத்யாக்ரஹம் அவரைத் தேசப் பணியில் இறங்க வைத்தது. காந்திஜியுடன் நட்புப் பூண்டு அவர் நடத்திவந்த 'யங் இந்தியா" என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராய் விளங்கினுர்; தீண்டாமை இயக்கத்தில் பெரும் பணி ஆற்றினுர்; 1921—22-ல் இந்தியக் காங்கிரஸ் பொதுக் காரியதரிசியாக வேலை செய்தார்; தேச நலனுக்காக மூன்று முறை சிறைவாசமடைந்தார். இத்தகைய பெரியார் இந்தியா சுய ஆட்சி அடைந்தபின் மேற்கு வங்கக் கவர்னராகவும், கவர்னர் ஜெனரலாகவும், மத்திய சர்க்காரின் உள்நாட்டு மந்திரியாகவும், சென்னையின் முதல் மந்திரியாகவும் பணியாற்றியது வியப்பல்ல. ராஜாஜி ஒரு அரசியல் மேதை, சிறந்த அறிவாளி, பல நூல்களின் ஆசிரியர் என்று கூறுவதோடு இந்தியாவிலேயே மதுவிலக்குத் திட்டத்தை முதல்முதல் தொடங்கி, தமிழ் நாட்டிற்கு அந்தப் பெருமையை அளித்தவர்

என்றும் கூறவேண்டும். சென்னையைத் தமிழ்நாடு ஆந்திரத் திற்கோ மத்திய சர்க்காருக்கோ இழக்காமல், தன்னிடமே வைத்துக் காக்கப் பேருதவி புரிந்தவரும் இவரே.

ராஜாஜியோடுகூட இருந்து பணியாற்றியவர்களில் சர்தார் வேதரத்தினம், திரு. டி. கே. சிதம்பரனுர் என்ற இவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். சர்தார் வேத ரத்தினம் அவர்கள் பெயர் வேதாரண்ய உப்பு சத்தியாக்கிர ஹத்தோடும், காந்தி-இர்வின் உடன்படிக்கை காலத்தில் கிராமக் காங்கிரஸ் கமிட்டிகளை ஏற்படுத்தியதோடும் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டது. அஃதேபோல் எஸ். சத்தி மூர்த்தியோடு இருந்து வேலை செய்தவர்களில் முதல் இடம் பெற வேண்டியவர் தற்போது தமிழ் நாட்டின் முதல் மந்திரி யாயிருக்கும் திரு. காமராஜ் அவர்கள். 1920-ஆம் ஆண்டி லிருந்தே திரு. காமராஜ் காங்கிரஸ் தொண்டர் ஆனர். அதன் பிறகு தேசத் தொண்டில் ஈடுபட்டு 6 முறை சிறைவாசம் அடைந்தவர். அவர் மொத்தத்தில் சிறைவாசம் செய்த நாட்கள் 3000. பிறகு தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவராக 14 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பணியாற்றிய பெருமையும் அவருக்கு உண்டு.

35. சுய ஆட்சியின் வருகை

1919-ம் ஆண்டு செய்யப்பட்ட இந்திய அரசியல் சட்டம் 1921-ம் ஆண்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனல் இதனல் நாட்டில் அதிகக் குழப்பம் ஏற்பட்டதே தவிர அமைதி ஏற்படவில்லை. கி. பி. 1928 - 29-ல் சர். ஜான் சைமன் தலைமையின் கீழ் ஏழு பிரிட்டிஷ் பார்லிமெண்ட் உறுப் பினர்களைக் கொண்ட ஒரு கமிஷன் இந்தியாவின் அரசியல் காரியங்களைப் பரிசிலனை செய்ய இங்கு அனுப்பப்பட்டது. ஆனல் இந்தக் குழுவில் இந்தியர் ஒருவருமில்லை என்ற காரணத்தால், மக்கள் இந்தக் கமிஷனை எதிர்த்தார்கள். தமிழ் நாட்டில் பல இடங்களில் "சைமன் குழுவே, வெளியே போ" என்ற கூக்குரல் எழுந்தது. ஏற்கனவே 1925-ம்

ஆண்டு இந்தியருக்குப் பொருத்தமான ஒரு அரசியல் திட்டத்தை இந்தியர்களே வகுத்துத் தரும்படி இந்திய செக்ரடரியாயிருந்த பெர்கனெட் பிரபு ஒரு சவால் விடுத்திருந்தான். அதன்படி பண்டித மோதிலால் நேரு அவர்கள் தலைமையில் காங்கிரஸ் திட்டம் ஒன்றை வகுத்து 1928-ம் ஆண்டு அதை வெளியிட்டது. 1929-ம் ஆண்டு தொழிற் கட்சி மந்திரிசபை இங்கிலாந்தில் அமைக்கப்பட்டது. இந்தப் புது மந்திரிசபை, இந்தியாவை ஆங்கிலேய காமன்வெல்த்துக்குள் ஒரு டொமினியன் ஆக்குவதென்றும், அதை ஆலோசிக்க ஒரு வட்ட மேஜை மாநாடு கூட்டப் போவதாகவும் அறிவித்தது. காங்கிரஸ் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக "முழு சுய ஆட்சியே எங்கள் திட்டம்" என்று பறை சாற்றியது. 1930-ம் ஆண்டு மகாத்மாவின் உப்பு சத்தியாக்கிரகம் ஆரம்பித்தது. 1932-ல் காந்திஜியும், சர்தார் பட்டேலும் சிறைப்பட்டனர். அப்பொழுது வைசிராயாயிருந்த வெலிங்டன் பிரபு கடினமான அடக்குமுறைகளை உபயோகித்தான்.

இது ஒருபுறமிருக்க காங்கிரஸைக் கலவாமலேயே ஒரு வட்டமேஜை மாநாடு இங்கிலாந்தில் கூடியது. இதன் ஒரு கூட்டத்தில் மட்டும் மகாத்மா காந்தி கலந்து கொண்டார். இந்த வட்டமேஜை மாநாட்டின் முடிவுப்படி இந்திய அரசியல் மாறுதல் சம்பந்தப்பட்ட இந்திய அரசியல் சட்டம் என்றொரு சட்டம் 1935-ம் ஆண்டு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இதன்படி இந்திய அரசாங்கம் ஒரு கூட்டாட்சியாக (Federation) இருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. காங்கிரஸ் இதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. 1935-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்கள் காங்கிரஸின் திட்டத்தை எவ்வளவு ஆதரிக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காக, காங்கிரஸ் அங்கத்தினர்கள் பொதுத் தேர்தலில் கலந்து கொண்டு பதினொன்றில் ஒன்பது மாகாணங்களில் பெருமிதமான வெற்றி கண்டார்கள்; வெற்றி பெற்ற மாகாணங்களில் மந்திரி சபைகளை அமைத்தார்கள். 1939-ம் ஆண்டு

இரண்டாம் உலகப் போர் தொடங்கியபோது, ஆங்கிலேயர் இந்தியாவைக் கேளாமலேயே அதைப் போரில் இழுத்துக் கொண்டார்கள் என்ற காரணத்தால், காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் பதவியை ராஜினுமா செய்தார்கள். நிலைமை ஆங்கிலேயருக்கு நெருக்கடியாக இருந்தது. ஒரு புறம் புதிதாகத் தொடங்கிய இரண்டாம் உலகப்போர் ஆங்கிலேயருக்கு விரோதமாகச் சென்று கொண்டிருந்தது. மற்ருெருபுறம் காங்கிரஸ் ஒத்துழையாமையும், சுபாஸ் சுந்திரபோஸ் திரட்டி வந்த இந்திய தேசீயப் படையும் ஆங்கிலேயருக்கு மிகுந்த திகிலைத் தந்தன. 1942-ல் சர். ஸ்டிராபோர்ட் கிரிப்ஸ் என்பவனை ஆங்கிலேய சர்க்கார் இந்தியாவுக்கு அனுப்பி, பல கட்சிகளின் பிரதிநிதிகளையும் கலந்து இந்திய அரசியல் திட்டத்தைப் பற்றி ஆலோசிக்க அனுப்பியது. ஆனல் உடனடியாகப் பொறுப்பாட்சி அளிக்க ஒப்புக் கொள்ளாததால் அவர் அறிக்கையைக் காங்கிரஸ் ஆதரிக்கவில்லை. காந்தியடிகள் உடனே சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினர். 1942-ம் ஆண்டு ஏழு, எட்டுத் தேதிகளில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடி, "ஆகஸ்ட் புரட்சி" என்று நாம் கூறும் சுய ஆட்சிப் புரட்சிக்கு ஏற்பாடு செய்தது. அப்பொழுது ரயில் வண்டிகள் கவிழ்க்கப்பட்டதும், இருப்புப் பாதைகள் பிடுங்கப் பட்டதும், தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டதும், அரசியலார் காரியாலயங்கள் தீக்கிரையானதும் நம்முள் பலர் அறிந்ததே. 1946-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பார்லிமெண்டு அங்கத்தினர் பதின்மர் இந்தியாவிற்கு வந்து பல தலைவர்களைக் கண்டு பேசினர். அவர்கள் திரும்பிப் போனபின் ஆங்கில மந்திரி சபையின் பிரதிநிதிகள் மூவர் இங்கு வந்தார்கள். அவர்கள் இந்தியத் தலைவரோடு கலந்தாலோசித்த பின்பு ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படி ஒரு இடைக்கால சர்க்காரை நியமித்து, இந்தியாவின் வருங்கால அரசாட்சியை நிர்ணயிக்க ஒரு அரசியல் நிர்ணயசபையை ஏற்படுத்தவும் தீர்மானித்தார்கள். இதன்படி, நம் நாடு, பாகிஸ்தானம், இந்தியா என்று

பிரிக்கப்பட்டு 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி ராஜப் பிரதிநிதி லார்டு மௌண்ட் பேட்டன் மூலம் இரண்டு நாடுகளுக்கும் சுய ஆட்சி அளிக்கப்பட்டது.

36. தமிழ் நாட்டில் சுயஆட்சி

1947-ம் ஆண்டு நம் பரத கண்டம் சுயஆட்சி அடைந்த போது தமிழ்நாடு ஆந்திர மலையாள நாடுகளுடனும் கன்னட நாட்டின் ஒரு பகுதியாகிய தென் கன்னட மாவட்டத்துடனும் இணைந்து, சென்னை இராசதானியாக இருந்தது. இப்பொழுது நாம் சுயஆட்சி பெற்று பதினேரு ஆண்டுகள் கழிந்துவிட்டன. இந்தக் காலப் பகுதியில் தமிழ் நாட்டில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. அதில் முதலாவதாக நாம் குறிப்பிடவேண்டியது தமிழ்நாடு ஆந்திர மலையாள கன்னடப் பகுதிகளின்றும் விடுபட்டு தனித்தமிழ் நாடு ஆனதேயாகும். இப்பொழுது துரைத்தனமும் குடி மக்களும் ஒருவரை ஒருவர் நன்ருகப் புரிந்து கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது. நமது சட்டசபையிலே தமிழ் களி நடனம் புரிகின்றது. பள்ளிகளிலே தமிழுக்கே முதல் இடம் கொடுக்கப் பட்டுள்ளது.

இந்தக் காலத்தில் நமது நாடு அடைந்துள்ள முன்னேற்றம் பல திறப்பட்டதாகும். குறிப்பாக, இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இவற்றில் முதல் திட்டம் முடிந்து இரண்டாம் திட்டம் இப்போது அமலில் இருக்கின்றது. ஏப்ரல் 1951 முதல் மார்ச் 1956 வரை நிறைவேறிய முதல் திட்டம், பயிர்த்தொழில் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் கீழ் பவானி அணை, திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தார் அணை, மேட்டூர் வாய்க்கால் திட்டம், காவேரி அணைத் திட்டங்கள், வைகை நீர்த் தேக்கம், அமராவதி, சாத்தனூர் நீர்த் தேக்கங்கள், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஆரணியாறு திட்டம் என்ற பல பெரிய

வேலைகள் இந்த முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் எடுக்கப் பட்டன. இவைகளில் பல முடிவடைந்து இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளித்துள்ளன.

திட்டம்	நீர்பாசன வசதி (ஏக்கர்)
கீழ்பவானி	1. 15 இலட்சம்
மணிமுத்தார்	20,000
மேட்டூர் கால்வாய்களில் ஒன்று	7,300

பொதுவில் இந்தத் திட்டங்களைக் கொண்டு 2.2 இலட்சம் ஏக்கர் நிலம் அதிகப்படியாக சாகுபடி செய்ய ஏற்பாடு ஆகியுள்ளது. இதனால் உணவுத் தானியங்கள் முன்னையை விட 1. 1 இலட்சம் டன் அதிகமாகும் என்றும் கணக்கிடப் பட்டிருக்கிறது. கீழ் பவானித் திட்டம் ஒன்றைக் கொண்டே ஏறக்குறைய 3 இலட்சம் பேல் பருத்தி கோவை மாவட்டத்தில் 1954–55 ஆண்டுகளில் உற்பத்தியாகியுள்ளது. மழை அதிகமாகப் பெய்வதற்கு உதவியாகக் காடுகளில் மிகுதியான மரங்கள் பயிரிடப்பட்டிருக்கின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 29000 ஏக்கர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. இவையன்றி மின்சார உற்பத்திப் பெருக்கம் கிராமங்களில் பயிர்த் தொழிலுக்கு மிகவும் உபயோகமாக அமைந்தது. மோயார், பாபநாசம், பைக்காரா போன்ற மின் உற்பத்தி இடங்களில் முன்னையை விட 1,11,000 கிலோ வாட் அதிக மின்சாரம் இப்பொழுது கிடைக்கின்றது.


1956-ம் ஆண்டு தொடங்கிய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், குறிப்பாக ஆலைத் தொழிலுக்கும், கைத் தொழிலுக்கும் முன்னேற்றம் அளித்துள்ளது. முன் குறித்த நான்கு மின்சாரத் திட்டங்களைத் தவிர, எட்டுப் புதுத் திட்டங்கள் இப்பொழுது அமலில் இருக்கின்றன. இவற்றில் முக்கியமானது குண்டா மின்சாரத் திட்டமாகும். இவைகளின் முடிவில் தமிழ் நாட்டில் 307 மெகாவாட்ஸ் மின்சாரம் உற்பத்தி ஆகும்; இன்னும் 2,000 கிராமங்களுக்கு

மின் வசதி அளிக்க முடியும். இதைக் கொண்டு பல கைத் தொழில்களும் குடிசைத் தொழில்களும் பெருக்கமடையும். ஒரு கோடி ரூபாய் செலவில் சென்னையிலுள்ள கிண்டி கைத் தொழில் நிலையம் (Industrial estate) இப்பொழுது கட்டப்பட்டுள்ளது. கூட்டுறவு ரீதியில் சர்க்கார், உற்பத்தித் தொழில், பஞ்சாலைத் தொழில் போன்றவைகளின் வளர்ச்சிக்கு ரூ. 150 இலட்சம் ஒதுக்கியுள்ளது. கை நெசவுத் தொழில் விருத்திக்காகக் கூட்டுறவு இயக்கம் சிறந்த தொண்டு ஆற்றி வருகின்றது. வாணிக முன்னேற்றத்திற்கு உதவியாக, 2,300 மைல் பாதைகள் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. கல்வி வசதிக்காக 500 பேர் வாழும் கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடம் திறக்கப் பட்டுள்ளது. இன்னும், மருத்துவம் பொறி இயல் முதலிய வகைகளில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.


ஆயினும், இவற்றிலும் சிறந்த பணியைத் தேசிய விஸ்தரிப்பு திட்டமும் (National Extention Service) சமூக முன்னேற்றத் திட்டமும் (Community Projects) இப்போது புரிகின்றன. இவற்றின்கீழ்த் தமிழ் நாடு 79 பாகங்களாக (Blocks) பிரிக்கப்பட்டு அவற்றில் அங்குள்ள மக்களின் உதவி கொண்டே பல நிர்மாணத் திட்டங்கள் நடந்து வருகின்றன. இவ்விதமாக ஏறக்குறைய தமிழ் நாட்டின் மக்கட் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் தமக்குத் தாமே முன்னேற்றத்தைத் தேடிக்கொள்ளும் பழக்கத்தில் வளர்ந்து வருகின்றனர்கள். இதுவே தமிழ் நாட்டில் உண்மையான சுய ஆட்சியின் தொடக்கம் என்று கூற வேண்டும்.

முற்றும்.

ஆங்கிலேயர் காலத் தமிழகம்



சென்னை இராச்சியம்
(தற்காலத் தமிழகம்)



டாக்டர் மு. ஆரோக்கியசாமி அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இந்திய வரலாறு, இந்தியத் தொல் பொருளாராய்ச்சி என்ற துறைகளின் சிறப்பு விரிவுரையாளராக இருந்து வருகிறார்கள் ; வரலாற்றுத் துறையில் சிறந்த புலமையும், ஆராய்ச்சி வன்மையும் உடையவர்கள். இவர்கள் எழுதிய "வெள்ளாற்று வெளியின் பழங்கால வரலாறு" என்ற ஆங்கில நூலைப் பாராட்டிச் சென்னைப் பல்கலைக்கழகத்தார் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கினார்கள். இவர்களின் "நாம் இருக்கும் நாடு" என்ற நூல் தமிழில் தென்னாட்டு வரலாறுபற்றி ஆராய்ந்து எழுதப்பட்ட சிறந்த நூலாகும்.

"தமிழ்நாட்டு வரலாறு" ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல். பழங்காலந்தொட்டு இன்றுவரை தமிழகத்தின் வரலாறு இதில் சுருக்கமாகவும், சுவையாகவும் கூறப்படுகிறது. வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்திலிருந்து தொடங்கி விடுதலைபெற்ற தமிழகம் வரையில் தமிழக வரலாறு முழுவதையும் கூறும் தமிழ் நூல் ஒன்று இதுவரை வெளிவந்ததில்லை. இது ஒரு புது முயற்சி.

தென் மொழிகள் புத்தக டிரஸ்டு
ஆதரவில் பதிப்பிக்கப் பெற்றது.